விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005


இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 கார்த்திகை 16 சனிக்கிழமை (02.12.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 348

## இனப்பிரச்சினைக்கான அடிப்படைக் காரணம்

# தமிழருக்கு எதிராக சட்டங்கள் வந்தமை

## முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்) இனப்பிரச்சினைக்கான அடிப்படைக் காரணம் சிங்கள அரசியல்வாதிகள் அதிகாரங்களைத் தம்வசப்படுத்தி தமிழ் இனத்துக்கு எதிராக சட்டங்களை கொண்டு வந்தமை மற்றும் வடக்கு கிழக்கில் பெரும்பான்மையினமாக காணப்பட்ட தமிழ் மக்களை முழு நாட்டிலும் சிறுபான்மை இனமாக மாற்றியமையே காரணம் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் குற்றஞ்சாட்டியுள்ளார். (விரிவான செய்தி 3-ம் பக்கத்தில்...)

### தெற்கில் சீரற்ற காலநிலை
## உயிரிழந்தோர் 11ஆக உயர்வு 55 ஆயிரம் பேர் பாதிப்பு

(கொழும்பு)

தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக 55 ஆயிரத்து 855 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

14 ஆயிரத்து 617 குடும்பங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாக 23☛

## தீக்காயங்களுக்குள்ளான குடும்பஸ்தர் உயிரிழப்பு

(கரணவாய்)

தீக்காயங்களுக்குள்ளான குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேற்படி சம்பவமானது நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் உப்புக்கிணற்றடி அம்மன் வீதி நவிண்டில் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இதில் நல்லதம்பி அருமைத்துரை (வயது67) என்ற 23☛

## பேருந்தை திருடிச் சென்றதால் யாழ் நகர் பகுதியில் பரபரப்பு


(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரை அண்டிய பணணைப் பகுதியில் பேருந்தை திருடி சென்ற நபரால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

யாழ் - மன்னாருக்கு 23☛

### "இது சிங்களவர்களுக்கான ஒரே நாடு"
## யாழுக்கு வந்த பேருந்தில் பொறிக்கப்பட்ட வாசகம்!




23☛

## மருத்துவ சேவைக்காக அரசியல் கைதிகள் யாழ் சிறைக்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் சிறையில் உணணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அரசியல் கைதிகளான தர்சன், கணேசன் மற்றும் திருவருள் ஆகியோர் மருத்துவ சேவையை பெறுவதற்காக யாழ். சிறைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் சிவன் அறக்கட்டளை அமைப்பின் 23☛

### உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்
## பெப்ரவரி மாத முதல் வாரத்தில் தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடத்தப்படும் காலப் பகுதியை தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதற்கமைய அடுத்த ஆண்டு பெப்ரவரி மாத முதல் வாரத்தில் தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்திருப்பதாக அந்த ஆணைக்குழுவின் தலைவரான மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

வேட்புமனு கையேற்புக்கள் இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்டாலும் அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தலை ஒரே தினத்தில் நடத்த எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை 93 சபைகளுக்கான தேர்தலை நடத்துவது பற்றிய அறிவிப்பு ஏற்கெனவே 24☛

## யாழில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவம் 19 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் அண்மைக் காலமாக இடம்பெற்று வந்த வாள் வெட்டு சம்பவத்தில் தொடர்புடையதாக சென்ற மாதம் 19 சந்தேக நபர்கள் பொலிஸாரால் ஸ்கது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் பல் 23☛

## வவு.வில் வன்பொருள் அங்காடி தீயில் எரிந்து முற்றாக நாசம்
### தீயணைப்புப் படையினர் அசமந்தம் என குற்றச்சாட்டு

(குருமன்காடு)

வவுனியா - மன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ள வன்பொருள அங்காடி (ஹாட்வெயார் கடை) ஒன்று நேற்று மாலை திடீரென தீப்பற்றி எரிந்தது. இதனால் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான ஹாட்வெயார பொருட்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

குறித்த இடத்திற்கு தீயணைப்பு பிரிவின் வாகனம் ஒன்று வருகை தந்த போதும் குறித்த 23☛

### அரசிதழில் ஏற்பட்ட அச்சுப்பிழையால்
## 40 உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடத்த முடியாது!

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைகள் தொடர்பான அரசிதழ் அறிவிப்புக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீளப் பெறப்பட்டதையடுத்து, மேலும 301 உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடத்தக் கூடிய சூழல் எழுந்துள்ளது.

எனினும். அரசிதழில் ஏற்பட்ட அச்சுப் பிழைகளால் 40 உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் அறிவிப்பை வெளியிட முடியாதுள்ளது.

உள்ளூராட்சி சபைகளின் எல்லைய நிர்ணயம் தொடர்பாக கடந்த பெப்ரவரி 17ஆம் நாள் வெளியிடப்பட்ட அரசிதழுக்கு எதிராக 23☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்

## அப்பாசாமி செல்லம்மா



ஆவரங்காலை பிறப்பிடமாகவும் புத்தூரை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாசாமி செல்லம்மா 29.11.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சின்னத்தங்கம் தம்பதிகளின் ஏக புதல்வியும், காலஞ்சென்ற அப்பாசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அருணாசலம்-வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், நாகேஸ்வரன், ஞானேஸ்வரன் (துர்க்கா மோட்டோர்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பூரனேஸ்வரி, சற்குணதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், சுதர்சன்-சுகன்யா, வாஹினி-வேல்மகிபன், அர்சிகா-நிமல் (சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை-வவுனியா வடக்கு), அர்யுன் (துர்க்கா மோட்டோர்ஸ்), கீர்த்தனன் ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும், திசான், அஸ்வின், நவீன், சுபாங்கி, சுபானு ஆகியோரின் அன்பு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.12.2017) சனிக்கிழமை இல.50, கதிரமலை வீதி, சுன்னாகம் என்னும் முகவரியில் மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று கொத்தியாலடி இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-அ.நாகேஸ்வரன்-மகன்
அ.ஞானேஸ்வரன்-மகன்
(துர்க்கா மோட்டோர்ஸ் ஞானம்)

(1536)
இல.50, கதிரமலை வீதி,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

# ஆவா குழுவின் தலைவர் சன்னாவை சுவிஸிலிருந்து யாழிற்கு கொண்டு வருவோம்

## யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டு வன்முறைகளை நடத்தி மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தும் ஆவா குழுவின் தலைவர் சன்னாவை (பிரசன்னா) இன்டர்போலின் உதவியுடன் கைது செய்து சுவிஸிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவருவோம் இவ்வாறு கூளுரைத்தார் யாழ்ப்பாண தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஹெமவிதாரன.

யாழ்ப்பாணத்தில் வன்முறையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 6 பேரால் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் மீட்கப்பட்ட வாள்களை ஊடகங்களுக்கு நேற்றுக் காண்பிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டு வன்முறைகளை அரங்கேற்றி மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் ஆவா குழு செயற்பட்டு வருகிறது. தம்மை தாதா பாணியில் காண்பிப்பதே அந்த இளைஞர் குழுவின் நோக்கமாகும்.

இவர்களை வழிநடத்தும் தலைவர் சன்னா என அழைக்கப்படும் பிரசன்னா சுவிஸ் நாட்டுக்குத் தப்பித்து வாழ்ந்துவருகிறார். அவர் தொடர்பான முக்கிய தகவல்கள் கிடைத்துள்ளன. அவரின் செயற்பாடுகள் தொடர்பில் கண்காணித்து வருகின்றோம்..

நீதிமன்றின் ஆணையைப் பெற்று சர்வதேசப் பொலிஸான இன்ரப்போலின் உதவியுடன் சன்னாவைக் கைது செய்து சுவிஸிலிருந்து அழைத்துவருவோம் என்றார். (ம)

# ஆவா குழுவை சேர்ந்த மேலும் மூவருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வாள்வெட்டு வன்முறைகளுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் வவுனியா ஹோட்டலில் தங்கியிருந்த போது கைது செய்யப்பட்ட மூன்று இளைஞர்களையும் வரும் டிசெம்பர் 14ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

ஆவா குழுவைச் சேர்ந்தவர்கள் என்ற குற்றச்சாட்டில் கொழும்பில் கைது செய்யப்பட்ட இக்ரம் உள்ளிட்ட மூவரும் வழங்கிய தகவலின் அடிப்படையில் வவுனியா ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த மூன்று இளைஞர்கள் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கடந்த புதன்கிழமை இரவு கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் மூவரும் பொலிஸ் தடுப்பில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் சந்தேகநபர்கள் மூவரும் யாழ்ப்பாணம் நீதிவானின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று பிற்பகல் முற்படுத்தப்பட்டனர்.

இவர்களுடன் தொடர்புடைய மேலும் சிலரைக் கைது செய்யவேண்டி உள்ளதால் மூவரையும் விளக்கமறியலில்வைக்குமாறு நீதி வானிடம் விண்ணப்பம் செய்தனர். வழக்கை ஆராய்ந்த நீதிவான், சந்தேகநபர்கள் மூவரையும் விளக்கமறியலில் வைக்க கட்டளையிட்டார். (ம)


## வேலையாட்கள் தேவை

புத்தகக் கடை ஒன்றிற்கு பெண் வேலையாட்கள் தேவை. நல்லூர் பிரதேசத்தில் உட்பட்ட பகுதியில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
0778955378,0767964450

(1535)


# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



## அமரர் கோவிந்தபிள்ளை தனலட்சுமி

### (நயினாதீவு -05)

கடந்த 02.11.2017 வியாழக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் அன்னாரின் கொக்குவில் இல்லத்தில் இன்று (02.12.2017) சனிக்கிழமை நடைபெறும். முற்பகல் 10 மணிக்கு ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


அன்னாரின் இறுதிக் கிரியையின் போது மலர் வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், உள்நாடு வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் அனுதாபங்கள் செலுத்தியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் சகல வழிகளிலும் குடும்பத்தினர்க்கு உதவிகள் ஒத்தாசைகள் புரிந்தவர்களுக்கும் எமது குடும்பத்தினரின் சார்பில் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். தயவு செய்து இவ் அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

(1538)

பிரம்படி லேன், கொக்குவில்.
0766971623

-குடும்பத்தினர்

# சுயாட்சி, சமஷ்டி பாதுகாப்புக்கேடயங்கள் வடக்கு - கிழக்கு இணைப்பில்லா தீர்வை நாம் நாடினால் இனம் அழிய அடிகோலும்



## வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் திட்டவட்டம்

(யாழ்ப்பாணம்)

**வடக்கு-கிழக்கு இணைப்பில்லா இனப்பிரச்சினைத் தீர்வொன்றை நாம் நாடினால் எமது இனம் அழிய அது அடி கோலும் எனத் தெரிவித்த வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், வடக்கு-கிழக்கு இணைப்பு, சுயாட்சி, சமஷ்டி போன்ற எமது பாதுகாப்புக் கேடயங்களை நாம் கைவிட்டால் எம்மை அடிபணிய வைப்பதும் அடியற்றுப் போக வைப்பதும் இலகுவாகிவிடும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.**

வடக்கு-கிழக்கை இணைக்க வேண்டும் என்ற உங்கள் கோரிக்கை சிங்கள- முஸ்லிம் தலைவர்களுக்கு எரிச்சலை மூட்டுவதாகக் கூறப்படுகிறது. அதை விடுத்து இனப்பிரச்சினைக்கான தீர்வினைப் பெற முடியுமா? என்ற கேள்விக்கு பதிலளிக்கும்போதே முதல்வர் விக்னேஸ்வரன் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

'இனப்பிரச்சினை என்பது என்ன, அதற்கு எதற்காக ஒரு தீர்வைத் தேடுகின்றோம் என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும். இனப்பிரச்சினையின் அடிப்படைக் காரணம் சிங்கள அரசியல்வாதிகள் அதிகாரங்களைத் தம்வசப் படுத்தி மற்றைய இனங்களுக்கு எதிரான சட்டங்களைக் கொண்டு வந்தமையே. சிங்கள மொழிக்கும் பௌத்தத்திற்கும் முன்னுரிமை கொடுக்க நினைத்ததால் சிங்கள பௌத்தர்கள் அல்லாதவர்கள் பாதிப்புக்கு ஆளானார்கள். இப்பொழுதும் அதே மனோநிலையில்தான் அரசியல் நகர்வுகள் இடம்பெற்று வருகின்றன. பௌத்தத்திற்கு முதலிடம், சிங்களமக்களுக்குப்பெரும்பான்மை அதிகாரத்தை அளிக்கும் ஒற்றையாட்சி என்பனவே அவர்களின் கோரிக்கை. இந்தப் பின்னணியில்தான் வடக்கு- கிழக்கு இணைப்பு நோக்கப்பட வேண்டும்.

இன்றைய வடக்கு- கிழக்கின் நிலையை நோக்குங்கள். எமது மக்கள் பத்து இலட்சம் அளவில் வெளிநாடு சென்று விட்டார்கள். அரசாங்கம் வெளிமாகாணங்களில் இருந்து தமிழ்ப் பேசும் மக்கள் அல்லாதவர்களை வடக்கு-கிழக்கில் குடியேற்றி வருகின்றார்கள். முன்னர் காலத்திற்குக் காலம் மீன் பிடிக்க வந்த தெற்கத்தேய மீனவர்கள் இப்பொழுது நிரந்தர வசிப்பிடங்களை அமைத்து தமிழ் பேசும் பாரம்பரிய மீனவர்களின் வாழ்வாதாரங்களை பாதிப்படையச் செய்துள்ளார்கள். அவர்கள் தமது புலம் விட்டுச் செல்ல வழிவகுத்துள்ளார்கள்.

இராணுவம் ஒன்றரை இலட்சம் பேர் 65000 ஏக்கர் காணிகளில் வடமாகாணத்தில் நிலை கொண்டுள்ளார்கள். 13வது திருத்தச் சட்டத்தின் கீழ் எமக்குப் போதுமான அதிகாரங்கள் இல்லை. ஆளுநர் கூடிய அதிகாரங்களை வைத்துக் கொண்டுள்ளார். தெற்கில் இருந்து முதலீட்டாளர்கள், வணிகர், வாணிபர் என்று பலரும் வந்து எமது வளங்களைச் சூறையாடிச் செல்கின்றார்கள். உணவகங்கள் உள்ளிட்ட வியாபார ஸ்தலங்கள் பலவற்றை இராணுவத்தினரும் கடற்படையினரும் நடத்தி வருகின்றனர். அவர்களைக் கட்டுப்படுத்த எமக்கு அதிகாரம் இல்லை.

போதைவஸ்துப் பாவனை எம் இளைஞர்களிடையே பரவி வருகின்றது. அதனால் வன்முறையும் பரவி வருகின்றது. பாலியல் குற்றங்கள் மலிந்து வருகின்றன. கட்டுப்படுத்த எமக்கு அதிகாரம் இல்லை. வடகிழக்கில் தற்போதைய நிலை கவலைக்கிடமாக இருக்கின்றது என்பதை நான் கூறி வாசகர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை.

எமது தொகை குறைகின்றது. மற்றவர்களின் தொகை கூடுகின்றது. தமிழ் மக்களுடைய சனப்பெருக்க வீதமே சகல இனங்களுக்குள்ளும் ஆகக் குறைந்தது என்று கூறப்படுகின்றது. ஆகவே தமிழ் மக்களின் தொகை படிப்படியாக வீழ்ச்சி அடையத் தொடங்கியுள்ளது. இந்நிலையில் தமிழ் பேசும் மக்கள் வடக்கு-கிழக்கில் சேர்ந்து வாழ வேண்டுமா? பிரிந்து வாழ வேண்டுமா? பிரிந்து வாழ்ந்தால் எமது நிலை சீர்கெட்டுவிடும். பறங்கியர்களுக்கு இந்நாட்டில் ஏற்பட்ட கதியே இன்னும் 25 வருடங்களில் எமக்கும் ஏற்பட்டு விடும். எம்மவர் வெளியேறி விடுவார்கள். மிகுதி இருப்பவர்களைப் பெரும்பான்மைச் சமூகம் உட்கிரகித்துக் கொள்ளும். ஆகவே வடக்கு-கிழக்கு இணைப்பு ஒன்றே எமக்குப் பலத்தை அளிக்கும். எமது மக்கள் தொகை அருகி வருவதைத் தடுக்கும்.

ஆனால் வடக்கு- கிழக்கு இணைப்பு தமிழ் பேசும் முஸ்லிம் மக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் உருவாக முடியாது. தமிழ் பேசும் வடக்கு-கிழக்கு அலகில் முஸ்லிம் மக்களுக்கு சமச்சீரில்லாத (Asymmetrical) தனி அலகை உருவாக்குவதன் மூலமே வடக்கு-கிழக்கு இணைப்பு இனிச் சாத்திய மாகும். இன்றைய நிலையில் வடக்கு-கிழக்கு இணைவு அவசியம் என்பது எம் மக்கள் யாவருக்கும் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

வடக்கு-கிழக்கு இணைப்பு இல்லாத தீர்வு தமிழ் பேசும் மக்களைப் பாதிக்கும். பௌத்த சிங்கள மக்களின் கையை ஓங்க வைக்கும். இதனால் தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையும் சீர் குலைந்து போகும். எமது அதிகாரங்கள் பாதிக்கப்பட்ட நிலையிலேயே நாம் இன்று உள்ளோம். வடக்கு-கிழக்கு இணைப்பு, சுயாட்சி, சமஷ்டி போன்ற கருத்துக்கள் வெறும் கருத்துக்கள் அன்று. எமது பாதுகாப்புக்கான கேடயங்கள். அவற்றை நாம் கைவிட்டால் எம்மை அடிபணிய வைப்பதும் அடியற்றுப் போக வைப்பதும் இலகுவாகிவிடும். இதனை எம் மக்கள் வரவேற்கின்றார்களா? எமது மக்கள் தனிநாடு கோருவதையும் அதற்காக உணர்ச்சி மேலீட்டில் உரக்கக் கத்துவதையும் இனி நிறுத்த வேண்டும். இவ்வாறான கருத்துக்கள் அரசாங்கத்தைக் கெட்டியடையச் செய்யுமே தவிர எம்முடன் சுமுகமாக நடந்து கொள்ள உதவாது. வடக்கு-கிழக்கு இணைப்பு என்பது தனி நாடொன்றை உருவாக்க நாம் போடும் சதி என்றே அரசாங்கம் பிறநாட்டு இராஜதந்திரிகளுக்குக் கூறி வருகின்றது.

அதனால் சர்வதேச கருத்துக்கள் வடக்கு- கிழக்கு இணைப்புக்கு எதிராகவே இருக்கின்றது. முஸ்லிம் அரசியல் தலைவர்களின் எதிர்ப்பும் அரசாங்கத்திற்குச் சார்பாகவே அமைந்துவிட்டுள்ளது. தனிநாடு என்பது பிற வல்லரசுகளின் தயவுடனேயே இயற்றப்பட முடியுமே தவிர நாம் கேட்டுப் பெறக்கூடியதொன்றல்ல. அடித்துப் பறிக்க முடியும் என்ற கருத்தும் அண்மையில் மௌனிக்கப்பட்டு விட்டது. நாம் தனித்து வாழத் தலைப்பட்டால் தலை நாடுகளின் சார்பாளர்களாகவே நாங்கள் மாற நேரிடும் என்றும் மாறாத பகைமையை எமது சிங்கள சகோதரர்களுடன் நாம் பாராட்ட வேண்டிய ஒருநிலை ஏற்படும். உண்மையில் ஆயுதங்கள் மௌனித்ததும் தனி நாட்டுக்கான கோரிக்கையும் அவற்றுடன் மௌனிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் அந்த எண்ணத்தைச் சிலர் இன்னமும் தம் உள்ளங்களில் சுமந்து கொண்டிருக்கின்றார்கள். இதனால் இந்நாட்டு மக்களிடையே சுமுக உறவு ஏற்பட முடியாது என்பதை எம்மவர் ஆய்ந்துணர்வார்களாக! எமது மக்கள் வெளிநாடுகளில் இருந்து கொண்டு இங்கு எமது நிலைமையறியாமல் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். இங்கு இன சௌஜன்யம் வளர இடம் கொடுக்க வேண்டும்.

முஸ்லிம் தலைவர்கள் வடக்கு-கிழக்குக்கு வெளியில் இருந்து வரும் போது அவர்களின் தேர்தல் தொகுதியில் வடக்கு-கிழக்கு இணைப்பு எடுபடாது என்ற காரணத்தினால் அவர்கள் வடக்கு-கிழக்கு இணைப்பை எதிர்க்கவே செய்வார்கள். முஸ்லிம் தனி அலகொன்றை உறுதி செய்த பின் வடக்கு- கிழக்கு இணைப்பு பற்றிய கருத்தறியும் பொறிமுறையொன்று நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்புக்கும் தனித்துவத்தைப் பேணுவதற்கும் நாம் எடுக்கும் நடவடிக்கைகளில் தெற்கில் உள்ள சிங்கள மக்களை உள்ளடக்க வேண்டும் என்று அரசாங்கத்தில் உள்ள சிலர் எதிர்பார்ப்பது நியாயமான ஒரு கோரிக்கை அன்று. எமது வருங்காலத்தை நாம் தீர்மானிக்க எமக்கு உரித்து அளிக்கப்பட வேண்டும்.

ஆகவே சிலருக்கு எரிச்சலை மூட்டுகின்றதோ இல்லையோ எமது பாதுகாப்புக்கும் நாம் தொடர்ந்து இங்கு வாழ்வதற்கும் ஏற்புடைத்தான ஒரு மார்க்கத்தை நாம் வலியுறுத்துவது எந்தவிதத்திலும் பிழையாகாது. இவ்வாறு வடக்கு- கிழக்கு இணைப்பில்லா இனப்பிரச்சினைத் தீர்வொன்றை நாடினால் எமது இனம் அழிய அது அடிகோலும் என்பதே உண்மை என மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

# யாழில் "ஹெரோயின் டொபி" விற்பனை

## நாடாளுமன்றில் ஐ.தே.க. எம்.பி. புத்திக தகவல்

(கொழும்பு)

மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளதெனக் குறிப்பிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண, யாழ்ப்பாணத்தில் "ஹெரோயின் டொபி" விற்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற வாய்மூலவிடைக்கான வினாக்கள் நேரத்தின் போது புத்திக பத்திரண எம்.பி. கல்வியமைச்சரிடம் கேள்விகளை கேட்டிருந்தார். அக்கேள்விகளுக்கு கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அளித்த பதிலையடுத்தே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னதாகக் கேள்விகளை கேட்டிருந்த பத்திரண எம்.பி. பிரபல பாடசாலைகளுக்கு இடையில் நடைபெறும் வருடாந்த கிரிக்கெட் போட்டிகளுக்கு பியர் கம்பனிகள் அனுசரணை வழங்குகின்றனவா என்பதையும், இதன் மூலம் பாடசாலை மாணவர்கள் போதைப்பொருள் பாவனைக்குத் தூண்டப்படுகின்றார்கள் என்பதையும் ஏற்றுக் கொள்வாரா? உள்ளிட்ட கேள்விகளைக் கேட்டிருந்தார்.

அக்கேள்விகளுக்குப் பதிலளித்த கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், அனுசரணை வழங்குவதற்கு, அவ்வாறான நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை என்பதனால், ஏனைய கேள்விகள் ஏற்புடையதல்ல என்றார்.

குறுக்கிட்ட புத்திக பத்திரண எம்.பி. பாடசாலை மற்றும் பாடசாலை வளாகத்துக்குள் இல்லாவிட்டாலும், போட்டிகள் நடைபெறுகின்ற பாடசாலைகளுடன் இணைந்த [illegible]னங்களுக்கு, மிகவும் அண்மையில் இவ்வாறு பியர் விற்பனை செய்யப்படுகின்றது.

பியரில் ஆரம்பிப்பதுதான், இறுதியில் செறிவு கூடிய மதுபானத்தை பருகும் வரை செல்லும். ஆகையால், பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படும் இவ்வாறான நடவடிக்கைகளை நிறுத்தவேண்டும்.

"இதேவேளை யாழ்ப்பாணத்தில், ஹெரோயின் கலந்த 50 டொபிகளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இதுவும் மாணவர்களை இலக்குவைத்தே முன்னெடுக்கப்படுகின்றது" என்று குறிப்பிட்டார்.

இவற்றுக்குப் பதிலளித்த அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து முன்னெடுக்கப்படும் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பில், கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு, அவற்றை முற்றாகத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (இ-7)

## அரசியல் ரீதியிலான பிரச்சினைகள் உண்டு

# இரணைமடு குடிநீர் விநியோகம் குறித்து அமைச்சர் ஹக்கீம் சபையில் விளக்கம்

(கொழும்பு)



யாழ்.மக்களின் குடிநீர் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தனவின் அக்கறையைப் பாராட்டுகின்றேன் என்று நகர அபிவிருத்தி நீர்வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்ற அமர்வின் போது பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா முன்வைத்திருந்த கேள்வி ஒன்றுக்கு அமைச்சர் ஹக்கீம் பதிலளித்தார். இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன குறுக்கீடு செய்தார். பல வருடங்களாக யாழ்.மக்கள் குடிநீர் பிரச்சினையால் அவதிப்படுகின்றனர். இரணைமடு ஊடாக யாழ்ப்பாணத்திற்கான நீர் விநியோக முயற்சி தடைப்பட்டுள்ளது. இதற்கு பதிலாக வேறு திட்டங்களினூடாக இந்த மக்களுக்கு நீர் விநியோகிக்கப்படுமா? எனக் கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் ஹக்கீம் கிளிநொச்சி விவசாயிகள் தொடர்பிலும் பிரச்சினைகள் காணப்படுகின்றன. இரணைமடு நீர்த் தேக்கத்தின் கொள்ளளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. இங்கு அரசியல் ரீதியான பிரச்சினைகள் உண்டு. இதனால் மாற்று வழி தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (இ-7)

# வெலிங்டன் டெஸ்ட்

# நீல் வோக்னரின் சரமாரியான ஷோர்ட் பிட்ச் பந்துகளால் நிலைகுலைந்த மே.தீவுகள் 134 ஓட்டங்களுக்கு சுருண்டது



நீல் வோக்னரின் அபாரமான இடது கை வேகப்பந்து வீச்சுக்கு வெலிங்டன் ஆடுகளம் மயங்க, மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் இன்னிங்ஸில் 134 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தது.

59/0 என்ற பலமான நிலையிலிருந்து நீல் வோக்னரின் அபாரமான இடது கை வேகப்பந்து வீச்சுக்கு முகம்கொடுக்க முடியாமல் அடுத்த 75 ஓட்டங்களுக்கு 10 விக்கெட்டுகளையும் இழந்து 134 ஓட்டங்களுக்குச் சுருண்டது மேற்கிந்தியத் தீவுகள்.

நீல் வோக்னர் 14.4 ஓவர்களில் 2 மெய்டன்களுடன் 39 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களைச் சாய்த்து டெஸ்ட் போட்டிகளில் தனது மிகச்சிறந்த பந்துவீச்சு பெறுதியை பதிவு செய்தார்.

மேற்கிந்தியத் தீவுகளின் துடுப்பாட்டத்தில் பவல் மாத்திரமே அதிகபட்சமாக 42 ஓட்டங்களை எடுத்தார்.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய நியூஸிலாந்து அணி ஆட்ட நேர நிறைவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 85 ஓட்டங்களை எடுத்துள்ளது.

ரவல் 29, ரெய்லர் 12 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர். லெதம் (37), அணித் தலைவர் வில்லியம்ஸன் (1) ஆகியோர் முறையே ஹோல்டர் மற்றும் ரோச் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர்.

மிக அருமையானஸ்விங் பந்துவீச்சாளர்களைக் கொண்ட நியூஸிலாந்து அணி நாணயச்சுழற்சியில் வென்று முதலில் மேற்கிந்தியத் தீவுகளை துடுப்பாட்டம் செய்ய அழைத்தது.

இதன்படி தொடக்க வீரர்களாக களமிறங்கிய பிராத்வெய்ட், பவல் மிக அருமையான தடுப்பாட்ட உத்தியைக் கடைபிடித்து போல்ட், ஹென்றி ஆகியோரை சிறப்பாகக் கையாண்டு 59 ஓட்டங்களை முதல் விக்கெட்டுக்காகச் சேர்த்தனர்.

இதன்பின்னர் நீல் வோக்னர் சரமாரியாக ஷோர்ட் பிட்ச் பந்துகளை வீசத் தொடங்கினார். ஷோர்ட் லெக், லைக கலியுடன் ஃபைன் லெக், ஸ்கொயர் லெக் களத்தடுப்பாளர்களை சற்றே டீப்பில் நகர்த்தினார் அணித் தலைவர் கேன் வில்லியம்ஸன்.

பிராத்வெய்ட் சவாலைச் சந்தித்தார். ஒரு ரொப் எட்ஜ சிக்சும் பறந்தது. வோக்னரோ விடாமல் ரவுண்ட் த விக்கெட்டில் வந்து சரமாரியாக விலா எலும்புக்கு பவுன்சர்களை வீசித்தள்ளினார். ஒன்றுமே செய்ய முடியாத நிலையில் ஒரு பந்தை தடுத்தாடினார் பிராத்வெய்ட். ஷோர்ட் லெக்கில் அது பிடியானது.

உணவு இடைவேளைக்கு முன்பாக டிரெண்ட் போல்ட்டும் ஒரு ஷோர்ட் பிட்ச் பந்தை வீச அது அவ்வளவாக எழும்பவில்லை, இதனை ஆடாமல் விட முடிவெடுத்தார் பவல். ஆனால் பந்து கிளவ்வில் பட்டு ஸ்லிப்பில் பிடியானது.

ஷிம்ரன் ஹெட்மையர் 3 அழகான பவுண்டரிகளை அடித்து 13 ஓட்டங்கள் எடுத்த நிலையில் வோக்னரின் ஷோர்ட் பிட்ச் பந்திலிருந்து விலக முடியாமல் 2ஆவது ஸ்லிப்பில் பிடிகொடுத்தார். உணவு இடைவேளையின் போது மேற்கிந்தியத் தீவுகள் 79/3 என்று இருந்தது.

உணவு இடைவேளைக்குப் பிறகு மேற்கிந்தியத் தீவுகளின் புதிய சுவர் ஷாய் ஹோப், வோக்னரின் லெக் திசை ஷோர்ட் பிட்ச் பந்தை புல் ஆடும் முயற்சியில் கிளவ்வில் வாங்கி விக்கெட் காப்பாளரிடம் லெக் திசையில் பிடி கொடுத்து வெளியேறினார்.

இந்த ஷோர்ட் பிட்ச் சரமாரி தாக்குதலை எதிர்கொள்ள புதிய வீரர் சுனில் அம்பிரிஸ் கிரீசிற்குள் நின்றார், பந்தையும் பைன் லெக் திசையில் அடித்தார், ஆனால் பின்னங்கால் ஸ்ரம்பைத் தொந்தரவு செய்ய ஹிட் விக்கெட் ஆனார், வோக்னர் மீண்டும் அசத்தல்.


எப்படியாவது இந்த சரமாரி ஷோர்ட் பிட்ச் பந்துகளை எதிர்கொள்ள வேண்டும் என்ற கட்டாயத்தில் இருந்த ரொஸ்டன் சேஸ், லெக் திசையில் சற்றே ஒதுங்கி நின்று பார்த்தார், ஆனால் முடியவில்லை. லெக் திசை பந்து ஒன்றை லெக் கலியில் பிடிகொடுத்து வெளியேறினார். ஷோர்ட் பிட்ச் அச்சுறுத்தலில் இறங்கிய அணித் தலைவர் ஜேசன் ஹோல்டருக்கு ஒரு யோர்க்கரை வீசினார் வோக்னர். வேறுவழியில்லை போல்ட் ஆகி வெளியேறினார் ஹோல்டர். 59/0 பிறகு 75/1 என்ற நிலையிலிருந்து 105/9 என்று சரிந்தது மேற்கிந்தியத் தீவுகள்.

கடைசியில் ஷனான் கேப்ரியல், கிமார் ரோச் இணைந்து 25 ஓட்டங்களைச் சேர்க்க, மேற்கிந்தியத் தீவுகள் 134 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

ஆட்ட முடிவில் நியூஸிலாந்து தன் முதல் இன்னிங்ஸில் 2 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 85 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

போட்டியின் 2 ஆம் நாளாட்டம் இன்றாகும். இப்போட்டி இலங்கை நேரப்படி அதிகாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

# டில்லி டெஸ்ட் இன்று ஆரம்பம் சாதனை துடிப்பில் இந்தியா



டினேஸ் சண்டிமல் டெஸ்ட் தொடர் கைநழுவுமா?

இந்தியா-இலங்கை அணிகள் மோதும் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் இன்று டில்லியில் ஆரம்பமாகிறது.

இதில் இந்தியா வெல்லும் பட்சத்தில் தொடர்ச்சியாக 9ஆவது தொடரை வென்று சாதனை படைக்கலாம்.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி, அங்கு மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் இரு டெஸ்ட் முடிவில் இந்திய அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் இன்று டில்லியில் ஆரம்பமாகிறது.

### ஆரம்பம் நம்பிக்கை

கொல்கத்தாவில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் ஏமாற்றிய பிறகு, தொடக்க வீரர்கள் தவான், லோகேஷ் ராகுல் (கடைசி 11 இன்னிங்ஸில், 9 அரைசதம்) சுதாரித்துக் கொண்டனர். அடுத்த டெஸ்டில் (நாக்பூர்) தவான் இல்லாத நிலையில், முரளி விஜய் (128 ஓட்.) சதம் அடித்து நம்பிக்கை கொடுத்தார். உள்ளூர் நாயகன் தவான் அணிக்கு திரும்பியுள்ளார். இதனால் மூன்று பேரில் யாருக்கு இடம் கிடைக்கும் என்பது இன்று தான் தெரியும். ஒருவேளை 'நடுத்தரவரிசையில்' ஏமாற்றும் ரகானேயை நீக்கிவிட்டு, இந்த மூவருக்கும் வாய்ப்பு கொடுத்தாலும் ஆச்சரியம் இல்லை.

### சொந்த மண்

மற்றபடி சதம் அடித்த புஜாரா, ரோகித் சர்மாவுடன் சேர்ந்து அசத்தலாம். அணித தலைவர் ஹோலி தனது சொந்த ஊரான டில்லியில் களமிறங்குகிறார். கடந்த போட்டியில் இரட்டை சதம் விளாசிய இவர், உள்ளூரில் வெற்றிக் கோட்டை கட்டுவது நிச்சயம்.

பந்துவீச்சில் மீண்டும் ஜொலிக்கத் தொடங்கியுள்ள உள்ளூர் 'ஹீரோ' இஷாந்த் சர்மாவின் வேகத்துடன், 'சுழல்' நாயகன் அஷ்வின், ஜடேஜா இணைய காத்திருக்கின்றனர். இங்கு விளையாடிய 3 டெஸ்டில் அஷ்வின் 23, ஜடேஜா 14 (2 டெஸ்ட்) விக்கெட் வீழ்த்தியிருப்பது கூடுதல பலம். உமேஷ்யாதவ் இழந்த தனது 'போர்மை' மீட்பார் என நம்பலாம்.

### இலங்கை எப்படி

இலங்கை அணி முதல் டெஸ்டில் மட்டும் சற்று சவால் கொடுத்தது. இதன் பின் அவ்வளவுதான், வழக்கம் போல சொதப்பி வருகிறது. இந்திய அணிக்கு எதிராக கடைசியாக பங்கேற்ற 11 போட்டிகளில் (5 டெஸ்ட், 3 ஒருநாள், 3 'ரி20') 10இல் தோற்றுள்ளது.

இதனால், இலங்கை வீரர்கள் தன்னம்பிக்கை இழந்து காணப்படுகின்றனர். தவிர, 'சீனியர்' ஹெரத்தும் விலகிவிட்டார். இதனால், துடுப்பாட்டத்தில் சமரவிக்ரம, தனஞ்செய, மத்யூஸ், அணித் தலைவர் சண்டிமல் கட்டாயம் ஓட்டங்கள் சேர்த்தே ஆக வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. பந்துவீச்சில் லக்மல், ஷானக, கமகே அடங்கிய 'வேகக்' கூட்டணி, கடந்த முறை அணியை கைவிட்டது.

### காத்திருக்கும் சாதனை

இந்திய அணி டில்லி டெஸ்டில் சாதித்து, 2-0 என தொடரை கைப்பற்றும் என நம்பப்படுகிறது. இது நடக்கும் பட்சத்தில், டெஸ்ட் அரங்கில் தொடர்ந்து 9 தொடர்களில் வென்ற அவுஸ்திரேலியா, இங்கிலாந்தின் சாதனையை சமன் செய்து புது வரலாறு படைக்கலாம்.

### ஆடுகளம் சாதகமா

டில்லி பெரோ ஷா கொட்லா ஆடுகளம், வழக்கமாக சுழலுக்கு சாதகமாக இருக்கும். இங்குதான் 'சுழல்' நாயகன் கும்ளே, பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் (1999), இரண்டாவது இன்னிங்ஸில் 10 விக்கெட்டுகள் சாய்த்து சாதனை படைத்தார்.

கடைசி இரு டெஸ்டில் கூட, 'வேகங்களை' (20 விக்.,) விட, சுழலுக்குத் தான் அதிக விக்கெட்டுகள் (49) சரிந்தன. இம்முறை, தென்னாபிரிக்க தொடரை கணக்கில் கொண்டு வேகத்துக்கு கைகொடுக்குமாறு ஆடுகளம் வேண்டும் என ஹோலி கேட்டுள்ளாராம்.

### இது கடைசி

டெஸ்ட் அரங்கில் 'நம்பர்-1' அணியாக உள்ளது இந்தியா. தற்போது, சொந்தமண்ணில் விளையாடும் கடைசி டெஸ்ட் இதுதான். இதன்பின் தென்னாரிக்காவில் 3 டெஸ்ட், இங்கிலாந்தில் 5, அவுஸ்திரேலியாவில் 4 என, 2018 கடைசி வரை மொத்தம் 12 டெஸ்ட் போட்டிகள அந்நிய மண்ணில் விளையாட உள்ளது.

### 10 வெற்றி

டில்லி, பெரோஷா கொட்லா மைதானத்தில் 1990 வரை இந்திய அணி பங்கேற்ற 22 டெஸ்டில், 3ல் தான் வென்றது. 13ல் 'சமன்' செய்த இந்திய அணி, 6ல் தோற்றது. 1990க்குப் பின் களமிறங்கிய 11 போட்டிகளில் 10ல் வென்றது. ஒரு போட்டியை 'சமன்' செய்தது.

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 03.11.2017 வெள்ளிக்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

## அமரர் (கலைவாரிதி) முத்தையா வேலுப்பிள்ளை

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள்
நாளை 03.12.2017 ஞாயிற்றுக்கிழமை
மாமுனை கடற்கரையில் நடைபெற்று
தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில்
நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்
மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

மாமுனை, செம்பியன்பற்று.

வே.தவச்செல்வம்
ஊடகவியலாளர், பிறப்பு,
இறப்பு, விவாகப் பதிவாளரும்.



# தேவை

Office Boy தேவை.(Ticketing Office)

தொடர்பு: 021 222 7666
இல.166, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். (1496)



# சொர்க்கம் திருமண சேவை

❖கனடாவில் வசிக்கும் 37 வயதுடைய விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றோம். சைவ உணவு உண்பவர் விரும்பத்தக்கது.

❖கனடாவில் வசிக்கும் 30 வயதுடைய செவ்வாய்க் குற்றம் இல்லாத மணமகனுக்குத் தகுந்த மணமகளைத் தேடுகின்றோம்.

Viber & Phone: 0016 475 043 336
0014 166 661 855, 077 967 7153



# மக்களே அவதானம்



(கொழும்பு)

காசல்ரீ நீர்தேக்கத்தின் நீர்மட்டம் வெகுவாக உயர்வடைந்துள்ளமையினால் அதனை அண்டிய பிரதேச மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்குமாறு லக்சபான மின்சார சபை அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

தொடர்ச்சியாக பெய்துவரும் அடை மழையினால் காசல்ரீ நீர்த்தேக்கத்திற்கு நீர் வழங்கும் கெல்கமுவ ஓயா மற்றும் அட்டன் ஓயா ஆகியவை பெருக்கெடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

(சி-566)


# இராசி பலன்

02.12.2017
கார்த்திகை 16, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.15 மணிக்கு
சதுர்த்தசி பின்னிரவு 12.39 மணிவரை
பரணி முற்பகல் 11.24 மணிவரை
சுபநேரம் 3.15-4.45 மணிவரை
இராகுகாலம் 9.15-10.45 மணிவரை
திருவண்ணாமலை தீர்த்தம்,
திருக்கார்த்திகை விரதம், குமாராலய தீபம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சந் | | |
| - | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சித்திரை, சுவாதி<br>மாலை 4.43 மணிக்கு<br>இடப-சந் | | ராகு |
| கேது | | | |
| | சனி, புத<br>சூரி, சுக் | குரு | செவ் |

**மீனம்:** பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு, தன வரவு திருப்திகரமாக அமையும், தேவையற்ற விவாதத்தை தவிர்ப்பது நல்லது.

**மேடம்:** நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்குபடுத்திக் கொள்வீர்கள், குடும்பத்தினர் உங்கள் செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்குவர்.

**இடபம்:** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச் சொல்லுக்கு ஆளாக நேரிடும்.

**மிதுனம்:** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கும்பம்:** பொன்னான நாள், சகோதர வழி ஒத்துழைப்புகள் கிடைக்கும், வேலையில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**கடகம்:** எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம் பெறலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.

**மகரம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும்.


**சிம்மம்:** மறைமுகப் போட்டிகள் அகன்று வியாபார விருத்தி ஏற்படும், சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள், புதிய திட்டங்கள் தீட்டி ஆதாயம் காண முற்படுவீர்கள்.

**தனுசு:** எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், புத்திசாதுரியமாக நடந்து கொள்வீர்கள்.

**விருச்சிகம்:** மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், பாதியில் நின்ற பணியை மீண்டும் தொடர்வீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு.

**துலாம்:** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி:** மற்றவர்களை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, எடுத்த காரியங்களில் சிறு தாமதங்கள் ஏற்படலாம்.





க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான ஆசீர்வாத நிகழ்வு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மற்றும் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது. வீணாகான குருபீட குரு முதல்வர் சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக்களின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான விசேட சரஸ்வதி பூஜையும் ஆசீர்வாத நிகழ்வும் இடம்பெற்றன. அத்துடன் குறுகிய நேர மன ஒருமைப்பாட்டு பயிற்சியும் நடைபெற்றது. இந் நிகழ்வில் கல்வி திணைக்கள அதிகாரிகள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.(படங்கள்:-பொ.சோபிகா)

# திருமறைக் கலாமன்ற தினத்தை முன்னிட்டு நாளை யாழில் 'யாழ்பாணன்' இசை நாடகம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் 52ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை பல்வேறு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

காலை 7.00 மணிக்கு இல 17,மாட்டின் வீதியில் அமைந்துள்ள கலைஞான சுரபியான இல்லத்தில் சிறப்பு வழிபாடு இடம்பெறும்.

தொடர்ந்து மாலை 5.00 மணிக்கு கலைத்தூது கலையகத்தில் கலை நிகழ்வுகளும் நூல் வெளியீடும் இடம் பெறும். இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினரான பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா கலந்து சிறப்பிப்பார்.

இந் நிகழ்வில் கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவர்கள் வழங்கும் நடனமும் அதனைத்தொடர்ந்து கடந்த ஆண்டு திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் மேற்கொண்ட கனடாவுக்கான கலைப்பாலத்தின் அனுபவப் பதிவுகளைத் தாங்கிய நூல் வெளியீடு இடம்பெறும். நூலுக்கான அறிமுகவுரையை கிளிநொச்சி மகா வித்தியாலய ஆசிரியர் ந.குகபரன் வழங்குவார்.

நிறைவு நிகழ்வாக திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் வழங்கும் 'யாழ்பாணன்' இசைநாடகம் இடம் பெறும். (இ-7)

# நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

கரணவாய் ஜே/348,ஜே/350, ஜே/351 மற்றும் ஜே/362 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கான தேசிய அடையாள அட்டைக்கான நடமாடும் சேவை எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை மூத்த விநாயகர் சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

16 வயது பூர்த்தியடைந்தும் போதிய ஆவணங்கள் இல்லாததால் இதுவரை தேசிய அடையாள அட்டையை பெற்றுக் கொள்ளாதவர்கள், போதிய ஆவணங்கள் இன்மையால் தேசிய அடையாள அட்டையை புதுப்பிக்க முடியாதவர்கள், தேசிய அடையாள அட்டையை தொலைத்தவர்கள் மற்றும் சேதமடைந்த, எழுத்துக்கள் தெளிவில்லாத, உருவ வேறுபாடுடைய மற்றும் ஏனைய திருத்தங்கள் செய்ய வேண்டிய தேசிய அடையாள அட்டையை வைத்திருப்பவர்கள் மேற்படி நடமாடும் சேவையை பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-10-60)



வடக்கு மாகாண சமூக சேவை திணைக்களத்தினால் வறுமைக்கோட்டின் கீழுள்ள 4 குடும்பங்களுக்கு சுய தொழிலுக்கான நன் கொடையாக 30 ஆயிரம் ரூபாய் கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிறிமோகன் தலைமையில் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது.
(படம்:-கரணவாய் செய்தியாளர்)



நாகர்கோவில் மகா வித்தியாலயத்தின் மாணவர் பாராளுமன்ற அமர்வு அண்மையில் வித்தியாலய பிரதான மண்டபத்தில் இடம்பெற்ற போது...(படம்:-மகாலிங்கம்)

# கலைவிழா

(யாழ்ப்பாணம்)

அளவெட்டியிற்றில் மாஸ்பர்மொண்டசூரியின் கலைவிழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் தெல்லிப்பழை இராஜேஸ்வரி மண்டபத்தில் கி.சதீஸ்குமார் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா கலந்து கொள்வார். (இ-10)

# ஒக்டோபர் புரட்சி ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் மகத்தான ஒக்டோபர் ரஷ்ய சோசலிசப் புரட்சியின் நூற்றாண்டை முன்னெடுக்கும் முகமாக நடத்தப்படும் ஆய்வரங்குத் தொடரின் 11ஆவது ஆய்வரங்கானது நாளை 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 4.00 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

ஒக்டோபர் புரட்சியும் புதிய பண்பாட்டுப் புரட்சியும் என்ற தலைப்பில் இடம்பெறவுள்ள இவ் ஆய்வரங்கிற்கு தோழர் அழ. பகீரதன் தலைமை தாங்கவுள்ளதுடன், ஆய்வுரையினை தாயகம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் தோழர் க. தணிகாசலம் ஆற்றவுள்ளார். (இ-7)

# கேரள கஞ்சா வைத்திருந்தவருக்கு 6 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

கேரளக்கஞ்சாவை தன் வசம் வைத்திருந்த நபருக்கு 6 ஆயிரம் ரூபாய் தண்டப் பணம் விதித்து மல்லாகம் நீதிமன்ற நீதிபதி ஏ.யூட்சன் உத்தரவிட்டார்.

கடந்த 29ஆம் திகதி பண்டத்தரிப்பில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய நபரை நோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சோதனை செய்த போது கேரளக்கஞ்சாவை மறைத்து வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து இளவாலைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் வியாழக்கிழமை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்த போதே இவ்வாறு அபராதம் விதித்து உத்தரவிட்டார். (இ-10-104)

# நமசிவாயம் சுவாமிகளின் 34-வது குருபூசை நாளை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீமத் நமசிவாயம் சுவாமிகளின் 34ஆவது குருபூசை நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மகாதேவா சுவாமிகள் வேதாந்த மடத்தில் இடம்பெறும்.(இ-10)

# கசிப்பு வைத்திருந்தவருக்கு 5 ஆயிரம் ரூபாய் தண்டம்

(யாழ்ப்பாணம்)

கசிப்பு வைத்திருந்த நபருக்கு 5 ஆயிரம் ரூபாய் தண்டப் பணம் விதித்து மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.யூட்சன் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 17 ஆம் திகதி இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் 750 மில்லிலீற்றர் கசிப்பை மறைத்து வைத்திருந்த நபர் இளவாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை குறித்த நபரை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்த போதே நீதிபதி 5ஆயிரம் ரூபாய் தண்டப் பணம் விதித்து உத்தர விட்டார். (இ-10-104)

# வருமான வரிச்சங்க பொதுக்கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண வருமான வரிச் சங்கத்தினரின் பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறும் என சங்கத்தின் தலைவர் சி.சந்திரகுமார் அறிவித்துள்ளார். (இ-10-102)

# மதுபோதையில் மக்களுக்கு இடையூறு மூவாயிரத்து 500 ரூபா அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

வீதியால் சென்ற பொது மக்களுக்கு மதுபோதையில் இடையூறு ஏற்படுத்திய நபருக்கு மூவாயிரத்து 500 ரூபாய் தண்டப்பணம் விதித்து மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.யூட்சன் உத்தரவிட்டார்.

கடந்த 23ஆம் திகதி இளவாலை மாந்தைப் பகுதியில் வீதியால் சென்ற பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் குறித்த நபர் இளவாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் வியாழக் கிழமை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்த போதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இ-10-104)



கரணவாய் கிழக்கு வேதாரணியேஸ்வர வித்தியாலயத்தில் புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டும் விழா நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் கலந்து கொண்டார். இதே வேளை வட மாகாண சபை உறுப்பினர் சி.அகிலதாஸ், வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.
(படங்கள்:-மகாலிங்கம்)




# தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர் "சமூகஜோதி" திரு.வாமதேவா தியாகேந்திரன்

## அவர்களின் 66 வது அகவை தினமான இன்றைய நாளில் நற்பணிகளுக்காக 50 இலட்சம் ரூபாவினை வாரி வழங்குகின்றார்.

இன்றைய சமுதாயத்தில் பலர் சுயநலத்துடன் தன் குடும்பம், தான் சார்ந்த குடும்பம் என்ற சிறிய வட்டத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கின்ற காலகட்டத்தில் இவர் சற்று வித்தியாசமான பார்வையில் தனது சொந்த நிதிப்பங்களிப்புடன் சுவிஸ் நாட்டில் இருந்து கொண்டு தனது சொந்த மண்ணில் பலர் பிரமிக்கத்தக்க வகையில் தியாகி அறக்கொடை நிறுவனம் என்ற சமூக சேவை அமைப்பைத் ஸ்தாபித்து அதனூடாக பல செயற்திட்டங்களை நலிவுற்ற மக்களுக்காக செயற்படுத்தி வருகின்றார்.

அதுமட்டுமன்றி தன்னுடைய சொந்த நிர்வாகத் திறமை மூலமாக இங்கு ஒரு திறமையான நிர்வாகக் கட்டமைப்பை (Administration Structure) உருவாக்கி அதனை வழிநடத்தி தனது சொந்த கருத்தியல் அடிப்படையில் செயற்திட்டங்களை உருவாக்கி அதன் அடிப்படையில் வெற்றிகரமாக அமுல்படுத்தி வருகின்றார்.

பொதுவாக நிறுவனங்கள் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு பின்பற்றும் நடைமுறைகளில் இருந்து இந்நிறுவனத்தின் பிரதான வேறுபாடு என்னவெனில் இவருடைய பிரதான அணுகுமுறை, மனித உறவுகள் அணுகுமுறை (Human Realation Approach) அதாவது மனித உறவுகளுக்கு முன்னுரிமையளித்து செயற்திட்டங்களை அமுல்படுத்துவதாகும். ஆனால் மற்றைய நிறுவனங்கள் தங்களது செயற்திட்டங்களை செயற்திட்ட கருத்திட்ட அடிப்படையில் (Project Criteria) தான் தாங்கள் செயற்திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவர் **Everybody is Human in front of me** அதாவது எனது பார்வையின் முன்னிலையில் ஒவ்வொருவரும் மனிதர்கள் என்ற கொள்கை அமுல்படுத்தப்படுகின்றது. அதாவது மனித நேயத்திற்கு முன் இன, மத வேறுபாடு என்பது கருத்தில் எடுக்கப்படுவதில்லை. அதன் அடிப்படையில் இந் நிறுவனத்தின் செயற்திட்டங்கள் மனிதர்களை சமத்துவம் ஆக்கும் நோக்கில் இலங்கை முழுவதும் தங்கள் செயற்திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றனர்.

இவர் பல ஆண்டுகளாக கோடிக் கணக்கான ரூபாயினை மாதாந்தம் பின்வரும் வாழ்வாதார செயற்திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றார்.

### 1.1. கல்வி ஊக்குவிப்பு செயற்திட்டம்

❖ பாடசாலை மாணவர்களுக்கான உதவி

மிகவும் வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு அவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக மாதாந்தம் தலா 500/- வழங்கப்படுகின்றது.

கண்பார்வை குறைந்து கற்றல் செயற்பாட்டில் பாதிப்புற்ற மாணவர்களின் கண்களை உரிய முறையில் பரிசோதித்து இலவசமாக கண்ணாடி வழங்கப்பட்டு வருகின்றது.

❖ முன்பள்ளி ஆசிரியர்களுக்கான உதவி

பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த மிகவும் வசதி குறைந்த முன்பள்ளிப் பாடசாலைகளில் சேவை புரியும் ஆசிரியர்களுக்கு மாதாந்த ஊக்குவிப்பு உதவியாக தலா 1000/- வழங்கப்படுகின்றது.

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு சில பிரதேச செயலகங்களினால் கொண்டாடப் படும் சிறுவர், முதியோர் தின விழாவிற்கு அன்பளிப்பு பொருட்கள் எம்மால் வழங்கப்பட்டு வருகின்றது.

❖ பல்கலைக்கழக மாணவர்களுக்கான உதவி

பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் வசதி குறைந்த மாணவர்களுக்கு அவர்களின் கல்வித் தேவைக்காக மாதாந்தம் தலா 1000/- வழங்கப்படுகின்றது.

### 2. பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிச் செயற்திட்டம்

❖ கணவனை இழந்த அல்லது கணவனால் கைவிடப்பட்ட மிகவும் வறிய நிலையில் இருக்கும் குடும்பங்கள் பொருளாதார முயற்சியில் வருமானத்தையீட்ட தொடங்கும் வரை அவர்களின் குடும்ப நிலைக்கேற்ப மாதாந்தம் தலா 500/- தொடக்கம் 2000/- வரை வழங்கப்படுகின்றது.

❖ பொருளாதார முயற்சியில் ஈடுபட்டுள்ள மாதர் சங்கங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் உள்ளூர் உற்பத்திகளை சந்தைப்படுத்த வசதி செய்து கொடுக்க ப்படுகின்றது.

### 3. மருத்துவ உதவிச் செயற்திட்டம்

❖ புற்று நோயாளருக்கான உதவி

புற்று நோயினால் பாதிக்கப்பட்ட மிகவும் வறிய நிலையில் உள்ள நோயாளர்களுக்கு மருத்துவ செலவிற்காக மாதாந்தம் தலா 1000/- வழங்கப்படுகின்றது.

❖ முதியவர்களுக்கான மருத்துவ உதவி

பிரதேச செயலகங்களின் ஊடாக மாவட்ட அலுவலகர் சமூக சேவை திணைக்களத்தினால் வைத்திய உதவி போதியளவு பெற முடியாத வறுமைக்குட்பட்ட முதியோர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் இலவச மருத்துவ சேவை எம்மால் நடத்தப்பட்டு வருகின்றது.

❖ ஏனைய மருத்துவ உதவி

மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு செல்லும் மிகவும் வசதி குறைந்த நோயாளருக்கு போக்குவரத்து செலவுக்காகவும், மருந்துச் செலவுக்காகவும் உதவி வழங்கப்படுகின்றது.

### 4. ஆதரவற்ற முதியவர்களுக்கான உதவிச் செயற்திட்டம்

❖ ஆதரவற்ற வறுமைக்கோட்டின் கீழ் வாழும் முதியோர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு தலா 500/= வழங்கப்படுகின்றது.

### 5. மகளிர் மீள் எழுச்சித்திட்டம்

❖ பொருளாதார ரீதியில் மிகவும் பின் தங்கிய நிலையில் வறுமைக்குட்பட்ட குடும்பங்களில் வயது வந்தும் திருமணமாகாத பெண்களுக்கு மாதாந்தம் 1000/= ரூபா உதவித் தொகையாக வழங்கப்படுகின்றது. இத் திட்டத்தின் மூலம் 110 பெண்பிள்ளைகளுக்கான சேமிப்பாக 12 இலட்சம் ரூபா சேமித்துள்ளோம். அடுத்த ஆண்டு அப்பயனாளிகளின் வாழ்வாதாரத்திட்டத்தில் முதலீடு செய்ய ஊக்குவிக்க உள்ளோம்.

### 6. தாய் சேய் நலத்திட்டம்

❖ வறுமைக் கோட்டிற்குட்பட்ட ஒரு வருடத்திற்குட்பட்ட குழந்தையுடைய தாய்மாருக்கு மாதாந்தம் 1000/= பெறுமதியான சத்துணவுப் பொதி வழங்கப்படுகின்றது.

### 7. சூழல் பாதுகாப்புத்திட்டம்

❖ இத்திட்டத்தின் ஊடாக செம்மணி இந்து மயானம் தெரிவு செய்யப்பட்டு இங்கு 200 நிழல் தரும் மரங்கள் நாட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் மாதம் தோறும் இம் மயானத்தில் உள்ள புற்செடிகள் எம்மால் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது.

❖ குறிப்பிட்டளவு பயன்தரும் மரக்கன்றுகளையும் வழங்கி வருகின்றோம்.

இதற்கு மேலதிகமாக தனது பிறந்த நாளன்று பெருந்தொகை நிதியினை விசேட செயற்றிட்டங்காக ஒதுக்கி வந்துள்ளார்.

**இதன் அடிப்படையில் இம்முறையும் தனது பிறந்த தினத்தன்று பின்வரும் நற்பணிகளுக்காக 50 இலட்சம் ரூபாயினை ஒதுக்கீடு செய்கின்றார்.**

1.தான் கல்விகற்ற பாடசாலையான சென்ஜோன்ஸ் கல்லூரியின் கூடைப்பந்து மைதானத்திற்கு 10 லட்சம் ரூபாயினை ஒதுக்கி வழங்கியுள்ளார்.

2.தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் விசேட மகப்பேற்று தேவையுள்ளவர்களுக்கான சிகிச்சை பிரிவின் அபிவிருத்திக்காக 5 லட்சம் ரூபாயினை ஒதுக்கியுள்ளார்.

3.பார்வைக் குறைபாடுடைய பாடசாலை மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்குவதற்காக 250000.00 ரூபாயினை ஒதுக்கியுள்ளார்.

4. சிறுவர்களின் உடல், உள விருத்திக்கான முன்பள்ளி ஒன்றுக்கு 250000.00 ரூபா பெறுமதியான சிறுவர் விளையாட்டு உபகரணங்கள் கொடுக்கப்படவுள்ளன.

5. விசேட தேவை உடையவர்களுக்கு மூன்று சில்லு சைக்கிள்கள் வழங்குவதற்கென 250000.00 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

6. சூழல் பாதுகாப்புச் செயற்திட்டங்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்குவதற்கு 150000.00 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

7.வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டி வழங்குவதற்கு 250000.00 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

8. மாகாண சுகாதார பணிமனை ஊடாக பாடசாலை மாணவர்களிடையே ஊட்டச்சத்து மற்றும் சுகாதார விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதற்காக 2 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

9. பெண் தலைமத்துவக் குடும்பங்களுக்கு 2 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

10. மகளிர் எழுச்சித் திட்டத்தின் கீழ் புதிதாக இணைத்துக்கொள்ள உள்ள பெண்களுக்கு 1 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

11. நிறுவன ஊழியர்களின் நிதிசார் நலச் செயற்பாட்டுக்கு 250000.00 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

12.இதனைவிட மாதாந்த உதவி பெறுபவர்களுக்கான **இன்றைய** கொடுப்பனவுகள் இலங்கை பூராக 1500000.00 ரூபா வழங்கப்படுகிறது.

13. எமது நிறுவனத்தால் செம்மணி மயானத்தில் நடப்பட்ட மரங்கள் பராமரிப்பதற்கு 25000.00 ஒதுக்கப்பட்டுள்ளது.

14.பாடசாலை மட்டத்தில் 2 ஆம் மொழி கல்வி அமுலாக்கத்திற்கு 40000.00 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

15. முன்பள்ளி சிறார்களுக்கான பாடசாலை புத்தகப்பை 35000.00 ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது.

இப்படிப்பட்ட ஒரு செயல் வீரன் தனது 66 ஆவது அகவையில் காலடிவைக்கின்றபோது எல்லா பயனாளிகளும் ஊழியர்களும் இப்பிரதேச மக்களும் அறப்பணி தொடர்வதற்கு இவர் பல்லாண்டு காலம் வாழ இறைவன் அருள்புரிவாராக என வாழ்த்துகின்றோம்.

"பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம்
ஆனால் இறப்பு என்பது சரித்திரமாக இருக்கட்டும்"

**சி.மாணிக்கராசா**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர்,**
**வலயக் கல்வி அலுவலகம்,**
**யாழ்ப்பாணம்.**

(சி-551)

# மாகாணசபைகளுக்கான எல்லை நிர்ணய கருத்தமர்வு

## கிளிநொச்சியில் நடைபெற்றது

(பரந்தன்)

புதிய அரசியலமைப்பின்படி மாகாணசபைகளுக்கான தேர்தல் ஐம்பது வீதம் தொகுதிவாரியாகவும், ஐம்பது வீதம் விகிதாசாரப்படியும் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் மாவட்ட ரீதியாக தொகுதிகள் எல்லை நிர்ணயம் செய்யும் வகையில் மக்கள் கருத்தறியும் அமர்



வுகள் நடைபெற்று வருகின்றன. இந்தக் கருத்தமர்வு கடந்த 28 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மாகரண சபை உறுப்பினர்கள் நான்கு பேர் தெரிவு செய்யப்படுகின்றனர். இதில் இனிவரும் தேர்தல்கள் மூலம் இருவர் தொகுதிவாரியாகவும் இருவர் விகிதாசார முறைப்படியும் தெரிவு செய்யப்படவுள்ளனர். எனவே மாவட்டத்தை இரண்டு தொகுதிகளாக பிரிக்கும் மக்கள் கருத்தறியும் அமர்வில் கிளிநொச்சி மாவட்டத்தில் குடிப்பரம்பல் அடிப்படையில் இரண்டு தொகுதிகள் ஆக்கும்போது குடிப்பரம்பல் செறிவு அதிகமுள்ளதும் பெரு நகர மையமாகக் கொண்டதுமான கரைச்சி பிரதேசத்தை ஒரு தொகுதியாகவும் குடிப்பரம்பல் குறைவான ஏனைய கண்டாவளை, பூநகரி, பச்



சிலைப்பள்ளி ஆகிய மூன்று பிரதேசங்களை இன்னுமொரு தொகுதியாகவும், ஏற்படுத்துவதே சிறப்பானது. அத்தோடு புவியியல் தொடர்பு மற்றும் சனத்தொகை சமநிலையை கருத்தில் கொண்டு உருத்திரபுரம் வடக்கு மற்றும் பெரிய பரந்தன் என்பனவற்றை பூநகரியோடு சேர்த்துக்கொள்ள முடியும் எனவும் சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் சார்பாக முன்மொழிவுகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்தோடு பல அமைப்புகள் மற்றும் பேராசிரியர் விக்னேஸ்வரன் ஆகியோரும் தங்களது கருத்துக்களை மேற்கண்டவாறே கூறியதோடு, எழுத்து மூலமும் மாகாண தேர்தல் எல்லை நிர்ணயக் குழுவுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான குருகுலராஜா, பசுபதி பிள்ளை உள்ளிட்ட கிளிநொச்சி தமிழரசுக் கட்சியினர் தங்களது முன்மொழிவுகளில் கிளிநொச்சியை முகமாலை தொடக்கம் இரணைமடு வரையான ஏ-9 பிரதான வீதியை மையமாக கொண்டு கிளிநொச்சி கிழக்கு தொகுதி என்றும் கிளிநொச்சி மேற்கு தொகுதி என இரண்டாக பிரிக்குமாறும் தங்களின் கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

இதேவேளை வடக்கு கிழக்கு வாழ் மலையக மக்கள் ஒன்றியம் கிளிநொச்சியில் தங்களது மக்கள் செறிவாக வாழும் 19 கிராம அலுவலர் பிரிவுகள் ஒரு தொகுதிக்குள் வருமாறு எல்லை நிர்ணயம்அமைய வேண்டும் என்றும் அதுவே தங்களின் பொருளாதார அரசியல் அபிவிருத்திக்கு வழிவகுக்கும் என்றும் தங்களின் கருத்துக்களை முன் வைத்துள்ளனர். (2-312)




# 'ஆதிசிவன் பாதஅமுதம்' கும்பாபிஷேக மலர் வெளியீடு

(வவுனியா)

வவுனியா, தோணிக்கல் விசாலாட்சி சமேத விஸ்வநாதர் திருக்கோவிலில் (ஆதிசிவன் ஆலயம்) நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் பதிவுகளைக் கொண்ட "ஆதிசிவன் பாத அமுதம்" மலர் வெளியீட்டு விழா, நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆதி சிவன் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆலய பரிபாலனசபையின் தலைவர் து.கனகரத்தினம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக வவுனியா நகரசபையின் செயலாளர் இ.தயாபரன், சிறப்பு விருந்தினர்களாக ஈழத்துச் சிதம்பர மணிவாசகர் சபையின் தலைவர் பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை, வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன், வவுனியா பிரதேச கலாசார உத்தியோகத்தர் வீ.பிரதீபன், வவுனியா இந்து கலாசார உத்தியோகத்தர் சிவ.கஜேந்திரகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். மங்கல விளக்கேற்றல், திருமுறை ஓதலைத் தொடந்து கும்பாபிஷேகப் பிரதம குரு சிவஸ்ரீ ஆதி.சௌந்தரராஜக் குருக்கள் ஆசியுரையை வழங்குவார். தலைமையுரையை அடுத்து மலர் வெளியீடு நடைபெறும். முதற்பிரதியை தோணிக்கல்லைச் சேர்ந்த க.சந்திரசேகரம் பெற்றுக் கொள்வதையடுத்து சிறப்புப் பிரதிகள் வழங்கப்படும். மலர் அறிமுகவுரையினை ஆசிரிய நிலைய விரிவுரையாளர் திருமதி. வி.முருகேசபிள்ளை நிகழ்த்துவார். இம்மலரை அழகுற அமைத்த மலராசிரியர் தமிழறிஞர், தமிழருவி த.சிவகுமாரன் ஆலய பரிபாலன சபையால் கௌரவிக்கப்படுவதுடன் மலராசிரியர் ஏற்புரையும் இடம்பெறும்.

சிறப்பு நிகழ்ச்சியாக "ஆன்மீக பண்பாட்டு விழுமியங்கள் தற்கால சூழலில் மங்கி மறைகின்றதா? நின்று நிலைக்கின்றதா? என்னும் பொருளில் பட்டிமண்டபம் இடம்பெறும். வீ.பிரதீபன், கி.உதயகுமார், மு.நந்தகுமார், சி.கஜேந்திரகுமார், சி.வரதராஜன், ல.சதீஸ்குமார் ஆகியோர் பங்குபற்றும் இப்பட்டிமண்டபத்திற்கு தமிழருவி த.சிவகுமாரன் நடுவண்மை வகிப்பார். நன்றியுரையினை ஆலய பரிபாலன சபையின் செயலாளர் ல.சுரேந்திரசேகரன் வழங்குவார். (2)

# குருவிச்சை நாச்சியார் ஆற்றுப்பாலத்தின் புனரமைப்புப்பணி முற்றாக நிறைவுற்றது



முல்லைத்தீவின் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள குருவிச்சை நாச்சியார் பாலம் மறுசீரமைக்கப்பட்டு வருகிறது.

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் வீதியிலுள்ள குருவிச்சைநாச்சியார் ஆற்றுப் பாலம் முன்னர் சேதமடைந்து காணப்பட்டது. குறித்த பாலம் மற்றும் அதனோடு இணைந்த சுமார் 750மீற்றர் வீதியை மறுசீரமைப்பது தொடர்பாக இந்தப்பகுதி விவசாயிகள் வடக்கு மாகாணசபை உறுப்பினரிடம் முன்வைத்திருந்தனர்.

அதற்கமைய இந்தப் பாலம் மறுசீரமைக்கப்பட்டிருப்பதோடு வீதியும் சீரமைக்கப்பட்டுவருகின்றது. இது தொடர்பில் தெரியவருவதாவது.

குருவிச்சைநாச்சியார் ஆற்றுப்பாலமானது மிக மோசமாக பாதிக்கப்பட்டு காணப்பட்டது. குறித்த பாலத்திற்கு அப்பால் சுமார் இருநூற்றுக்கு மேற்பட்ட ஏக்கர் காணிகளில் மக்கள் வேளாண்மை செய்து வந்தனர். இதனால் அதற்கான உள்ளீடுகளைக் கொண்டு வருவதிலும், அறுவடையின் பின் நெல்மணிகளைக்கொண்டு செல்வதிலும் பல இடர்பாடுகளை சந்தித்தனர்.

இதனைத் தொடர்ந்து இந்த பாலத்தினுடைய மறுசீரமைப்பின் தேவையை வலியுறுத்தி, 2016.02. 24ஆம் திகதி அப்போதைய விவசாய அமைச்சரிடம் எழுத்து மூலம் கடிதம் ஒன்று கையளிக்கப்பட்டது.

மேலும் இது தொடர்பாக அடுத்தடுத்து தொடர்ச்சியாக பலதடவைகள் இந்த பாலத்தினுடைய மறுசீரமைப்பை வலியுறுத்தி வந்ததன் பயனாக, குறித்த வேலைத் திட்டத்திற்காக மூன்றரை மில்லியன் ரூபாவை அப்போதைய விவசாய மற்றும் நீர்ப்பாசன அமைச்சு 2017ம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டில் ஒதுக்கியிருந்தது.

பின்னர், இந்த பாலத்தினுடைய அடிக்கல் நாட்டு விழாவானது கடந்த 07.04. 2017 நடைபெற்றது. இந்த அடிக்கல் நாட்டுவிழாவில் க்தலியார் சம்மளங்குளம் கமக்கார அமைப்பினரால் கடிதம் ஒன்று கையளிக்கப்பட்டது. அக்கடிதத்தில் ஒட்டுசுட்டான் - நெடுங்கேணி நடுவீதியிலிருந்து இந்தப்பாலம் 750 மீற்றர் தூரத்தில் காணப்படுவதால் அதற்கு இடைப்பட்ட வீதியை சீரமைத்துத்தரு மாறு கோரப்பட்டிருந்தது. அதற்கமைய கடந்த 24.04. 2017 வடக்கு மாகாண நீர்ப்பாசன பொறியியலாளர் பிரேம்குமாரிற்கு விவசாயிகளின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி குறித்த 750மீற்றர் தூர வீதியையும் சீரமைக்குமாறு எழுத்து மூலம் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது.

பாலத்தினுடைய மறுசீரமைப்புப்பணி முற்றாக நிறைவு பெற்றுள்ளது. வீதியினுடைய சீரமைப்புப்பணிகள் நடைபெற்று தற்போதைய சீரற்ற காலநிலையால் இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. (2)

# சட்டவிரோத செயல்களைக் கட்டுப்படுத்த உரிய தரப்பினர் முன்வர தவறுகின்றனர்

## பொது அமைப்புக்கள், பொது மக்கள் குற்றச்சாட்டு

(கண்டாவளை)

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய இடங்களில் இடம்பெற்று வரும் சட்டவிரோத செயல்களை கட்டுப்படுத்த உரிய தரப்பினர் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லையெனவும் இதனால் குற்றச்செயல்கள் அதிகரித்துச் செல்வதாக இப்பகுதி மக்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

மேற்படி இடங்களில் சட்டவிரோதமான முறையில் பெருமளவான காட்டுமரங்கள் வெட்டப்பட்டு கடத்தப்பட்டு வருகின்றன. அதாவது மூன்று முறிப்பு சிறாட்டிகுளம், பாலைப் பாணி ஆகிய பகுதிகளிலும் துணுக்காய் தென்னியன் குளம், தேறாங்கண்டல், ஐயன்கன்குளம், உள்ளிட்ட பகுதிகளிலும் காடுகளில் உள்ள மிகவும் பெறுமதி வாய்ந்த காட்டு மரங்கள் சட்டவிரோதமான முறையில் வெட்டப்பட்டு வெளியிடங்களுக்கு கொண்டுசெல்லப்படுகின்றன.

அத்துடன் மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பகுதிகளிலும் பாலியாறுப் பகுதியிலும் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வுகள் மற்றும் கிரவல் அகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

அத்துடன் வாழ்வாதாரத் தேவைகளுக்காக வளர்க்கப்படும் கால்நடைகள் கடத்தப்படுதல் போன்ற செயற் பாடுகளும் அதிகளவில் காணப்படுகின்றன.

இவ்வாறு இப்பகுதிகளில் பெருமளவான வளங்கள் அழிக்கப்படுகின்றன. மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழு கலந்துரையாடல் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டு வ்ரப்பட்ட போதும் இவை குறைந்தபாடாக இல்லை. அதிகரித்தே காணப்படுகின்றன எனவும் இப்பகுதி மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (2-315)

# சுயதொழில் கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வீதி ஒட்டுசுட்டான் என்னும் முகவரியில் உள்ள அறிவகத்தில் இலவச சுயதொழில் வாய்ப்புக் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கற்கை நெறிகளாவன, கைத்தொலைபேசி திருத்தும் கற்கைநெறி- (காலம் 3 மாதம்), பாதுகாப்புக் கமரா பொருத்துதல் பயிற்சி - (காலம்-2 மாதம்), தையல் பயிற்சி (காலம்-6 மாதம்) ஆகும்.எனவே மேற்படி பயிற்சி நெறியில் ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரும் பங்குபற்ற முடியும். மேலதிக விபரங்களுக்கும் அனுமதிகளுக்கும் "அறிவகம்", முல்லைத்தீவு பிரதான வீதி, ஒட்டுசுட்டான் எனும் முகவரியிலுள்ள அறிவகத்தை தொடர்பு கொள்க.

தொலைபேசி இலக்கங்களாவன; 021 206 1735 அல்லது 077 711 0862 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (2)



மு/அம்பாள்புரம் தமிழ் வித்தியாலயத்தில் நடப்பாண்டில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பாடசாலையின் அதிபர் சு.பர்ராசசிங்கம் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் க.வ.கமலேஸ்வரன் சித்தி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி கௌரவித்ததுடன் கோட்டக் கல்விப்பணிப்பாளர் சு.சத்தியசீலன், ஆசிரிய ஆலோசகர் ஆரம்பக்கல்வி பொ.பிருந்தாபன் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (படம்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# வாள்வீச்சு தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகத்தில் மூவருக்கு விளக்கமறியல்

(மல்லாவி)

மல்லாவி பொலிஸ் நிலையப் பிரிவிற்குட்பட்ட கொல்லவிளாங்குளம் கிராமத்தில் உள்ள பாபு கடைச் சந்தியில் வாள்கள் மற்றும் கொட்டான்கள் ஆகியவற்றுடன் மது போதையில் நின்ற 12 பேர் கொண்ட குழுவொன்று வீதியால் சென்ற பொதுமக்களின் மீது வாள் வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டதுடன், 2 பேரை வாளால் வெட்டிப் படுகாயப்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ள நிலையில் பொலிஸாரால் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மூன்று பேரைக் கைது செய்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்திய போது சந்தேக நபர்களை 7 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி எம்.எஸ்.எம். சம்சுதீன் உத்தரவு பிறப்பித்துள்ளதாக மல்லாவி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜ.பி.இராஜநாயக்கா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணியளவில் வாள்கள் மற்றும் கொட்டான்களுடனும் மதுபோதையுடன் மோட்டார் சைக்கிளில் வந்த 12 பேர் கொண்ட குழுவொன்று கொல்லவிளாங்குளம் கிராம சந்திப் பகுதியில் நின்று வீதியில் சென்ற பொதுமக்களின் மீது தாக்குதலை மேற்கொண்டதுடன் 2 பேர் மீது வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தின் போது, கொல்லவிளாங்குளம் கிராமத்தைச் சேர்ந்த கனேஸ் - கஜந்தன் (வயது - 30) மற்றும் திருநகர் கிராமத்தைச் சேர்ந்த என். செல்லா (வயது-32) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு மல்லாவி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இச் சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், வாள்வெட்டுத்தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்ற சந்தேக நபர்களை கைது செய்வதற்காகத் தேடி வந்த பொலிஸார் நேற்று முன்தினம் வியாழக்கிழமை 3 சந்தேக நபர்களைக் கைது செய்ததுடன் அவர்களை தொடர் விசாரணைக்குட்படுத்தி தடயப் பொருட்களை மீட்பதற்காகவும் ஏனைய சந்தேக நபர்களைக் கைது செய்வதற்காகத் தகவல்களை பெறுவதற்காகவும் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்திய போது நீதிபதி சந்தேக நபர்களை 7 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளதாக மல்லாவி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜ.பி. இராஜநாயக்கா தெரிவித்துள்ளார். (2-15)




# 3 ஆயிரத்து 520 விவசாயிகளுக்கு உரமானியக் கொடுப்பனவு பகிர்ந்தளிப்பு

## ஒட்டுசுட்டான் கமநல சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவிப்பு

(மல்லாவி)

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழ் 2017 -2018 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற் செய்கையை மேற்கொண்ட 3 ஆயிரத்து 520 விவசாயிகளின் 10 ஆயிரத்து 713. 25 ஏக்கர் நெற் செய்கைக்குரிய உரமானியக் கொடுப்பனவில் முதலாவது கட்டத்தில் 17 கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட விவசாயிகளின் நெற் செய்கைக்குரிய 2 கோடியே 11 இலட்சத்து 15 ஆயிரம் ரூபா பணம் விவசாயிகளின் தனிப்பட்ட வங்கிக் கணக்கிலக்கத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மனோகரன் சற்குணநேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழ் பெரிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழாக 3 ஆயிரத்து 511 ஏக்கரிலும் ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழாக 3 ஆயிரத்து 475 ஏக்கரிலும் மற்றும் மானாவாரியாக 3 ஆயிரத்து 727.25 ஏக்கரிலுமாக மொத்தம் 10 ஆயிரத்து 713.25 ஏக்கரில் நடப்பாண்டுக்குரிய கால போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந் நிலையில், முதலாவது கட்டத்தில் கூழாமுறிப்பு, கணேசபுரம், தட்டயர் மலை, ஒட்டுசுட்டான், பண்டாரவன்னி, பேராறு, கருவேலன் கண்டல், முத்தையன் கட்டுகுளம், வித்தியாபுரம், கனகரத்தினபுரம், புளியங்குளம் ஆகிய 17 கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட ஆயிரத்து 596 விவசாயிகளின் 4 ஆயிரத்து 223 ஏக்கர் நெற் செய்கைக்குரிய 2 கோடியே 11 இலட்சத்து 15 ஆயிரம் ரூபா பணம் விவசாயிகளின் தனிப்பட்ட வங்கிக் கணக்கிலக்கங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகவும் இதனை விவசாயிகள் வங்கிகளில் இருந்து பெற்றுக் கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில், இரண்டாவது கட்டத்தில் ஒதியமலை, பெரியகுளம், பழம்பாசி, கற்சிலைமடு, பெரிய இத்திமடு, காதலியார் சமணங்குளம், முத்து விநாயகர்புரம், மன்னா கண்டல் ஆகிய 8 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 14 கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட ஆயிரத்து 914 விவசாயிகளின் 6 ஆயிரத்து 490.25 ஏக்கரில் மேற்கொள்ளபட்ட நெற்செய்கைக்குரிய உரமானியக் கொடுப்பனவாக 3 கோடியே 24 இலட்சத்து 51 ஆயிரத்து 250 ரூபா பணம் உரமானியக் கொடுப்பனவாக வழங்குவதற்கான புள்ளிவிபரத் தகவல்களைத் திரட்டி அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதற்குரிய பணம், அரச திறைசேரியில் இருந்து விடுவிக்கப்பட்டதும் விவசாயிகளின் தனிப்பட்ட வங்கிக் கணக்கிலக்கத்திற்கு நிதி உடனடியாக வரவிடப்படவுள்ளதாக ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மனோகரன் சற்குணநேசன் தெரிவித்துள்ளார். (2-15)

# சுனாமி அச்சம், கடல் சீற்றம்; கடலுக்கு செல்ல முடியவில்லை

## நிவாரணம் வழங்குமாறு முல்லை. மீனவர்கள் கோரிக்கை

(பனிக்கன்குளம்)



முல்லைத்தீவில் மீனவர்கள் சுனாமி அச்சம் மற்றும் அண்மைய நாட்களில் கடல் சீற்றம் ஆகியவை காரணமாக ஒருமாத காலமாக தொழிலுக்கு செல்லவில்லை. இதனால் வாழ்வாதாரமின்றி தவிப்பதாக கவலை தெரிவித்துள்ளார்கள்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது

முல்லைத்தீவு மாவட்டமானது சுனாமி மற்றும் இறுதி யுத்தம் போன்றவற்றால் மிகவும் பாதிக்கப்பட்டு மக்கள் மீள்குடியேறி சுமார் 8 ஆண்டுகள் கடந்துள்ளபோதும் முல்லைத்தீவில் கடற்றொழிலை நம்பி வாழும் சுமார் பத்தாயிரம் மீனவ குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்துக்காக போராடி வருகின்றனர்

குறிப்பாக அதிகரித்துவரும் வெளிமாவட்ட மீனவர்களின் அத்துமீறல், இந்திய மீனவர்களின் வருகை, தடை செய்யப்பட்ட தொழில்கள் என மீன்பிடியில் பாரிய சவால்களை எதிர்கொள்வதோடு பல்வேறு கூட்டங்களில் கதைத்தும் எந்த வித தீர்வுமின்றி தொடர்ந்தும் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்து வரும் தாம் கடந்த ஒருமாத காலமாக சுனாமி அச்சம் மற்றும் அண்மைய நாட்களில் கடல் சீற்றம் ஆகியவை காரணமாக ஒருமாத காலமாக தொழிலுக்கு செல்லவில்லை. இதனால் வாழ்வாதாரமின்றி தவிப்பதாக கவலை தெரிவித்துள்ளார்கள்.

இந்நிலைமைகளை கருத்தில் கொண்டு தமக்கு நிவாரணம் வழங்க அரசு முன்வர வேண்டுமெனக் கோருகின்றனர்.

அத்தோடு இவ்விடயம் தொடர்பில் கருத்து வெளியிடும் மீனவர் ஒருவர் நாங்கள் 2004ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமியில் 3 பிள்ளைகளை இழந்துள்ளோம். இன்னும் இரண்டு பிள்ளைகள் உள்ளனர்.

எனவே மீண்டுமொரு சுனாமி என்கின்ற அச்சம் காரணமாக நாம் கடற்கரையிலிருந்து மீன்பிடி உபகரணங்களை அகற்றி சென்றதோடு அச்சம் காரணமாக வேறு இடங்களில் சென்று தங்க நேரிட்டுள்ளது. ஒருமாதமாக தொழில் ஏதும் இல்லை. எமது வறுமையைப் போக்க அரசு விரைந்து வரட்சி நிவாரணங்கள் வழங்கியது போல் எமக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் எனவும் சுனாமி அச்சத்திலேயே வாழ்வதாகவும் தெரிவித்தார். (2-281)

# சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் கிளிநொச்சியில் நாளை மறுதினம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

காலை 8.30 மணிக்கு விழிப்புணர்வு நிகழ்வுகள் ஆரம்பமாகி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையிலிருந்து மாற்றுத் திறனாளிகளது ஒரு அணியும், கரடிப்போக்கு சந்தியிலிருந்து மாற்றுத் திறனாளிகளது ஒரு அணியும், கனகபுரம் கோப் சிற்றிக்கு முன்பாக இருந்து மாற்றுத் திறனாளிகளது ஒரு அணியும் கிளிநொச்சி சந்தையை நோக்கி விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை மேற்கொள்ளவுள்ளன.

வீதியின் இரு புறமும் உள்ள அரச, தனியார் நிறுவனங்கள், வணிக கடைகள் ஆகியவற்றுக்கு மாற்றுத் திறனாளிகளது உரிமைகள், தேவைகள் தொடர்பான விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துச் செல்ல உள்ளனர்.

நண்பகல் 12 மணியளவில் இந்த விழிப்புணர்வுப் பேரணி கிளிநொச்சி பொதுச் சந்தையைச்சென்றடையும்.

அங்கு பிற்பகல் 12.30 மணிக்கு மாற்றுவலுவுள்ள நபர்களின் உரிமைக்கான சந்திப்பு எனும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே. தபேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் வரவேற்புரையை வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் பே.ஞானகுமார் ஆற்ற மாற்றுத்திறனாளிகள் தினம் தொடர்பான உரையை லிபரா பவுண்டேசனின் இலங்கைக்கான நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் வி.பிறேம்குமார் நிகழ்த்தவுள்ளார்.

மாற்றுத் திறனாளிகள் தொடர்பான உரையை உயிரிழை நிறுவனத்தின் தலைவர் கோ.சிறீகரன் நிகழ்த்த, சிறப்புரையை யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி நிகழ்த்தவுள்ளார்.

மாற்றுத்திறனாளிகளுக்காக கிளிநொச்சி மாவட்டத்தில் சேவையாற்றும் உயிரிழை நிறுவனம், லிபரா பவுண்டேசன், வன்னி விழிப்புலனற்றோர் சங்கம், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் சங்கம், வரோட், மாற்றுத்திறனாளிகளுக்கான மாவட்ட சுய உதவிக் குழு ஆகிய அமைப்புக்கள் மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்துடன் இணைந்து நிகழ்வை நடத்தவுள்ளன. (2)

# வேலையில்லாப்பட்டதாரிகள் வவுனியாவில் கவனயீர்ப்பு

(வவுனியா)

அரசினால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நீண்டகாலமாக நிறைவேற்றப்படாதமையை கண்டித்தும், வேலைவாய்ப்பை உடனடியாக வழங்கக் கோரியும், வடக்கில் உள்ள வேலையில்லா பட்டதாரிகளால் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா மாவட்ட அரச பேருந்து நிலையத்தின் முன்பாக நடைபெறவுள்ளது. கடந்த 25 ஆம் திகதி சனிக்கிழமை வவுனியா குடியிருப்பு பூங்காவில் நடைபெற்ற வவுனியா மாவட்ட வேலையில்லாப் பட்டதாரிகள் சமூகத்தின் ஒன்றுகூடலில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு அமைவாக மேற்குறித்த போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனங்களை வலியுறுத்தியும் மாகாண சபையிலுள்ள வெற்றிடங்களை வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், இப்போராட்டத்தில் அனைத்து வேலையில்லாப் பட்டதாரிகளையும் அணி திரண்டு வருகை தருமாறு வடக்கு மாகாண வேலையில்லாப் பட்டதாரிகள் சமூகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (2-9)

# அரச காணிகள் போலி ஆவணங்கள் தயாரித்து ஆட்சி உறுதி முடித்து விற்பனை

## உரிய அதிகாரிகளினால் விசாரணை

(பூநகரி)

பூநகரி கௌதாரிமுனைப் பகுதியில் நூற்றுக்கணக்கான அரச காணிகளை போலி ஆவணங்களைத் தயாரித்து தமது உடைமையாக்கிக் கொண்ட சிலர் சட்டத்திற்கு முரணாக ஆட்சி உறுதிகளை முடித்து, மணல் விற்பனைக்காக பல இலட்சம் ரூபாவிற்கு விற்பனை செய்தமை உறுதிப்படுத்தி அப்பகுதி கடற்றொழிலாளர் சங்கம், கிராம முன்னேற்ற சங்கம், காணி குழுத் தலைவர்கள் ஆகியோர் சட்ட உதவி ஆணைக்குழுவிற்கும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கும் முறைப்பாடுகளைப் பதிவு செய்திருந்தனர்.

நேற்று முன்தினம் இது தொடர்பான விசாரணைகள் பூநகரி பிரதேச செயலக காணி அலுவலகத்தில் உரிய அதிகாரிகளினால் நடத்தப்பட்டது.

பல முரண்பாடான விடயங்கள் விசாரணையில் கண்டறியப்பட்டதாகவும் இது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகவும் ஒரு தனி நபர் சட்டத்திற்கு மாறாக அபகரித்து தமது உடைமையாக்கிக் கொண்ட 50 ஏக்கர் காணிகள் காணியற்ற 25 குடும்பங்களுக்கு தலா இரண்டு ஏக்கர் வீதம் வழங்கப்படவுள்ளதாக கௌதாரிமுனை காணிக் குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

காணி அபகரித்தல் செயற்பாட்டின் மூலம் அப் பகுதியில் மேய்ச்சல் தரவைகளாக இருந்த நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகள் பறிபோயுள்ளதாகவும் அதனால் இப் பகுதியில் கால்நடை வளர்ப்போர் கால்நடைகளை மேய்ச்சலுக்கு விட முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (2-84)

# ஜனாதிபதியின் டுவிட்டரில் திடீரென ஏற்பட்ட மாற்றம்

(கொழும்பு)

இலங்கைக்கும் தென் கொரியாவுக்கும் இடையிலான இராஜதந்திர தொடர்பின் 40 வருட பூர்த்தியை முன்னிட்டு தென்கொரிய ஜனாதிபதியின் விசேட அழைப்பின் பேரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந்நாட்டுக்கான 3 நாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று முன்தினம் இரவு நாடு திரும்பினார்.




இந்த நிலையில் தனது தென்கொரிய விஜயத்தை முன்னிட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது உத்தியோகபூர்வ டுவிட்டரில் கொரிய மொழியில் பதிவிட்டுள்ளார்.

"இலங்கைக்கும் கொரியாவிற்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 40 ஆவது ஆண்டு விழாவானது ஒரு புதிய உறவு மற்றும் ஒத்துழைப்பின் தொடக்கமாகும் என கொரிய மொழியில் பதிவிட்டுள்ளார். (இ-7)

# லலிதா, அம்ருதா, கீதாவை சிறைக்குள் தள்ளுவேன்! புகழேந்தி ஆவேசம்


(பெங்களூர்)

ஜெயலலிதா புகழுக்கு களங்கம் ஏற்படுத்தும் லலிதா, அம்ருதா, கீதா ஆகியோர் மீது கர்நாடக பொலிஸில் புகார் கொடுத்து அவர்களை விரைவில் சிறைக்குள் அனுப்புவேன்என தினகரன்ஆதரவாளர் புகழேந்தி எச்சரித்தார்.

தினகரன் ஆதரவாளர் புகழேந்தி நேற்று நிருபரிடம் தெரிவிக்கையில்,

மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா புகழுக்கு களங்கம் கற்பிக்கும் முயற்சியில் பலர் ஈடுபட்டு வருகின்றனர். அவர் உயிரோடு இருந்த போது அடங்கி, ஒடுங்கி இருந்தவர்கள் இன்று வாய்க்கு வந்தபடி பேசிக்கொண்டிருக்கின்றனர்.

ஜெயலலிதா தன்னுடைய சகோதரி என்று கடந்த 12, 13 ஆண்டுகளாக கூறி வந்த சைலஜா இறந்து விட்டார். அவரது இறப்புக்குப் பின் அவரது மகள் அம்ருதா தற்போது புதிய சர்ச்சையை கிளப்பி வருகிறார். ஜெயலலிதா தான் தனது தாயார் என்று அவர் கூறி வருகிறார். ஜெயலலிதாவுக்கு மகள் இருந்தது உண்மைதான் என்று அம்ருதாவின் உறவினர் லலிதா கூறியுள்ளார்.



தற்போது சென்னையிலிருந்து கீதா என்ற பெண் ஜெயலலிதாவின் தோழி என்று சொல்லிக்கொண்டு ஜெயலலிதாவுக்கு மகள் இருப்பது உண்மைதான் என்றும்; அந்த மகள் அம்ருதா தான் என்றும் கூறியிருக்கிறார்.

என்னை பொறுத்த வரையில் ஜெயலலிதா மிகப்பெரிய தலைவர். அரசியலில் அசைக்க முடியாத இரும்புப் பெண்மணி. அவரது புகழுக்கு களங்கம் ஏற்படுத்தும் லலிதா, அம்ருதா, கீதா ஆகியோர் மீது கர்நாடக பொலிஸில் புகார் கொடுத்து அவர்களை விரைவில் சிறைக்குள் அனுப்புவேன். இனியும் பொறுத்துக் கொண்டு இருக்க மாட்டோம். ஜெயலலிதா மறைந்த பிறகு அவரை பற்றி தவறாக பேசுவதை எந்த தொண்டர்களும் தாங்க மாட்டார்கள். ஆனால் அவரது புகழுக்கு களங்கம் விளைவிக்க திட்டமிட்டு சிலர் செயற்பட்டு வருகிறார்கள். அவர்களை சிலர் பின்னால் இருந்து இயக்கி வருகிறார்கள் என அவர் ஆவேசமாகத் தெரிவித்தார். (இ-7)

# 191 தொழில் உத்தியோகத்தர்கள் ஜனாதிபதியால் நேற்று நியமனம்

(கொழும்பு)

தொழில் திணைக்களத்திற்கு புதிதாக இணைத்துக் கொள்ளப்படவுள்ள 191 தொழில் உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முற்பகல் கொழும்பு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. உழைக்கும் மக்களின் நன்மைக்காக ஆரம்பிக்கப்பட்ட பாரிய நிதியமான ஊழியர் சேமலாப நிதியத்தினை பலப்படுத்துவதற்கு புதிதாக நியமனம் பெற்ற தொழில் உத்தியோகத்தர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி தெரிவித்தார்.


85 இலட்சம் அளவிலான அரச மற்றும் தனியார் துறை உத்தியோகத்தர்களுள் சுமார் 26 இலட்சம் பேர் மாத்திரமே தற்போது ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு வழங்குகின்றனர். கட்டாயமாக பங்களிப்பு வழங்க வேண்டிய மேலும் பத்து இலட்சம் பேர் அளவில் காணப்படுகின்றனர் என்பதைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அனைவரையும் பங்களிப்பு வழங்கச் செய்வதற்காக புதியதாக நியமனம் பெற்றவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். உரிய போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி நியமனம் கிடைக்கப் பெறாதவர்களின் எதிர்ப்பு தொடர்பாக கவனம் செலுத்திய ஜனாதிபதி, ஏதேனும் வகையில் அவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பின் அது தொடர்பாக விசாரணையொன்றினை மேற்கொண்டு தவறினை சீர்செய்து அவர்களுக்கு நீதியைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். (இ-7)

# தமிழீழ இலட்சினை பொறித்த முத்திரை பிரிட்டனில் வெளியீடு

(லண்டன்)

மாவீரர் தினத்தை முன்னிட்டு தமிழீழ இலட்சினைகள் பொறித்த முத்திரை பிரித்தானியாவில் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் இனப்படுகொலையில் இருந்து தப்பி உலகெங்கும் சிதறி வாழும் தமிழர்கள் தமது தேசத்தை மறவாமல் தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசால் திட்டமிட்டு நிகழ்த்தப்படும் இனப்படுகொலையை வேற்றினமக்களுக்கு தெரியப்படுத்தவும் தமது உரிமைப் போராட்டத்தின் நியாயத்தைந் உலக அரங்கில் இடித்துரைக்கவும் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.



அதன் ஒரு அங்கமாக நாம் ஒரு தேசிய இனம் என்பதை எடுத்துரைக்கும் எமது தேசிய சின்னங்களை உலகிற்கு பறைசாற்றும் முயற்சியில் பிரித்தானியா வாழ் தமிழ் இளையோர் இறங்கியுள்ளனர். இதன் முதல் படியாக, தமிழீழத் தேசிய சின்னங்களைத் தாங்கிய தபால் தலையை வெளியிட்டுள்ளனர்.

தமிழர் ஒருங்கிணைப்பு குழுவின் அரசியல் பொறுப்பாளரான லக்சன் தர்மலிங்கம் தலைமையில், பரஞ்சோதி ரமேஷ்கண்ணா, நகுலேஷ்வரன் சிவதீபன் மற்றும் ரத்னவேல் பிரசன்னா ஆகியோர் இணைந்து மாவீரர் தினத்தில் லண்டனில் உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைக்கப்பட்டன.

எமது தேசிய அடையாளங்களை தடை செய்து, அவற்றை மக்கள் மனங்களிலிருந்து நீக்கும் இலங்கை அரசின் திட்டமிட்ட சதியை முறியடித்து, எமது அடையாளங்களை உலகெங்கும் எடுத்துரைக்கும் நோக்கிலேயே இவற்றை தபால் தலை வடிவில் வெளிக் கொண்டு வந்துள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ-9)

அர்ப்பணிப்புடன்
66-வது அகவையில்



"சமூகஜோதி"
திரு.வாமதேவா
தியாகேந்திரன்




இன்று (02.12.2017) தனது 66 ஆவது பிறந்த தினத்தை
முன்னிட்டு பல இலட்ச ரூபா அறப்பணிகளை
மேற்கொள்ளும் எமது நிறுவனத் தலைவர்
உயர் திரு. வாமதேவா தியாகேந்திரன்
அவர்களை அவரது சமூக சேவை தொடர்வதற்கு பல நலன்
களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

பணிப்பாளர் மற்றும் பணியாளர்கள்
தியாகி அறக்கொடை நிறுவனம்
527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(இ-564) "அறப்பணியே எமது முதற்பணி"

STUDENTS SUCCESS CENTER

வெளிநாடு செல்வோருக்கான
அவசியமான மொழி
கற்கைநெறி

GERMAN

ஜேர்மன், சுவிஸ் செல்வோருக்கான
(Geothe- Zertifikat A1)

FRENCH

பிரான்ஸ், கனடா, சுவிஸ் செல்வோருக்கான பரீட்சை (DELF A1) அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்

DUTCH

நெதர்லான்ட் செல்வோருக்கான
அவசியமொழி

NOS

நோர்வே செல்வோருக்கான
அவசியமொழி

32 வருடம் அனுபவம் நிறைந்த பட்டதாரி ஆசிரியர் மூலம் கற்பிக்கப்படுகின்றது.

German, Franch, Dutch, Norway ஆகிய மொழிகள் மூன்று மாதத்தில் கற்பிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்

Address:- 320A, Mainstreet, Jaffna
076 479 4432, 077 617 6500
FB ID:- Training centre

# கூட்டு எதிர்க்கட்சி எம்.பிக்களை கூண்டோடு பதவி நீக்க முயற்சி

## சதியை சட்டரீதியாக எதிர்கொள்ளத்தயார் என்கிறார் பீரிஸ்

(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் 45 பேரின் பாராளுமன்ற உறுப்புரிமையை நீக்குவதற்கு அரசாங்கம் சூழ்ச்சி செய்து வருகிறது. எனினும் அவ்வாறான நிலை ஏற்பட்டால் அதனை அரசியல் ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் எதிர்கொள்வதற்கு கூட்டு எதிர்க்கட்சி தயாராகவுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.



கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் பொரளையிலுள்ள என்.எம். பெரேரா நிலையத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கம் கூட்டு எதிர்க்கட்சி மீது அச்சம் கொண்டுள்ளது. அதனால் தான் கூட்டு எதிர்க்கட்சியை அடக்குவதற்கு முயற்சிக்கிறது. எனவே கூட்டு எதிர்க்கட்சியில் இணைந்திருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் உடன்படிக்கை ஒன்றுக்கு வராதவிடத்து அவர்களை பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அச்சுறுத்தல் விடுக்கின்றனர்.

குறித்த உறுப்பினர்கள் உடன்படிக்கைக்கு வராதவிடத்து அவர்களை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேற்றி, அதன் பின்னர் அவர்களின் தொகுதிகளில் சிக்கல் நிலையை கொண்டு வந்து பாராளுமன்ற உறுப்புரிமையை நீக்குவதற்கு எதிர்பார்த்துள்ளனர்.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் நாற்பத்தைந்து பேரை பாராளுமன்றிலிருந்து வெளியேற்றுவது இலகுவான விடயமல்ல. மேலும் அரசாங்கம் மக்களின் அபிப்பிராயங்களுக்கு ஒருபோதும் செவிசாய்ப்பதாக இல்லை. மக்களால் நிராகரிக்கப்பட்ட 10 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் பாராளுமன்றில் தற்போதும் அங்கம் வகிக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் மேலும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட 45 உறுப்பினர்களை பாராளுமன்றிலிருந்து விலக்கிவிட்டு அதற்குப் பதிலாக மக்கள் நிராகரித்த உறுப்பினர்களை உள்வாங்குவதற்கு எதிர்பார்த்துள்ளனர்.

ஆகவே மக்கள் தொடர்பில் கரிசனை காட்டும் உறுப்பினர்களை பாராளுமன்றில் வைத்திருப்பதற்குப் பதிலாக அரசாங்கத்திற்கு முட்டுக் கொடுக்கும் உறுப்பினர்களை பாராளுமன்றில் வைத்திருப்பதற்கே அரசாங்கம் முனைகிறது.

கூட்டு எதிர்க்கட்சியிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களை அச்சமூட்டி அவர்களை உடன்பாட்டுக்கு கொண்டுவர முடியாது என்பதை அரசாங்கத்திடம் கூறிக்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# வளிமண்டல திணைக்களத்தில் தமிழ் அதிகாரிகள் இல்லை

(கொழும்பு)

வளிமண்டலவியல்திணைக்களத்தில் தமிழ் மொழி தெரிந்த அதிகாரிகளின் பற்றாக்குறை காரணமாக தங்களால் வானிலை முன்னறிவித்தல்கள் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் குறித்த முன்னெச்சரிக்கைகளை தமிழ் மொழியில் விடுக்க முடியாதுள்ளதாக வளிமண்டலவியல்திணைக்களத்தின் பணிப்பாளர் பிரேமலால் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் கடும் காற்று மற்றும் கனமழை பெய்து வருகின்ற நிலையில் அனர்த்த நிலைமைகள் குறித்து முன்னறிவித்தல்கள் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள போதும் இவ் அறிவித்தல்கள் தமிழ் மொழியில் வெளியிடப்படாதுள்ளதனால் தமிழ் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் இந்த பிரச்சினைக்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? என வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் சிங்களம் மற்றும் ஆங்கில மொழி பகுதிகளில் குறிப்பிட்ட நேரத்திற்கு வானிலை முன்னெச்சரிக்கைகள் தொடர்பான தகவல்கள்வெளியிடப்பட்டபோதும் தமிழ் மொழி மூலம் இறுதியாக கடந்த 27ஆம் திகதியே முன்னறிவித்தலொன்று விடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் தற்போதைய அனர்த்த நிலைமைகள் தொடர்பாக தமிழ் பேசும் மற்றும் வேறு மொழி தெரியாதவர்களுக்கு அது தொடர்பான உத்தியோகபூர்வ தகவல்களை அறிந்து கொள்வதில் சிக்கல் நிலைமைகள் ஏற்பட்டுள்ளன என்பதை நாமும் ஏற்றுக்கொள்கின்றோம்.

வளிமண்டலவியல்திணைக்களத்திற்கு தமிழ் தெரிந்த அதிகாரிகள் 4 பேராவது இருக்க வேண்டும். ஆனால் குறிப்பிட்ட கடமைக்காக ஒருவர் கூட கிடையாது. இதற்கான நியமனங்களை வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கம் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களின் பொறுப்பேயாகும்.

இரண்டிப்படி அவர்கள் குறித்த நியமனங்களை வழங்கி ஊழியர்களை பெற்றுத்தந்தால் எங்களால் அதனை செய்ய முடியும்.

அதனை செய்யாது எங்களால் தமிழ் மொழியில் முன்னெச்சரிக்கைகளை விடுப்பது சிக்கலானதே. இவ்வாறான நெருக்கடி நிலைமைகளில் மக்கள் உடனடியாக தெளிவு பெறும் வகையில் மூன்று மொழிகளிலும் அறிவித்தல்கள் விடுக்கப்பட வேண்டும். ஆகவே இதனை அரசாங்கம் கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பாதிக்கப்பட்டவர்களுக்கு உச்சபட்ச சிகிச்சை வசதிகள்

(கொழும்பு)

அசாதாரண வானிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான சிகிச்சைகள் வழங்க சுகாதார அமைச்சு உரிய ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

அனர்த்தங்களில் சிக்கி காயமடைந்தவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் சிகிச்சையளிக்க நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன உத்தரவிட்டுள்ளார்.

களுத்துறை பொது வைத்தியசாலை கூரையில் மரமொன்று முறிந்து விழுந்த காரணத்தினால் ஏற்பட்ட சேதங்களை சுகாதார அமைச்சரின் வேண்டுகோளின் பேரில் சீர் செய்யும் பணியில் நேற்று இராணுவத்தினர் களமிறக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்த நிலை காரணமாக மின்சாரம் துண்டிக்கப்பட்ட பிரதேசங்களில் அமைந்துள்ள வைத்தியசாலைகளுக்கு ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் பெற்றுக் கொள்ள வசதி செய்யுமாறும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அனில் ஜாசிங்கவுக்கு அமைச்சர் ராஜித சேனாரட்ன பணிப்புரை விடுத்துள்ளார். (இ-7)

# இலங்கையில் 1.6 மில்லியன் மாற்றுத்திறனாளிகள்

(கொழும்பு)

இலங்கையில் மாற்றுத் திறனாளிகள் 1.6 மில்லியன் பேர் காணப்படுவதாகவும், இது இலங்கையின் மொத்த சனத்தொகையில் 7.9 வீதம் எனவும் மத்திய வங்கி அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்களுக்கு ஏற்ற வாழ்வாதாரங்களை வழங்கி பொருளாதார ரீதியாக பாதுகாக்க வேண்டும். சமூகத்தில் மதிப்பு பெற்று அவர்களும் நாட்டை அபிவிருத்தி செய்யும் பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

புள்ளிவிபர திணைக்களத்தின் அறிக்கை பின்படி ஒவ்வொரு 1000 ஆண்களில் 77 ஆண்களும் ஒவ்வொரு 1000 பெண்களில் 96 பெண்களும் மாற்றுத்திறனாளிகளாக காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையிலுள்ள மொத்த மாற்றுத் திறனாளிகளில் 996, 936 பேர் பார்வை குறைபாட்டுடனும் 734, 213 பேர் கால்கள் ஊனமாகவும் 389, 077 பேர் செவி ஊனமாகவும் 343, 689 பேர் உள வள பிரச்சினைகள் உள்ளவர்களாகவும் 197575 சுய பாதுகாப்பு இல்லாதவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இலங்கையில் காணப்படும் 1.6 மில்லியன் மாற்றுத் திறனாளிகளில் 43 வீதம் ஆண்களாகவும் 57 வீதம் பெண்களாகவும் காணப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவரை அடையாளம் காண உதவுமாறு கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

சுமார் 60 வயது மதிக்கத்தக்க நபர் 25.11.2017 அன்று கைதடி வைத்தியசாலையிலிருந்து முற்பகல் 10 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலை விடுதி இலக்கம் 24 இல் அனுமதிக்கப்பட்டார்.

இடது காலில் இவருக்குக் காயம் உள்ளது. தற்போது விடுதி இலக்கம் 29 இல் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்நபர் மூலம் எதுவித தகவல்களும் பெற்றுக் கொள்ள முடியாமல் இருப்பதனால் இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் யாரவது இருந்தால் யாழ். போதனா வைத்தியசாலை விடுதி இல. 29 நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும் என பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-7)

# பாரதம்

# பாக்.பல்கலைக்கழகத்தில் தீவிரவாதிகள் தாக்குதல்

## 13 பேர் உயிரிழப்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் பெஷாவூர் நகரில் உள்ள வேளாண்மை பல்கலைக்கழகத்தில் நேற்று முகமூடி அணிந்த தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தான் நாட்டின் கைபர் பக்துன்க்வா மாகாணத்திற்குட்பட்ட பெஷாவர் நகரில் அரசுக்கு சொந்தமான வேளாண்மை பல்கலைக்கழகம் உள்ளது. முஹம்மது நபியின் பிறந்தநாள் என்பதால் இந்த பல்கலைக்கழகத்துக்கு நேற்று விடுமுறை அளிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், பர்கா அணிந்தபடி இந்த பல்கலைக்கழகத்துக்குள் நுழைந்த 4 தீவிரவாதிகள் அங்கிருந்தவர்களை நோக்கி கண்மூடித்தனமாக துப்பாக்கிகளால் சுட்டனர். இந்த திடீர் தாக்குதலில் 13 பேர் உயிரிழந்ததாகவும், சுமார் 15 பேர் காயமடைந்ததாகவும் பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

தாக்குதல் நடத்திய 4 பேரையும் பாதுகா... படையினர் சுட்டுக் கொன்றதாகவும் ... செய்திகள் குறிப்பிடும் நிலையில் இச்சம்... துக்கு தெஹ்ரிக்-இ-தலிபான் என்ற தீவி... அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. தங்களது ... குதலின் இலக்கு பல்கலைக்கழகம் ... என்றும் அருகாமையிலுள்ள பாகிஸ்... உளவுத்துறை அலுவலகத்தை தகர்க்கும் மு... என்றும் தெஹ்ரிக்-இ-தலிபான் வெளியிட்... செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ...

# ஆர்.கே.நகர் இடைத்தேர்தல் நேற்று வேட்பு மனுத்தாக்கல்







(சென்னை)

முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதா மறைந்ததையடுத்து காலியாக இருக்கும் ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதியில் எதிர்வரும் 21 ஆம் திகதி இடைத் தேர்தல் நடைபெறுகின்றது. இதில் ஆளுங்கட்சியான அ.தி.மு.க. சார்பில் மதுசூதனன், தி.மு.க. சார்பில் மருது கணேஷ் ஆகியோர் போட்டியிடுகின்றனர். இவர்களை தவிர டி.டி.வி .தினகரன் ஜெ.தீபா, கலைக்கோட்டுதயம் உள்ளிட்ட வேட்பாளர்களும் களத்திலுள்ளனர்.

இந்த தேர்தலில் போட்டியிட தி.மு.க. வேட்பாளர் மருது கணேஷ், டி.டி.வி. தினகரன் ஆகியோர் வேட்பு மனுத்தாக்கல் செய்த நிலையில் அ.தி.மு.க. வேட்பாளர் மதுசூதனனும் நேற்று வேட்ப மனு தாக்கல் செய்தார். (இ-7)

# ஜெயலலிதா நினைவிடத்தில் தினகரன் மலர்தூவி அஞ்சலி



(சென்னை)

ஆர்.கே. நகர் இடைத் தேர்தலின் டிடிவி தினகரன் நேற்று வேட்புமனுத் தாக்கல் செய்தார். முன்னதாக அவர் ஜெயலலிதா நினைவிடத்திற்கு சென்று மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். பின்னர் தொடர்ந்து அண்ணா, எம்.ஜி.ஆர் நினைவிடத்திலும் தினகரன் மரியாதை செலுத்தினார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் தெரிவிக்கையில்,

ஆர்.கே நகர் இடைத்தேர்தலில் போட்டியிட்டு ஆர்.கே நகர் தொகுதி மக்கள் உதவியுடன் 'இரட்டை இலையை மீட்போம். ஆர்.கே.நகர் தொகுதியில் எனக்கும் தி.மு.க வேட்பாளருக்கும் தான் போட்டி. எதிரிகளையும் துரோகிகளையும் வென்றெடுத்து இரட்டை இலையை மீட்டெடுப்போம் எனத் தெரிவித்தார். (இ-7)

# ஜப்பான் மன்னார் அகிஹிட்டோ 2019-ம் ஆண்டு பதவிவிலகல்

## பிரதமர் அறிவிப்பு

(டோக்கியோ)

ஜப்பான் மன்னர் அகிஹிட்டோ 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதி பதவி விலகவுள்ளதாக பிரதமர் ஷின்சோ அபே அறிவித துள்ளார்.

ஜப்பான் நாட்டின் 125-ஆவது மன்னரான அகிஹிட்டோ (வயது 83) வயோதியம், உடல் நலக்குறைவு ஆகியவற்றின் காரணமாக பதவி விலக விருப்பம் தெரிவித்தார். ஜப்பானில் கடந்த 200 ஆண்டுகளில் எந்த மன்னரும் பதவி விலகியதாக சரித்திரம் இல்லை. அங்கு கடைசியாக 1817 ஆம் ஆண்டு, கொகக்கு என்ற மன்னர்தான் பதவி விலகியுள்ளார். அதன்பின்னர் யாரும் பதவி விலகியது இல்லை.

பதவி விலகுவதற்கான விதிகளும் சட்டத்தில் இல்லை என்பதால், மன்னர் பதவி விலகுவதற்கான மசோதா கடந்த ஜூன் மாதம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதையடுத்து, மன்னர் பதவி விலகுவதற்கான நடைமுறைகள் தொடங்கியது.

இந்நிலையில், மன்னர் அகிஹிட்டோ 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதி பதவி விலக உள்ளதாக பிரதமர் ஷின்சோ அபே நேற்று அறிவித்தார். அகிஹிட்டோ பதவி விலகும் திகதியை முடிவு செய்வதற்காக நடத்தப்பட்ட இம்பீரியல் கவுன்சில் சிறப்பு கூட்டத்தில் ஒருமனதாக இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.



மன்னர் பதவி விலகல் மற்றும் புதிய மன்னர் முடிசூட்டும் விழா ஆகிய நிகழ்வுகளை மக்கள் கொண்டாடும் வகையில் அரசு ஏற்பாடுகள் செய்யும் என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

மன்னர் அகிஹிட்டோ பதவி விலகிய மறுநாள் அவரது மூத்த மகனான பட்டத்து இளவரசர் நருஹிட்டோ (வயது 57) மன்னராக முடிசூட்டப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது மன்னர் அகிஹிட்டோ அமர்ந்த 'கிறிசாந்தமம்' அரியணையும் நருஹிட்டோவிடம் ஒப்படைக்கப்படும். (இ-7)

# ஈரானை மீண்டும் உலுக்கிய பூகம்பம்

(தெஹ்ரான்)

ஈரானின் கெர்மான் நகரில் நேற்று ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கம் காரணமாக அப்பகுதியில் உள்ள கட்டடங்கள் கடுமையாக குலுங்கின. ஈரானின் கிழக்கு பகுதியில் உள்ள கெர்மான் மாகாணத்தில் நேற்று கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது.

சுமார் 13 இலட்சம் மக்கள் வசிக்கும் கெர்மான் நகரில் இருந்து 60 கி.மீ. தொலை வில் 10 கி.மீ. ஆழத்தில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மும்பை தாக்குதல் தீவிரவா... ஹபீஸ் சயீத் மீண்டும் கைது

## பாகிஸ்தான் அரசு நடவடிக்கை...

(இஸ்லாமாபாத்)

மும்பை தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்டு சதிச் செயலில் ஈடுபட்ட ஹபீஸ் சயீத் விடுதலைக்கு இந்தியா உட்பட சர்வதேச நாடுகள் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் பாகிஸ்தான் அரசு மீண்டும் கைது செய்து வீட்டுக் காவலில் வைத்தது.

பாகிஸ்தானில் தடை செய்யப்பட்ட லஸ்கர்- இ-தொய்பா தீவிரவாத இயக்க தலைவர் ஹபீஸ் சயீத். தற்போது ஜமர்தா உத்தவா என்ற அமைப்பை நடத்தி வருகிறார்.

மும்பை தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்டு சதிச் செயலில் ஈடுபட்டார். தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட இவரது தலைக்கு ரூ. 6 கோடியே 50 இலட்சம் பரிசு தொகையை அமெரிக்கா அறிவித்துள்ளது.

ட்ரம்ப் ஜனாதிபதியாக பதவி ஏற்ற பிறகு தீவிர வாதிகளை ஒடுக்க பாகிஸ்தானுக்கு அமெரிக்கா நெருக்கடி கொடுத்தது. அ... தொடர்ந்து ஹபீஸ் சயீத் கைது செய்ய... லாகூரில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டா...

இதற்கிடையே அவனது வீட்டுக் காவ... மேலும் 3 மாதங்களுக்கு நீட்டிப்பு செய்ய... லாகூர் நீதிமன்றில் பஞ்சாப் மாகாண ... கோரிக்கை விடுத்தது.

ஆனால் ஹபீஸ் சயீத் மீது குற்றப் பின்ன... எதுவும் இல்லை எனக் கூறி அவனை நீதி...றம் விடுதலை செய்தது.

இதற்கிடையே ஹபீஸ் சயீத் விடுதலை... இந்தியா, பிரான்ஸ், அமெரிக்கா உள்ள... சர்வதேச நாடுகள் எதிர்ப்பும் கண்டனமும் தெரிவித்தன. அதை தொடர்ந்து பாகிஸ்தான் அரசு அவரை மீண்டும் நேற்று கைது செய்து வீட்டுக் காவலில் வைத்தது.

பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் செயலில் ஈடுபட்டதால் சயீத் கைது செய்யப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. (இ-7)

# வடகொரியாவின் நடவடிக்கைக்கு அமெரிக்காவே முழுக்காரணம்

## ரஷ்யா குற்றச்சாட்டு

வடகொரியா அதன் அணு வாயுதத் திட்டத்தை முடுக்கி விட, அமெரிக்காவே முழுக் காரணமாக அமைந்ததாக, ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் செர்ஜி லவ்ரோவ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பெலாரஸின் தலைநகரான மின்ஸ்க்கு விஜயம் செய்த அவர், ஊடகவியலாளர்கள் சந்திப்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கருத்துத் தெரிவித்தபோதே, இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தபோது, 'வடகொரியா அதன் அணுசக்தித் திட்டத்தை முடுக்கி விட, அமெரிக்காவின் நடவடிக்கைகளே பிரதான காரணமாக அமைந்துள்ளன. இந்நிலையில், வடகொரியா மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பது சாத்தியமாக அமையாது. இதற்குப் பதிலாக, அந்நாட்டுடன் அமைதியான முறையில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்' என்வும் வலியுறுத்தியுள்ளார்.

வடகொரியா புதிய வகையான ஏவுகணைச் சோதனையை கடந்த 29ஆம் திகதி நடத்தியதைத் தொடர்ந்து, அந்நாட்டுடன் இராஜதந்திர மற்றும் வர்த்தக உறவுகளை முறித்துக்கொள்ள அனைத்து நாடுகளும் முன்வர வேண்டுமென்று அமெரிக்கத் தூதுவர் நிக்கி ஹாலே அழைப்பு விடுத்துள்ளார். இந்த அழைப்பை ரஷ்ய வெளி விவகார அமைச்சர் செர்ஜி லவ்ரோவ் நிராகரித்துள்ள நிலையில், அவரது மேற்படி கருத்து வெளிவந்துள்ளது. (இ-7)

# வெளிநாடு

ல்
ல்
ழப்பு
ும் பாதுகாப்புப்
ாகவும் அந்த
் இச்சம்பவத்
ன்ற தீவிரவாத
ாங்களது தாக்
ழகம் அல்ல
பாகிஸ்தான்
ர்க்கும் முயற்சி
வெளியிட்டுள்ள
ள்ளது. (இ-7)

வாதி
கைது
வடிக்கை
ந்தது. அதைத்
செய் யப்பட்டு
கப்பட்டார்.
டுக் காவலை
ு செய் யும்படி
ாகாண அரசு
றப் பின்னணி
னை நீதிமன்
விடுதலைக்கு
கா உள்ளிட்ட

## ஜின்பிங்-ஒபாமா சந்திப்பு



(பீஜிங்)

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா, சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். குறித்த சந்திப்பு பீஜிங் நகரில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றதாக சீன தேசிய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அரசியல் தலைவர்களுக்கு இடையில் இடம்பெற்ற சந்திப்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக சீன தேசிய ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

ஒபாமா அமெரிக்க ஜனாதிபதியாக செயற்பட்ட காலத்தில் சீன-அமெரிக்க உறவுகளை வலுப்படுத்த எடுத்த நடவடிக்கைகளுக்கு சீன ஜனாதிபதி பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

இதேவேளை இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர உறவு, பரிமாற்றங்கள், ஒத்துழைப்புக்களுக்கு சாதகமான பாத்திரத்தை வகிப்பதாக ஒபாமா தெரிவித்தார்.

இந்த நிலையில் சீனாவில் இடம்பெறவுள்ள உலக கல்வி மாநாட்டில் ஒபாமா விசேட உரையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# குண்டுத் தாக்குதலில் 520 பேர் உயிரிழப்பு!

(மொகாடிஷு)

**சோமாலியா தலைநகர் மொகாடிஷுவிலுள்ள ஹோட்டலில் நடந்த வெடிகுண்டுத் தாக்குதலில் பலியானவர்கள் எண்ணிக்கை 520 -ஐ தாண்டியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**



சோமாலியா நாட்டின் தலைநகர் மொகாடிஷுவில் கடந்த மாதம் 2 வெடிகுண்டு தாக்குதல்கள் இடம் பெற்றன. மொகாடிஷுவில் வெளியுறவுத்துறை அமைச்சகம் அருகே உள்ள சபாரி என்ற ஹோட்டல் மீது தீவிரவாதிகள் வெடிகுண்டு நிரப்பிய லொறியை மோதி வெடிக்க செய்தனர்.

அதில் ஹோட்டலில் பெரும் பகுதி யும், அதன் அருகே இருந்த பல கட்டடங்களும் இடிந்து தரைமட்ட மாகின. வீதியில் நிறுத்தியிருந்த கார்கள், லொறிகள், வான்கள் எரிந்தன. குண்டு வெடித்ததால் பீதி அடைந்த மக்கள் அங்கிருந்து வெளியேறினர். தாக்குதல் நடந்த இடத்தில் உயிரிழந்தவர்களின் உடல்கள் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன.

இந்த பயங்கர வெடிகுண்டுத் தாக்குதலில் 358 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும், ஏராளமானோர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியானது.

இந்நிலையில், இந்த தாக்குதல் தொடர்பாக அமைக்கப்பட்ட விசாரணை ஆணை அதி காரிகள், வெடிகுண்டுத் தாக்குதலில் பலியானவர்கள் எண்ணிக்கை 500-ஐ தாண்டியுள்ளது எனத் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் மேலும் கூறுகையில், சோமாலியாவில் உள்ள ஹோட்டலில் நடத்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதலில் கடந்த ஒக்டோபர் மாதம் இறுதி வரை 358 பேர் பலியாகி இருந்தனர். பலர் சிகிச்சை பெற்று வந்தனர்.

இதற்கிடையே, கடந்த ஒரு மாதத்தில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பலர் உயிரிழந்துள்ளனர். இதனால் பலி எண்ணிக்கை 521 ஆக உயர்ந்துள்ளது. மேலும், 300க்கு மேற்பட்டோர் பல்வேறு வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என குறிப்பிட்டுள்ளனர்.

சோமாலியாவில் 2007 ஆம் ஆண்டு முதல் தீவிரவாதிகளின் தாக்குதல் தொடங்கியது. அவர்கள் நடத்திய தாக்குதலில் இதுவே மிக மோசமானதாக கருதப்படுகிறது.

தாக்குதலில் பலியானோருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் சோமாலியாவில் 3 நாள் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இராஜினாமாவை வாபஸ் பெற லெபனான் பிரதமர் தீர்மானம்

(பெய்ரூட்)

தனது இராஜினாமாவை வாபஸ் பெற்றுக்கொள்ளத் தீர்மானித்துள்ளதாக, லெபனான் பிரதமர் ஸாட் அல் ஹரிரி அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக லெபனான் ஜனாதிபதி மைக்கேல் அவுன் மற்றும் சபாநாயகர் நபிஹ் பெரி (Nabih Berri) ஆகியோருடன் இணைந்து அடுத்த வாரம் நாட்டு மக்களுக்கு அறிவிக்கவுள்ளதாகவும், கடந்த புதன்கிழமை இரவு விடுத்துள்ள அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.




சவுதி அரேபியாவில் தங்கியிருந்த பிரதமர் ஹரிரி, அந்நாட்டு தொலைக் காட்சிச் சேவையொன்றில் திடீரெனத் தோன்றி, தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும் அதன் காரணமாக தனது பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்வதாகவும் கடந்த 4ஆம் திகதி அறிவித்திருந்தார்.

இருப்பினும், இவரது இராஜினாமாவை ஏற்க விரும்பாத ஜனாதிபதி அவுன், பிரதமர் ஹரிரியை உடனடியாக நாட்டுக்குத் திரும்புமாறு வலியுறுத்தியிருந்தார்.

அப்போது, லெபனானின் சுதந்திரதின நிகழ்வில் கலந்து கொள்ளும் நோக்கில் தான் நாடு திரும்புவதாகக் கூறியிருந்த பிரதமர் ஹரிரி, லெபனானின் சுதந்திரதின நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார். அத்துடன், ஜனாதிபதி அவுனையும் அவர் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இதனையடுத்து, பிரதமரின் இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது. (இ-7)

# 44 பேருடன் காணாமற்போன
# ஆர்ஜெண்டினா நீர்மூழ்கிக்கப்பலை தேடும்பணி நேற்று கைவிடப்பட்டது



(ஆர்ஜெண்டினா)

44 பேருடன் காணாமற்போன ஆர்ஜெண்டினா கடற்படையினருக்குச் சொந்தமான நீர்மூழ்கிக்கப்பலைத் தேடும் நடவடிக்கை கைவிட்டுள்ளதாக, கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

ஆர்ஜெண்டினா கடற்படையினருக்குச் சொந்த மான சன் குவான் எனும் நீர்மூழ்கிக்கப்பல், தெற்கு அட்லாந்திக் கடற்பரப்பில் சென்று கொண்டிருந்தபோது, கடந்த நவம்பர் மாதம் 15ஆம் திகதி திடீரென்று காணாமல் போயிருந்தது. காணாமல் போன கப்பலை கடந்த இரண்டு வாரங்களாகத் தேடி வந்தபோதும், அக்கப்பல் தொடர்பாக எந்த விதி தகவலும் கிடைக்கவில்லை.

இந்நிலையில், கப்பலைத் தேடும்நடவடிக்கையை கைவிட்டுள்ள தாகவும், கடற்படையினர் நேற்று அறிவித்துள்ளனர்.

இந்தக் கப்பலைத் தேடுவதற்காக கடுமையான முயற்சி எடுக்கப்பட்டபோதிலும், அது பலனளிக்கவில்லையென வும், கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கடைசியாக கப்பல் இருந்த இடத்துக்கு அருகில் வெடிப்பு இடம்பெற்றிருக்கலாமென்று சந்தேகம் எழுந்துள்ளதையடுத்து, கப்பலிலிருந்தவர்கள் உயிருடன் இருப்பதற்கான நம்பிக்கையும் குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# அமெரிக்க மேயராக சீக்கிய பெண் தேர்வு



(நியூயோர்க்)

அமெரிக்கா வில் முதல் முறையாக, சீக்கிய மதத்தை சேர்ந்த பெண் ஒருவர், மேயராக தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள, யுபா நகரில், 2014இல் நடந்த தேர்தலில் வெற்றி பெற்ற, சீக்கிய மதத்தை சேர்ந்த பெண், பிரீத் டிட்பால், தற்போது, துணை மேயராக பதவி வகிக்கிறார். தற்போது, யுபா நகர மேயராக, பிரீத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இதையடுத்து, 5இல், மேயராக பதவியேற்கவுள்ளார். அமெரிக்காவின் பிற பகுதிகளில், சீக்கிய மதத்தை சேர்ந்த சிலர், மேயர் பதவி வகித்துள்ள போதும், அந்த மத த்தை சேர்ந்த பெண் ஒருவர், அமெரிக்காவில் மேயராக தேர்ந்தெடுக்கப்படுவது இதுவே முதல் முறையாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சரத் பொன்சேகா- காமினி லொக்குகே தகாத வார்த்தைகளால் கடும் மோதல்



(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடந்த விவாதத்தின் போது, அமைச்சர் சரத் பொன்சேகாவும் கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகேயும் தகாத வார்த்தைகளால் கடுமையாக வாக்குவாதம் செய்தனர்.

வரவு-செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் நேற்று முன்தினம் அமைச்சர் சரத் பொன் சேகாவின் பிராந்திய அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் குறித்த விவாதம் இடம்பெற்றது.

இதன்போது, கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே, அமைச்சர் சரத் பொன்சேகாவை தனிப்பட்ட முறையில் விமர்சித்து அவமானப் படுத்தினார்.

இதையடுத்து சரத் பொன்சேகாவுக்கும் காமினி லொக்குகேவுக்கும் இடையில் கடுமையான வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.


இருவரும் ஒருவர் மீது மற்றவர் மிருகங்களின் பெயர்களைக் கூறியும் இழிவான சொற்களாலும் விமர்சித்தனர்.

அப்போது சபைக்குத் தலைமை தாங்கிய ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க, இரண்டு உறுப்பினர்களும் பயன்படுத்திய நாடாளுமன்றிற்கு ஒவ்வாத வார்த்தைகளை பதிவேடுகளில் இருந்து நீக்குமாறு உத்தரவிட்டார்.

அத்துடன், "இரண்டு பேரும் என்ன செய்கிறீர்கள்? நீங்கள் நாடாளுமன்றத்தையும் உங்களைத் தெரிவு செய்த மக்களையும் இழிவுபடுத்துகிறீர்கள். வேறெங்காவது போய் உங்கள் விவாதத்தை வைத்துக் கொள்ளுங்கள்" என்று சபைக்குத் தலைமை தாங்கிய பிமல் ரத்நாயக்க காட்டமாகத் தெரிவித்தார். (இ-7)



# கிறுக்கப்பட்ட நாணயத் தாள்கள் செல்லுபடியாகாது இலங்கை மத்திய வங்கி அறிவிப்பு




(கொழும்பு)

எழுதுகருவிகளால் கிறுக்கப்பட்ட, வேண்டுமென்றே சேதப்படுத்தப்பட்ட, மாற்றம் செய்யப்பட்ட, அல்லது உருச்சிதைக்கப்பட்ட நாணயத் தாள்கள், எதிர்வரும் டிசெம்பர் 31ஆம் திகதிக்கு பின்னர் செல்லுபடியாகாது என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இவ்வாறான நாணயத் தாள்கள் டிசெம்பர் 31ஆம் திகதிக்குப் பின்னர் வங்கிகளினால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்றும், அவை பெறுமதியற்றவையாகி விடும் என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அத்துடன், நாணயத் தாள்களின் மீது எழுதுதல், வரைதல், முத்திரையிடல், வெட்டுதல் அல்லது சேதப்படுத்தல் தண்டனைக்குரிய குற்றம் என்றும் இலங்கை மத்திய வங்கி எச்சரித்துள்ளது. (இ-7)

# ஆசிரிய உதவியாளர்களை ஆசிரிய சேவைக்கு இணைக்க முடியாது

## கல்வியமைச்சர் காரியவசம் தெரிவிப்பு



(கொழும்பு)

ஆசிரிய உதவியாளர்களை ஆசிரியர் சேவைக்கு இணைக்க முடியாதென தெரிவித்த கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் ஆசிரிய பயிற்சி சான்றிதழுள்ளவர்களை மாத்திரம் நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு, மலையகத்திலுள்ள பின்தங்கிய பாடசாலைகளுக்கு கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்ட 3 ஆயிரம் ஆசிரிய உதவியாளர்களை ஆசிரியர் சேவைக்கு இணைக்குமாறு ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

23/2 நிலையியற் கட்டளையின் கீழ் கேள்வி எழுப்பிய அநுரகுமார திஸாநாயக்க எம்.பி.2015 ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் பின்தங்கிய பாடசாலைகளுக்காக உயர்தரம் சித்தியடைந்த மூவாயிரம் பேர் அமைச்சினால் நியமிக்கப்பட்டனர். வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் தோட்டப்பாடசாலைகளிலும் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களுக்காக பல் வேறு சந்தர்ப்பங்களில் இவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இவர்களை ஆசிரியர் சேவையின் 3- II பிரிவுக்கு இணைக்க முடியுமான போதும் அவர்களைத் தொடர்ந்து 6 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கி தொடர்ந்து சேவைபெற்று வருகின்றனர். பின்தங்கிய பாடசாலைகளில் இவர்கள் தான் முழுமையாக கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர் என தெரிவித்த அவர், இவர்களுக்கு சிறிய கொடுப்பனவே வழங்கப்படுவதாகவும் இது முழு ஆசிரியர் சேவைக்கும் இழுக்கை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவர்களுக்கு போக்குவரத்து கொடுப்பனவு கூட வழங்கப்படுவதில்லை. இவர்களை ஆசிரியர் சேவைக்கு உள்வாங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம்,

ஆசிரியர் உதவியாளர்களாக இவர்கள் நியமிக்கப்படுகையில் 6 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டது. நாம் 2017 முதல் 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுத்தோம்.

இவர்கள் ஆசிரியர் சேவை பயிற்சிக்குப் பின்னர் 3-I தரத்திற்கு இணைப்பதாக நியமனம் வழங்கும் போது குறிப்பிடப்பட்டிருந்தது. 3- II தரத்திற்கு இவர்களை நியமிக்க முடியாது.

31,060 ரூபாய் சம்பளம் கிடைக்கக் கூடிய ஆசிரியர் சேவை தரம் 3- I இற்கு பயிற்சி பெற்றவர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## அழைப்பிதழ் வந்ததும்...

அழைப்பிதழ் விடயத்தில் பலபேர் விதவிதமாகக் கோட்டை விட்டு விடுகிறார்கள்.

எங்காவது வைத்துவிட்டுத் தேடுவார் கள்; அல்லது மறந்தே விடுவார்கள. என் னது! விசேஷம் முடிஞ்சு போச்சா? என்பார் கள். கடைசிவரை செல்வதா? வேண்டாமா? என்கிற குழப்பத்தையும் அதனுடன் சேர்த்துக் கொள்வார்கள்.

நாம் இல்லாத போது தரப்பட்ட அழைப்பிதழ்களுக்கோ தபால் மூலம் வந்த அழைப்பிதழ்களுக்கோ ஒரு கடிதம் போடுவது நல்லது. நம் உமாவுக்கு கல்யாணம் என்பதை அறிந்து மகழ்ச்சி. அவசியம் வந்து கலந்து கொள்கின்றேன் என்று கடிதம் போட்டு விட் டுப் போய்ப் பாருங்கள. ஸ்பெஷல் கவனிப்புத் தனியாகத் தெரியும். அல்லது ஒரு போன் . வந்தீர்களாமே! சந்தோசம்! என்று.

திருமணத்தில் கலந்துகொள்வது என் பது அப்புறம், அழைப்பிதழ் கிடைத்தது எனத் தெரிவிப்பதே ஒரு மிக நல்ல பண்பு.

அழைப்பிதழ் கைக்கு வந்ததுமே ஓர் ஐந்து நிமிடம் மட்டும் செலவிட்டு, அவற்றையெல்லாம் மனதில் பதித்துக் கொள்ள வேண்டும். இது பல விதங்களில் உதவும். அழைப்பிதழ் காணாமல் போய்விட்டால் கூடச் சமாளித்துக் கொள்ளலாம். அதே திகதியில் வேறு .வேலை வந்தால் அந்த நாளில் நான் திருமணத்திற்குப் போக வேண்டும் என்று இதமாக மறுக்கலாம். அழைப்பிதழைப் புரட்டிப் பார்த்து எதையும் பதித்துக் கொள்ளாமல் இருந்தால் அது பெருங்குழப்பத்தில் தான் போய் முடியும்.

விஷேசத்திற்கு யார் யார் செல்வது, எப்படிச் செல்வது என்பதில் தெளிவு வேண் டும். அதே விஷேசத்தன்று பார்த்துக் கொள் ளலாம். நாள் தான் இருக்கின்றதே என்று தள்ளிப் போடக் கூடாது.

எந்தெந்த வேளை திருமணச் சாப்பாடு; நம் வீட்டில் சாப்பாடு என்பதைத் தெளிவு படுத்திச் சொல்லிவிட்டால் வீட்டில் உள்ள பெண்களுக்குத் தெளிவு பிறக்கும். பல ஆண்களுக்கு சமையல் கட்டுப் பிரச்சினைகள் புரிவதே இல்லை. சமயங்களில் உணவு வீண்; அல்லது பட்டினி இரண்டுமே தவிர்க்கப்படலாம்.

வெளியூர் என்றால் உடனே டிக்கெட்டுக்கு ஏற்பாடு செய்து திரும்புவதற்கும் எழுதிப் போட்டுவிட வேணடும். திருமணம் நடத்துபவர்களுக்கோ எழுதிப் போட்டுவிட்டால் இதை மகிழ்ச்சியோடு செய்வார்கள்.

மாப்பிள்ளை என்ன செய்கிறார்? என்ன படிச்சிருக்கார்? பெண்ணின் அப்பா என்ன தொழில்? என்றெல்லாம் திருமண வீட்டில் பல பேர் விசாரிப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

வேறொன்றுமில்லை. அழைப்பிதழை அவர்கள் பார்த்த அழகு அது!

அழைப்பிதழில் உள்ள பெஸ்ட் காம்பிளிமென்சில் காணப்படும் பெயர்கள், பதவிகள், தொழில்கள் கூட மனதில் பதித்துக் கொண்டால் ஓ! நீங்கதானா அது! அழைப்பிதழிலில் உங்க பெயரைப் பார்த்தேன். இப்போ நேரே பார்க்கிறேன் என்று ஓர் அசந்து அசத்திடலாம். அவ்வளவுதான் அந்த மனிதர் வாழ்நாள் முழுக்க நம்மை மறக்க மாட்டார். திருமணம் முடிந்து அழைப்பிதழைக் கிழித்துப் போடு முன் டயரியில் குறித்துக் கொள்ள வேண்டும். மணநாள் வாழ்த்து அனுப்பி மறக்க முடியாதவர்களின் பட்டியலில் சேர வேண்டும்.

இதை விடுத்து எங்காவது போய்விட்டு தேடிக் கொண்டும், திருமணம் முடிந்ததும் கண்டுபிடித்து அச்சச்சோ! போட்டுக் கொண்டு இருப்பவர்களைப் பார்த்தால் அழுவதா? சிரிப்பதா? என்றே தெரியவில்லை.

**லேனா தமிழ்வாணன்**

# ஜனாதிபதியின் சகோதரனை கொலை செய்த குற்றவாளிக்கு 18 ஆண்டுகள் சிறைத் தண்டனை

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சகோதரனைப் படுகொலை செய்த குற்றவாளிக்கு நேற்று முன்தினம் 18ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் இஷான் லக்மால் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டு, அவருக்கு 18 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொலை செய்யப்பட்ட பிரியந்த சிறிசேனவின் மனைவிக்கு பத்து இலட்சம் ரூபா நஷ்டஈடும் நீதிமன்றத்துக்கு அபராதத் தொகையாக 20 ஆயிரம் ரூபாவும் செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

நஷ்டஈட்டுத் தொகையை செலுத்தத் தவறினால் மேலதிகமாக இரண்டு வருட சிறைத்தண்டனையும், அபராதத் தொகையை செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலதிகமாக ஆறுமாத சிறைத்தண்டனையும் அனுபவிக்க நேரிடும் என்றும் நீதிபதி நிமல் ரணவீர தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சகோதரர் பிரியந்த சிறிசேன படுகொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சீரற்ற காலநிலை காரணமாக உயிரிழந்த மீனவர்களுக்கு 20 இலட்சம் ரூபாய் நட்டஈடு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையின் காரணமாக உயிரிழந்த மீனவர்களின் குடும்பத்தினருக்கு தலா இருபது இலட்சம் ரூபா வீதம் நட்டஈடு வழங்கப்படும் என்று அமைச்சர் மகிந்த அமரவீர அறிவித்துள்ளார்.

இதில் பத்து இலட்சம் ரூபா தொகை தேசிய காப்புறுதி நிதியத்தில் இருந்தும், மேலதிகமாக பத்து இலட்சம் ரூபா தொகை அமைச்சின் மூலமாகவும் மீனவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், இயற்கை அனர்த்தம் காரணமாக உயிரிழந்த மீனவர்களின் எண்ணிக்கை இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

இதேவேளை, இதுவரை ஐந்து மீனவ படகுகள் முற்றாக சேதமடைந்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. (இ-7)

# கூட்டு எதிர்க்கட்சியிடம் கொள்கைத் திட்டம் இல்லை

## குணதாச அமரசேகர விமர்சனம்

(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சியினரிடம் கொள்கைத் திட்டம் ஏதும் கிடையாது என்று தேசிய அமைப்புகளின் ஒருங்கிணைப்புத் தலைவர் குணதாச அமரசேகர விமர்சித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

தற்போதைய நிலையில் சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் பங்காளிக்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஏற்ற கொள்கையொன்றையே கடைப்பிடித்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

எனவே எதிர்வரும் தேர்தல்களில் தேசிய கொள்கைத் திட்டமொன்றை முன்னெடுப்பது தொடர்பில் பொதுமக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கு கூட்டு எதிர்க்கட்சி முன்வரவேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, கட்சியைத் தோற்கடிக்கும் நோக்கத்தில் எதுவித கொள்கைத் திட்டமும் இன்றி கூட்டு எதிர்க்கட்சி செயற்படுவதை விடுத்து, தேசிய முக்கியத்துவம் மிக்க விடயங்களை முன்கொண்டு செல்ல பாடுபட வேண்டும் என்றும் தேசிய அமைப்புகளின் ஒருங்கிணைப்புத் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார். (இ-7)


இலங்கை வங்கி BOC

## இலங்கை வங்கி

# விலை மனுக்கோரல்

**இலங்கை வங்கியின் தெரிவு செய்யப்பட்ட தங்க நகைப் பொதிகளின் விற்பனை**
**கேள்வி இல. 2017/NP/12**

இலங்கை வங்கியின் தெரிவு செய்யப்பட்ட தங்க நகைப் பொதிகளை விற்பதற்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விக்கான விண்ணப்பங்களை செயற்பாட்டு முகாமையாளர் (வடமாகாணம்), இலங்கை வங்கி, வடமாகாண அலுவலகம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் இடமிருந்து மீளளிக்கப்படாத தொகையாக கிளை ஒன்றிற்கு ரூபா 10,000/- + வரிகள் (VAT+NBT) இனையும், மீளளிக்கப்படும் தொகையாக கிளை ஒன்றிற்கு ரூபா 250,000/- இனையும் வைப்புச் செய்ததன் பின்னர் பெற்றுக் கொள்ள முடியும். (காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது) விலை கோருபவர்கள் மீளளிக்கப்படும் மற்றும் மீளளிக்கப்படாத தொகைகளை வைப்பிலிடும் போது பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

வியாபார நிறுவனமெனின்-வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதி/ கூட்டிணைவுச் சான்றிதழின் பிரதி

தனிப்பட்ட நபரெனின்- தேசிய அடையாள அட்டையின் பிரதி/சாரதி அனுமதிப் பத்திரத்தின் பிரதி.

**விண்ணப்பதாரர்கள் பின்வரும் கிளையில் தங்கநகைப் பொதிகளை பரிசீலிக்க முடியும்.**

| கிளைகள் | நடைபெறும் இடம் மற்றும் முகவரி | பரிசீலனைத் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|
| இலங்கை வங்கி<br><br>1. முல்லைத்தீவு கிளை<br>2. யாழ்ப்பாணம் இரண்டாம் மேற்தரக் கிளை<br>3. கரணவாய் கிளை<br>4. பூவரசங்குளம் கிளை<br>5. தொகுதி I<br>I. காரைநகர் கிளை<br>II.நெடுந்தீவு கிளை<br>III.காங்கேசன்துறை கிளை<br>IV.மருதன்கேணி கிளை<br>V.சாவல்கட்டு கிளை<br>VI.பூநகரி கிளை<br>VII.விசுவமடு கிளை<br>VIII.செட்டிக்குளம் கிளை<br>IX.மல்லாவி கிளை | இலங்கை வங்கி<br><br>யாழ்ப்பாணம் அதி மேற்தர கிளை | திகதி:10.12.2017<br>நேரம்: மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 4.00 மணிவரை<br><br>பரிசீலனை நேரத்தினை விண்ணப்பதாரர்கள் வட மாகாண செயற்பாட்டு முகாமையாளர் ஊடாக முற்பதிவு செய்து கொள்ள வேண்டும்.<br><br>பெயர் : திரு.க.சகாதேவன்<br>தொலைபேசி இல:<br>021 222 4683,<br>077 512 1983 |

கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும் இறுதித் திகதி மற்றும் நேரம்: 14.12.2017 பி.ப. 3.00 வரை

கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி மற்றும் நேரம்: 15.12.2017 மு.ப.10.00 வரை

❖ விண்ணப்பதாரர் ஒன்றிற்கு மேற்பட்ட தங்க நகை பொதிகளுக்கு விலை கோர முடியும். அதேசமயம் அவ்விலை கோரல்கள் யாவும் ஒரே விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டு ஒரே கடித உறையினுள் இடப்படலாம்.

❖ கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி இலக்கம், விபரம் மற்றும் திறக்கப்படும் திகதி ஆகியன குறிப்பிடப்பட வேண்டும்.

❖ முத்திரையிடப்பட்ட விலை கூறல்களை 15.12.2017 (கேள்வி முடிவுத் திகதி) மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பு உதவிப் பொது முகாமையாளர் (வட மாகாணம்), இலங்கை வங்கி, வட மாகாண அலுவலகம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்ப வேண்டும். அல்லது மேற்கூறப்பட்ட முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இட வேண்டும். காலதாமதமாகிய விலை கூறல்கள் யாவும் நிராகரிக்கப்படுவதோடு திறக்கப்படாது விலை கூறியோரிற்கு மீள அனுப்பப்படும். காலதாமதமான விலை கூறல்கள் தொடர்பாக தபாலில் இட்டமைக்கான சான்றுகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

❖ விலை கூறல்கள் ஏற்கப்படும் முடிவு நேரத்தின் பின்னர் உடனடியாக கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். விலை கோரியவர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி (விலைகூறிய ஒருவருக்கு ஒரு பிரதிநிதி) கேள்விகள் திறப்பின் போது சமுகமளிக்கலாம்.

❖ தெரிவு சம்பந்தமாக தெரிவு செய்யப்பட்ட விலை கூறியோர்/களுக்கு மாகாண உதவிப் பொது முகாமையாளரினால் அறியத்தரப்படும்.

❖ தெரிவு செய்யப்பட்ட விலை கூறியோர், தெரிவு செய்யப்பட்டமை அறியத்தரப்பட்ட நாளிலிருந்து 3 வேலை நாட்களினுள் முழுத் தொகையையும் செலுத்த வேண்டும். முழுத் தொகையை செலுத்திய நாளிலிருந்து 7 நாட்களினுள் சம்பந்தப்பட்ட கிளையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட விலை கூறியவரிற்கு தங்கநகைப் பொதி கையளிக்கப்படும்.

**எக் காரணமும் குறிப்பிடாது விலை கூறல் எல்லாவற்றையும் அல்லது எவற்றையேனும் ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை இலங்கை வங்கிக்கு உண்டு.**

தொலைபேசி இல: 021 222 3985
திகதி: 02.12.2017

உதவிப் பொது முகாமையாளர் (வடமாகாணம்),
இலங்கை வங்கி,
வட மாகாண அலுவலகம்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-553)



## உளவளத் துணையாளர் பதவி

Counseling Diploma சான்றிதழ் உள்ள குறைந்தது 3 வருட உளவளத் துணையாளராகப் பணியாற்றிய அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

E-mail: senthu@eureka.lk
SOND 18/10, Wymen Road, Nallur.
T.P No: 077 224 2394

(1532)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: செவ் 8 இல்<br>உயரம்: 6'2"<br>தகைமை/தொழில்: A/L/வியாபாரம்<br>தொ.இ: B/7258 | பிறப்பு: 1984 RC<br>நட்சத்திரம்:அவிட்டம்<br>கி.பா: 6<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BSC, CIMA/ கணக்காளர் கனடா PR<br>தொ.இ: G/5390 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம் மிருகசீரிடம்<br>கி.பா: சூரிசெவ் 10 இல்<br>தகைமை/தொழில்: A/L/சொந்ததொழில்<br>தொ.இ: B/7260 | பிறப்பு: 1987 RC<br>நட்சத்திரம்:உத்தரட்டாதி<br>கி.பா: 17 1/4<br>உயரம்: 158cm<br>தகைமை/தொழில்: BSC/ MSC<br>தொ.இ: G/5391 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்:ரோகிணி<br>கி.பா: செவ் 8 இல<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L/ சொந்ததொழில்<br>தொ.இ: B/7263 | பிறப்பு: 1977 RC<br>நட்சத்திரம்:பூராடம்<br>கி.பா: 29 செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/5393 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்:அத்தம்<br>கி.பா: செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7264 | பிறப்பு: 1981 RC<br>நட்சத்திரம்:அனுசம்<br>கி.பா:15<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ ஆசிரியர்<br>தொ.இ: G/5394 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# பெண்களை தேர்ந்தெடுப்போம் வன்முறையை ஒழிப்போம்
# யாழில் கையெழுத்து பிரசாரம்

(யாழ்ப்பாணம்)

பால்நிலை வன்முறைக் கெதிரான 16 நாள் செயற் பாட்டில் யாழ்.சமூக செயற் பாட்டு மையமானது பல்வே றுபட்ட நிகழ்வுகளை நடத்தி வருகிறது.

அந்த வகையில் தொடர் வாகன ஊர்தி நிகழ்வு நாட ளாவிய ரீதியில் பெண்களை தேர்ந்தெடுப்போம் வன்மு றையை ஒழிப்போம் என்ற தொனிப்பொருளில் நடத் தப்பட்டு வருகிறது.

பால்நிலை வன்முறைக் கெதிரான தேசிய குழுவின் அங்கமாக இருப்பதனால், யாழ்.மாவட்டத்தில் இந்நிக ழ்வு எமது நிறுவனத்தால் ஒழுங்கமைக்கப்படுகிறது.

இந்நிகழ்வானது இன்று சனிக்கிழமை யாழ்.பேருந்து நிலையத்தில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும். குழு விவாதத்தினை தொட ர்ந்து கையெழுத்து பிரசார மும் நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு, யாழ்.மாவ ட்ட பிரதி தேர்தல் ஆணை யாளரான அகிலன், முன் னாள் நகரசபை உறுப்பின ரான மதினி நெல்சன் மற் றும் பால்நிலை மற்றும் ஊடக சார் வளவாளரான கிருத் திகா தர்மராஜாவும் பங்கு கொள்வர். (இ-7)




## கோத்தா உருவாக்கியதை விஸ்தரிக்கும் அரசு
# மீதோட்டமுல்லை குப்பை மலை பகுதியை பொருளாதார அபிவிருத்தி வலயமாக்குக
## மரிக்கார் எம்.பி. கோரிக்கை



(கொழும்பு)

மீதோட்டமுல்லை குப்பை மலை அமைந்துள்ள பிரதேச த்தை பொருளாதார அபிவிரு த்தி வலயமாக்குமாறு நாடா ளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் கோரிக்கை விடுத் துள்ளார்.

வரவு-செலவுத் திட்டத் தின் குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு நேற்று முன்தினம் நாடாளுமன்றத் தில் உரையாற்றும் போது அவர் இக்கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

தொடர்ந்தும் உரையாற் றிய அவர், கடந்த அரசாங்க காலத்தில் கோத்தபாய ராஜ பக்ஷ மீதோட்டமுல்லை குப்பை மலையை உருவாக்கினார்.

இந்த அரசாங்கம் அதனை சீர் செய்யாது தொடர்ந்தும் குப்பை மலையை விஸ்தரி த்து வந்தது. அந்த வகையில் இப்பிரச்சினையில் இரண்டு அரசாங்கங்களும் குற்றவா ளிகளே.

குப்பை மலை வெடிப்பு காரணமாக உயிரிழந்த 33 பேரின் மரணம் தொடர்பில் இந்த அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும். அவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்.

அதேநேரம் குப்பை மலை அமைந்துள்ள இடத்தில் நகர பொழுது போக்கு அமைப்பது உசிதமான விடயமல்ல.

அதற்குப் பதிலாக அந்த இடத்தில் பொருளாதார அபி விருத்தி வலயமொன்றை அமைப்பதன் ஊடாக கூடிய பலன்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் நாடாளு மன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் சுட்டிக்காட்டியுள் ளார். (இ-7)

# அநுராதபுர யுகத்திற்குரிய தொல்பொருட்கள் மீட்பு





(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத் தின் செங்கலடி தலவாய் கண்டம் என்ற இடத்தில் தொல்பொருள் திணைக்க ளம் நடத்திய ஆய்வில் அனு ராதபுர யுகத்திற்குரிய தொல் பொருட்கள் கிடைத்துள்ளன.

பன்குடாவெளி தொல் பொருள் பூமியில் 23 இடங் களில் நடத்தப்பட்ட அகழ் வாராய்ச்சியில், செங்கல் மதில், பழைய செங்கல் துண்டுகள், ஓடுகள், ஓரிடத் தில் குவிக்கப்பட்ட கருங்கல் தூண்கள், சந்திர வட்டக்கல், காவற்கல், சிலை பாதம், கட்டடம் உள்ளிட்ட தொல் பொருட்கள் கிடைத்துள்ளன.

இந்த இடத்தில் பௌத்த மத அடையாளங்கள் காணப் படுவதாக தொல் பொருள் திணைக்களம் தெரிவித்துள் ளது.

இரண்டாம் கட்டமாக மேற்கொள்ளப்பட்ட அகழாய் விலும் பல தொல் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நில மட்டத்தில் இருந்து 3 அடி மற்றும் 12 ஆழத்தில் பாதம் ஒன்றுடன் நிர்மாணிக் கப்பட்ட நுழைவாசல் பகுதி யின் எச்சங்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இதற்கு முன்னர் இலங் கையின் மிகவும் பழைமை யான கற்பாலம் மட்டக்களப்பு மற்றும் வாழைச்சேனை பிரதேசத்திற்கு வடக்கில் காயங்கேணி சதுப்பு நிலத் திற்கு அருகில் கண்டுபிடிக் கப்பட்டது.

240 மீற்றர் நீளமான இந்த பாலம் இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப் பட்ட பாலங்களில் நீளமான பாலம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் மரபுரிமை மற்றும் கலாசாரத்தை எதிர் கால சந்ததிக்காக பாதுகாக் கும் தேசிய கடமை என்பது காலத்தின் தேவையாக அறி ந்து கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசத்தின் ஆலோசனைக்கு அமைய தொல் பொருள் திணைக் களம் ஊடாக சில மாவட்டங் களில் அகழாய்வு பணிகளை மேற்கொண்டு வருவதாக திணைக்களம் தெரிவித் துள்ளது. (இ-7)

# மகனை நல்வழிப்படுத்த தாய் எடுத்த முடிவு பெரும் சோகத்தை ஏற்படுத்திய சம்பவம்

(கொழும்பு)

பாடசாலைக்கு செல்லாத மகனை நல்வழிப்படுத்தும் நோக்கில் தாய் ஒருவர் எடுத்த முடிவு, அவரது உயிரைப் பறித்த சம்பவம் பிங்கிரிய பிரதேசத்தில் பெரும் சோக த்தை ஏற்படுத்தியுள்ளது.

பாடசாலைக்கு செல்லாது இருக்கும் தனது மகனை அச்சுறுத்தும் நோக்கில் பொய் யாக உடலுக்கு தீ மூட்டிக் கொள்வதாக பசாங்கு செய்த தாய் உடல் கருகி நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார்.

தனது ஒரே மகனை திரு த்தும் நோக்கில் தாய் மண் ணெண்ணெயை உடலில் ஊற்றிக் கொண்டு தற்கொலை செய்து கொள்ளப் போவதாக தீக்குச்சியை பற்ற வைத்து எச்சரிக்கை விடுத்த போது தவறுதலாக உடலில் தீ பற்றி உடல் முழுவதும் கருகி பரி தாபமாக உயிரிழந்துள்ளார்.

பனாவ - போவத்தவத்த பகுதியைச் சேர்ந்த 58 வய தான மாலாகே கமலாவதி என்னும் பெண்ணே சம்ப வத்தில் உயிரிழந்துள்ளார்.

தனது மனைவிக்கும் மக னுக்கும் இடையில் அடிக்கடி சண்டைகள் இடம்பெற்று வருவதாகவும் இதன்போது பல தடவைகள் இவ்வாறு தனது மனைவி தற்கொலை செய்வதாக மகனை எச்சரித் துள்ளதாகவும் உயிரிழந்த பெண்ணின் கணவர் தெரி வித்துள்ளார்.

இதற்கு முன்னதாகவும் நஞ்சு அருந்தி, தூக்க மாத் திரை விழுங்கி, மண்ணெ ண்ணெயை ஊற்றிக் கொண்டு தற்கொலை செய்து கொள்வதாக தனது மனைவி மகனை எச்சரித்திருந்தார் என அவர் தெரிவித்தார்.

சம்பவம் இடம்பெற்ற தின மும் இவ்வாறு செய்த போது உண்மையாகவே தீப்பற்றிக் கொண்டது என அவர் தெரி வித்துள்ளார்.

தீயை அணைத்து வைத் தியசாலைக்கு எடுத்துச் செல் லும் போது முகம் கருகிவிட் டதா? என மனைவி கேட்ட தாகவும், ஏன் இவ்வாறு செய் தீர்கள் எனக் கேட்ட போது, மகனை மிரட்டவே இவ்வாறு செய்தேன் என மனைவி கூறியதாகவும் அவர் மரண விசாரணையின் பொழுது தெரிவித்துள்ளார்.

அதிக தீக்காயங்களுக்கு உள்ளான காரணத்தினால் பிங்கிரிய வைத்தியசாலையி லிருந்து சிலாபம் வைத்தியசா லைக்கு மாற்றப்பட்ட போதி லும் சிகிச்சை பலனின்றி குறித்த பெண் உயிரிழந்துள் ளார். (இ-7)

# வீட்டிலிருந்த பெண் சுட்டுக்கொலை!

(கொழும்பு)

கொட்டாவை, பன்னிப்பிட் டிய பிரதேசத்தில் வீட்டிலிரு ந்த பெண்ணொருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ள தாக பொலிஸார் தெரிவித்த னர்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் இரவு; கொட்டாவை, பாலிகா வீதியில் இடம்பெற் றுள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர்.

குறித்த பெண்ணின் வீட் டிற்குள் சம்பவதினமான நேற்று முன்தினம் இரவு உள்நுழைந்த இனந்தெரி யாத இருவர் குறித்த பெண் மீது துப்பாக்கிப் பிரயோக த்தை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலி ஸாரின் ஆரம்பகட்ட விசார ணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் உயிரி ழந்தவர் 42 வயதுடைய பெண்ணொருவர் எனத் தெரி விக்கும் பொலிஸார், கொலைச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருவதாகவும் தெரி வித்தனர். (இ-7)

# ஆரோக்கிய வாழ்விற்கு நெல்லி



தமிழ் பெயர்:- பெருநெல்லி
பொதுப்பெயர்:- நெல்லி**(Amla)**
தாவரவியற்பெயர் :- **PhyllanthuemblicaL**
(பைலாந்தஸ் எம்பிலிகா)
குடும்பம் :- **Euphorbioceae**(யுபோர்பியேசி)

நெல்லி அயன மண்டல வலயங்களில் காணப்படும் தாவரமாகும். இதன் பூர்வீகம் நேபாள்த்தின் இமாலயப் பிரதேசங்கள், இந்தியாவின் வடபிரதேசங்களோடு தெற்கு வரையிலும் இந்து சமுத்திர நாடுகிலும் பரவலடைந்து காணப்படுகின்றது. இலங்கையில் உலர் இடைவலயங்களிலும் விசேடமாக பிபிலை, பதுளை, மொனராகலை, கல்ஓயா, புத்தளம், அநுராதபுரம், இரத்தினபுரி, பொலநறுவை, வவுனியா போன்ற பிரதேசங்களில் வனாந்தரங்களில் இயற்கையாக வளர்ந்திருப்பதைக் காணலாம்.

நெல்லிக்காய் விற்றமின்சி அதிகமாக கொண்ட பழம் ஆகும். நெல்லி தாவரத்தின் சகல பகுதிகளும் மருத்துவகுணம்கொண்டதோடு போசணை மிக்கதாகும். இதுகசப்பு, இனிப்பு, உவர்ப்பு, புளிப்பு, துவர்ப்பு போன்ற ஐந்து சுவைகளையும் கொண்டுள்ளது. இப்பழத்திலிருந்து பல்வேறு உற்பத்திகளை தயாரிக்க முடியும்.

நெல்லிபயிர் செய்வதற்கு இலகுவானதொரு பயிராகும். இது குறைந்த பராமரிப்பின் கீழ் நன்குவளரும். இலங்கையில் வீட்டுத்தோட்ட பயிராக பயிரிடப்படுவதோடு இதன் பழம் சந்தையில் வருடம் முழுவதும் காணப்படுகின்றது.

### இனப்பெருக்கம்

விதைகள் மூலம் இனப்பெருக்கமடையும் போது வித்தியாசமான இயல்புகளைக் கொண்ட நாற்றுக்கள் பெறப்படுகின்றன. எனவே ஒட்டுதல் வேர் துண்டங்களை முளைக்க வைத்தல் மூலம் உயர்தர இயல்புகளைக் கொண்ட நாற்றுக்களை பெற்றுக் கொள்ள முடியும்.

### நடுகை

நாற்றுக்களை 6-7 மீற்றர் இடைவெளியில் மழை காலம் ஆரம்பமானதுடன் நடலாம். ஏக்கர் ஒன்றிற்கு 110 நாற்றுக்கள் போதுமானது.

### போசணைப் பெறுமானம்

100 கிராம்நெல்லிசதைப் பகுதியில் அடங்கியுள்ள போசணைக் கூறுகளும் அதன் பெறுமானங்களும்

| இல | போசணைக் கூறுகள் | போசணைப்பெறுமானங்கள் (கிராம்) |
|---|---|---|
| 1 | சக்தி | 58 கலோரி |
| 2 | நீர் | 81.3 கிராம் |
| 3 | புரதம் | 0.5 கிராம் |
| 4 | கொழுப்பு | 0.1 கிராம் |
| 5 | காபோவைதரேற் | 13.7 கிராம் |
| 6 | நார் | 3.4 கிராம் |
| 7 | கனிப்பொருள் | 0.7 கிராம் |
| 8 | கல்சியம் | 50 மில்லிகிராம் |
| 9 | பொசுபரசு | 20 மில்லிகிராம் |
| 10 | இரும்பு | 1.2 மில்லிகிராம் |
| 11 | விற்றமின் ஏ | 4 மைக்ரோ.கிராம் |
| 12 | தயமின் | 30 மைக்ரோ.கிராம் |
| 13 | ரைபோபிளேவின் | 10 மைக்ரோ.கிராம் |
| 14 | நியாசின் | 0.2 மில்லிகிராம் |
| 15 | விற்றமின் சீ | 200-1800 மில்லிகிராம் |

### பயன்பாடு

➢ பழத்திலிருந்து நெல்லி அச்சாறு, கோடியல், பழப்பானம் என்பவற்றை தயாரிக்கலாம்.

➢ இலைகளை கால்நடை தீவனமாகவும், சேதனப்பசளையாகவும் பயன்படுத்தலாம்.

➢ நெல்லிக்காயிலிருந்து எழுதும் மை, இரசாயனப் பொடி என்பவற்றை தயாரிக்கலாம்.

➢ நெல்லியின் மரத்துண்டுகளை கலங்கிய நீரில் போட்டு வைத்தால் நீர் தெளிந்து விடும்.

➢ காயிலிருந்து பிரித்தெடுக்கப்படும் எண்ணெய் முடி வளர்வதற்கு உதவுவதோடு நறுமணமும் தரும்.

### தினம் ஒருநெல்லிக்காய் உண்பதால் கிடைக்கும் நன்மைகள்

➢ புற்றுநோய் ஏற்படுவதை தடுக்கும்.

➢ அல்சரைக் குணப்படுத்தும்.

➢ உடல் எடையைக் குறைக்க உதவும்.

➢ மலச்சிக்கல் ஏற்படுவதை தடுக்கும்.

➢ உயர் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்பாட்டுடன் வைத்திருக்கும்.

➢ பார்வைமேம்படும்.

➢ நீரழிவைத் தடுக்கும்

➢ கல்லீரலின் சீரான செயற்பாட்டுக்கு உதவும்.

➢ மாரடைப்பு மற்றும் பக்கவாதம் ஏற்படும் வாய்ப்பைத் தடுக்கும்.

சௌந்தரநாயகம் தயாளசீலன்
பாடவிதான உத்தியோகத்தர் (பயிர்பாதுகாப்பு)
பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர்
அலுவலகம் மன்னார்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1266

Search for people, places and things

### கதிர்

கட்டப்பா ஏன் பாகுபலியை
கொன்னாறுனுகூட தெரிஞ்சிடுச்சி




ஆனா அந்த இன்னொரு வாழைப்பழம்
என்னாச்சுனுதான் இன்னி
வரைக்கும் தெரியல

### இளவரசன்

ஆராய்ச்சிகளின்படி
"ஓம்" என்ற சத்தம் உங்கள் உடல்
பாகங்களில் சிலவற்றை
உயிர்த்தெழச் செய்யும்
ஆனால்
"என்னாங்க" என்ற சத்தம் மொத்த
உடலையும் ஒரு விநாடியில் உண்டு
இல்லையெனச் செய்துவிடும்
#பவர் ஒப் மனைவி#

### வேலவன்

நேற்றைக்கு ரெண்டு டெங்கு கொசு என்னைக்
கடிச்சிட்டுப் போய்ச்சு, காலைல பாத்தா வாசல்ல
செத்துக் கிடக்கு



இதுல இருந்து உங்களுக்கு
என்ன தெரியுது?

### நிமல்


டென் எண்றதுக்குள்ள பால் குடிச்சுறனும்
ஓகே... யா?



நான் பால் குடிச்சு முடிக்கிற வரைக்கும் டென்
எண்ணிட்டு இருக்கனும் ஓகே யா???

### நந்தன்

வாழ்க்கைல பணம் முக்கியம் இல்லைன்னு
சொல்றதுக்கு முன்னாடி



பணக்காரனா ஆகிடு!

### நகுலன்

நாங்க தினமும் எட்டு டம்ளர் தண்ணி
குடிக்கனும்...
அது முடியாது டாக்டர்...



ஏம்பா...?
எங்க வீட்ல அஞ்சு டம்ளர்தான் இருக்கு...
ஸ்ஸ்ஸப்பா ஆஆஆ...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்கும் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—136

## உயிர்ப் பசளைகளுக்கும் உயிர் பீடை கொல்லிகளுக்குமான தேசிய ஆய்வுக் கருத்தரங்கு


பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள்எம்மினிய உறவுகளே!

கடந்த மாதம் 29 மற்றும் 30ஆம் திகதிகளில் உலக நீர் முகாமைத்துவ நிறுவனத்தில் (International Water Management Institute) அந்நிறுவனத்தினதும் சப்ரகமுவ மற்றும் வயம்ப பல்கலைக்கழகங்களுமிணைந்து இரண்டு நாள் தேசிய ஆய்வுக் கருத்தரங்கினை உயிர்ப்பசளைகளுக்கும் உயிர்ப்பீடை கொல்லிகளுக்குமாக (National Conference on Biofertilizers and Bio pesticides) நடத்தி முடித்திருக்கின்றார்கள். இலங்கையைப் பொறுத்தவரையில் இந்த ஆய்வுக்கருத்தரங்கு மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது. அசேதன பீடைநாசினிகளிலும் பசளைகளிலும் முழுமையாகத் தாங்கியிருக்கின்ற எமது விவசாயச் செய்கையில் அண்டை நாடுகளில் அதிகமாக பயன்படுத்தப்படும் உயிர்ப்பசளைகள் மற்றும் உயிர்ப் பீடைநாசினிகளை உற்பத்தி செய்வதற்கும் அவற்றை விவசாயப் பெருமக்கள் மற்றும் தொழில்ரீதியாக உற்பத்தி செய்வது பற்றியும் அதிலுள்ள பிரச்சினைகள் என்பனவும் பல ஆய்வாளர்கள் மற்றும்வளவாளர்களைக்கொண்டு விரிவாக ஆராயப்பட்டது. எமது நாட்டில் இவ்வாறான உயிர்ப் பசளைகள் மற்றும் உயிர்ப் பீடைநாசினிகளை அதிகமாக உருவாக்குவதற்கும் அவற்றை விற்பனைக்கு விடுவதிலும் பலவிதமான முட்டுக்கட்டைகள் இருந்தமையால் இந்த ஆய்வுக் கருத்தரங்கில் இவற்றை அந்நந்த அரச நிறுவன அதிகாரிகளிடம் முன்வைத்து அதற்கான வழிவகைகளையும் ஆராய்வதற்கு நல்லதொரு வாய்ப்பு கிடைத்தது. அது பற்றி எமது இனிய உறவுகளிடம் இக்கட்டுரையூடாக பகிர்ந்து கொள்வதில் எழுதும் இக்கைகள் மகிழ்வடைகின்றன.

பசுமைப்புரட்சியின் தாக்கமாக உள்வாங்கப்பட்ட அசேதன இரசாயனாங்கள் பசளைகளாக இன்னும் பீடைநாசினிகளாக எமது பிரதேசத்தை ஆக்கிரமித்து இறுதியில் நல்ல உள்நாட்டு உற்பத்தியை தருவதற்கு பதிலாக இன்னோரன்ன நோய்களை மனிதனில் உருவாக்குவதற்கும் காரணமாகிவிட்டிருக்கின்றன. இதன்பயனாக அசேதன இரசாயனங்களின்றி விவசாயமில்லை என்னும் நிலை உருவாக்கிவிடப்பட்டிருக்கின்றது. இது பீடைநாசினிகளை உருவாக்கும் முதலைகளினால் மக்களின் குறிப்பாக விவசாயப் பெருமக்களின் உற்பத்திச் செலவை அதிகரித்து அவர்களுக்கு நியாயமாக கிடை... சூழல் மாசாக்கம் மற்றும் மனிதன், விலங்குகள் மற்றும் ஏனைய உயிரினங்களை அதிகளவில் பாதிக்கும் தன்மைவாய்ந்ததாக அசேதன இரசாயனங்கள் மாற்றமடைந்திருப்பதனால் அவற்றை எமது அரசாங்கம் அவ்வப்போது தடைசெய்ய முடிவெடுத்து கடந்த வருடம் முக்கியமான அசேதன இரசாயனங்களான குளோர்பைறிபொஸ், என்டோசல்பான், காபோபியுறான் அல்லது பியூறடான், பொருட்களாக மாற்றம் பெற்றதாலும் அவற்றை வேறுவழியின்றி அரசாங்கம் தடைசெய்தது. ஆனால் தடைசெய்யப்பட்டதற்கு மாற்றுவழிகளை பரிந்துரைக்கவில்லை. அதற்கான முயற்சியிலும் ஈடுபடவில்லை. தற்போது இதனை உணர்ந்த வயம்ப மற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழகங்கள் முதன்முறையாக உயிர் பீடை கொல்லிகளையும் உயிர்ப்பசளைகளைப் பற்றியும் ஆராய முற்பட்டு பலநல்ல முடிவுகளை எடுத்திருக்கின்றன. அந்த வகையில் இவ்வாய்வு மாநாட்டிற்கு வருகை தந்த பல ஆய்வாளர்கள், உயிர் பீடைகொல்லிகள் மற்றும் உயிர் பசளைகளை உற்பத்தி செய்யும் தனியார் நிறுவனங்கள், அரச ஆராய்ச்சி நிலையங்களிலிருந்து பயிர் பாதுகாப்புக்குப் பொறுப்பான அதிகாரிகள் வெளிநாட்டு புலமையாளர்கள் என பலர் கலந்து பீடைநாசினிகள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் குறிப்பிட்ட அசேதன இரசாயனத்தை உற்பத்தி செய்ய அதிகரித்த உற்பத்திச் செலவுகளை கொடு

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 152

க்கக்கூடிய ஆதாயத்தை வெகுவாக குறைத்து விட்டிருக்கின்



றன. நஞ்சு எனத்தெரிந்தும் அவற்றை விவசாயிகளினால் தவிர்க்க முடியாதவாறு பீடைப்பெருக்கமும் அதிகரித்துவிட்டது. இந்த இக்கட்டான நிலையில் விவசாயிகளைக் காப்பாற்றும் முக்கிய செயற்பாடாக உயிரியல் கட்டுப்பாட்டினை முன்னேற்ற பல வழிவகைகளில் முயற்சிகளும் மேற்படுத்தப்பட்ட போதும் அவற்றை தொடர்ந்து ஒரேநிலையில் நடைமுறைப்படுத்த முடியவில்லை. இதற்கு பலகாரணங்களை இங்கு முன்வைக்க விரும்பினாலும் மிக முக்கியமாக அசேதன பீடை நாசினிகள் விரைந்து பீடைகளைக் கட்டுப்படுத்தும் தன்மை கொண்டதனாலும் அதிக விலையென்றாலும் பட்டிதொட்டியெங்கும் கிடைக்கக் கூடியதாக விருந்தாலுமாகும். மேலும் அசேதன இரசாயனங்களை உற்பத்தி செய்யும் மற்றும்சந்தைப்படுத்தும்பெரிய முதலாளிமார் தங்களது அசேதன இரசாயன உற்பத்திச் செலவினத்தை ஏழை விவசாயிகளிடம் அறவிட முனைந்ததுமாகும்.

தற்போது அசேதன இரசாயனங்களினால் ஏற்படுத்தப்படும் கிளைபோசேற்று என்பனவற்றை தடைசெய்தது. இதற்கு




முக்கிய காரணமாக மத்திய மாகாணத்தில் குறிப்பாக அநுராதபுரம் மற்றும் பதவாச்சி பகுதிகளில் பல விவசாய பெருமக்களிடையே இனந்தெரியாத சிறுநீரக நோய் காணப்பட்டமையாகும். இந்த நோய்க்கான காரணிகளில் முதன்மையானது அந்த இடங்களில் களைகளைக் கட்டுப்படுத்த பயன்படுத்தப்பட்ட கிளைபோசேற்று ஆகும். எமது சூழலில் ஏற்படுத்தப்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால் இவ்வாறான பீடை நாசினிகள் மற்றும் பங்கசு நாசினிகள் மனிதனின் சுகாதாரத்திற்கு கேடுவிளைவிக்கும் நஞ்சு கொண்டு தங்களது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டுள்ளனர். இக்கருத்துக்கள் நிச்சயமாக தொடர்ந்து வரும் காலங்களில் பாரியளவில் இதனை முன்னெடுப்பதற்கு வழிவகைசெய்யும் என முழுமையாக நம்பியிருக்கின்றோம்.

இலங்கையில் உயிர்ப்பீடை கொல்லிகளுக்கென்று எதுவிதமான சட்ட வரைபுகளும் இதுவரையில்லை. அதனால் அதனை உற்பத்தி செய்பவர்களிடையே நம்பிக்கையின்மையும் தமது உற்பத்திப் பொருட்கள் தரமற்றதென நிர்ணயஞ்செய்வதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவே அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு சரியான திட்ட வரைபுக்கூடாக இவ்வாறான முயற்சிகளை முன்னெடுத்தால் அவை வெற்றிபெற வாய்ப்புக்கள் உண்டு. அதேநேரத்தில் எமது பகுதிகளில் விசிறப்படும் பீடைநாசினிகள் மற்றும் களைநாசினிகள் என்பனவற்றின் தற்போது நிலையை நாம் அறியக் கூடியதாக இருக்கின்றது.

உயிர்ப்பீடைகொல்லிகளை நாம் பயன்படுத்த ஆரம்பித்தால் விவசாயிகள் தமக்கு தேவையான ஆதாயத்தை பெறவும் அதே நேரத்தில் தேவைக்கேற்ப அசேதன இரசாயனத்தை பயன்படுத்தவும் வழிசெய்து கொடுக்கலாம்.

ப்பதனால் அவற்றை பெறுவதற்காக குறிப்பிட்ட பீடைநாசினிகளின் கம்பனிகள் அந்தந்த அசேதன இரசாயனத்தை விவசாயப் பெருமக்களிடமிருந்தே அறவிட முனைகின்றன. அதனாலேயே அசேதன இரசாயனங்களின் விலைகள் அதிகரித்து காணப்படுகின்றன. ஆனாலும் இவ்வாறு பயன்படுத்தப்படும் அசேதன இரசாயனங்கள் இறுதியில் நல்ல விலைக்கு விற்பதனால் ஆதாயம் உற்பத்தியாளருக்கும் மற்றும் அதனை சந்தைப்படுத்துபவர்களுக்கும் சென்றடைகின்றன.

நிகழ்வில் கலந்து கொண்ட பீடைநாசினிகளுக்கான பதிவாளர் அவர்கள் இங்குள்ள இடர்பாடுகள் பற்றியும் அதனால் தமக்கு சரியான அளவுகள் மற்றும் அவற்றின் சிறப்புக்களைப் பற்றி விளக்கம் பெற்ற பின்னரேயே அவ்வாறான பீடைநாசினிகள் பதிவு செய்யவும் பின்னர் பதிவிடவும் முனைகின்றனர்.

இவ்வாறான அசேதன இரசாயனங்களினை தேவைக்கேற்ப பயன்படுத்தவும் உயிரி இரசாயனங்களின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல்களை ஒன்றிணைந்து செயற்படுத்தவும் கொள்கையளவில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. மேலும் உயிர்ப்பசளைகளை உற்பத்தி செய்து விவசாயப் பெருமக்களுக்கு கிடைக்கச்செய்வதற்கான வழிவகைகளும் உயிர்ப் பீடைநாசினிகளை உற்பத்தி செய்வதனை ஊக்குவிக்கவும் உள்ளூரில் உற்பத்தி செய்பவர்களை ஊக்குவிக்கவும் அதற்கான சட்டவரைபுகளை உருவாக்கவும் ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது.

# இலங்கையின் நல்லிணக்க நிலைப்பாட்டை ஐக்கிய நாடுகள் சபை மாற்றியமைக்கலாம்

## ஆங்கில செய்தித்தாள் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் நடந்த இறுதிப்போரின்போது 40ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டதாக கூறிய நிலையில் நல்லிணக்கம் தொடர்பில் இலங்கையுடன் இணை அனுசரணை செய்துள்ள ஐக்கிய நாடுகள் சபை அதன் நிலைப்பாட்டை மீளப்பெற்றுக் கொள்ள முடியும் என்று ஆங்கில செய்தித்தாள் ஒன்று தெரிவித்துள்ளது.

இலங்கையின் இறுதிப் போரின்போது 40ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்திருந்தது.

இதுவே இன்று இறுதித் தீர்மானமாகவுள்ளது.

இந்த நிலையில் பிரித்தானிய பிரபுக்கள் சபையின் உறுப்பினர் நேஸ்பி, இறுதிப்போரின் போது ஏழாயிரம் பேரே கொல்லப்பட்டதாக கூறியுள்ளனர்.

குறித்த கூற்று தொடர்பில் ஆராய்ந்து முடிவெடுக்க ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடுகளுக்கு முடியும் என்று ஐக்கிய நாடுகள் பொதுச் செயலரின் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார் என்று அந்த ஆங்கில ஊடகம் தெரிவித்துள்ளது.

எனினும் நேஸ்பி என்பவர் பிரித்தானியாவின் பிரபுக்கள் சபையில் உள்ள 800 பேரில் ஒருவராவார்.

எனவே அவரின் கருத்திற்கு மதிப்பளிக்கவேண்டிய அவசியம் இல்லை என்று உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் தெரிவித்தார். (இ-7)

## பேச்சுவார்த்தை தோல்வி;உண்மைக்குப் புறம்பான செய்தி தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி அறிக்கை வெளியீடு

(கொழும்பு)

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கும் தமிழர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் இடையேயான அரசியல் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாகவும், அந்த பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்ததாகவும் தெரிவித்துள்ள கருத்து உண்மைக்குப் புறம்பானது என தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி அறிவித்துள்ளது.

இது தொடர்பில் நேற்று முன்தினம் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் செயலாளர் பி.பிரசாந்தன் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கும் தமிழர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் இடையேயான அரசியல் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாகவும் அந்த பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்ததாகவும் அந்த கட்சியின் செயலாளர் வி.கமலதாஸ்தெரிவித்ததாக ஊடகங்கள் வாயிலாக அறிந்திருந்தேன். இது மிகவும் வேடிக்கையை தந்தது. கிழக்கு மாகாணத்தில் மக்களை நேசித்து சேவை புரியும் எந்த பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியுடனும், சமூக ஆர்வலர்களுடனும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஒரே குடையின் கீழ் போட்டியிடுவதற்கு அழைப்பு விடுத்திருந்தது.

கட்சியின் செயலாளராகிய நான் மட்டக்களப்பு வாவிக்கரை வீதியில் அமைந்துள்ள எமது கட்சியின் தலைமைக் காரியாலயத்திலேயே இருக்கின்றேன்.

ஆனால் வி.கமலதாஸ் எம்முடன்எந்தவிதமான தொடர்புகளையும் மேற்கொள்ளாது சிறைச்சாலையில் இருக்கும் தலைவருடன் பேச்சுக்குச் சென்றதாகவும், அவர் மறுத்ததாகவும் ஊடகங்கள் வாயிலாக அறிக்கையிட்டதனை நாம் அறிந்தோம்.

இது தொடர்பாக கடந்த 2 வருடங்களாக மட்டக்களப்பு சிறைச்சாலை தடுப்புக் காவலில் உள்ள எமது கட்சியின் தலைவர் சி.சந்திரகாந்தனிடம் நாம் கடந்த 27ஆம் திகதி சென்று வினவியபோது, குறித்த வி.கமலதாஸ் தன்னை முன்பு ஓரிரு தடவைகள் பார்வையிட வந்துள்ளதாகவும், பார்வையிடுவதற்காக வழமையாக பார்வையாளர்கள் பார்வையிடும் விதிமுறைகளுக்கு ஏற்ப பார்வையிட வந்ததாகவும் தன்னிடம் நட்பு ரீதியாக கலந்துரையாடியதாகவும், அரசியல் ரீதியாகவோ உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாகவோ எந்தக் கருத்துக்களும் பரிமாறப்படவில்லை எனவும் குறிப்பிட்ட தலைவர்தானே கருணா அம்மான் எப்படி இருக்கிறார் அவருடனான உங்கள் கட்சி எப்படி மக்கள் முன் வாக்கு கேட்கப்போகிறது என மட்டுமே கதைத்தேன் எனக் குறிப்பிட்டார்.

இவ்வாறான உண்மைக்குப் புறம்பான தகவல்களை தமது விளம்பரப்படுத்தலுக்காக மேற்கொள்வது கண்டிக்கத்தக்கது எனவும் இவ்வாறான போலிச் செயற்பாடுகள் இன்னும் முன்னெடுக்கப்படுமானால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும்படியும் தலைவர் சி.சந்திரகாந்தன் பணித்துள்ளார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## பேருந்து மோதி ஆசிரியர் பலி!

(கொழும்பு)

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை பூண்டுலோயா பிரதான வீதியில் வட்டக்கொடை கீழ்பிரிவு தோட்ட அருகாமையில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஆசிரியர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் புஸ்ஸல்லாவ நவகடதுர பகுதியைச் சேர்ந்தவரும் நுவரெலியா பெயின்டர் சிங்கள பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றிவரும் முத்திக்க சமிந்த ஹெட்டிகெதர (வயது-30) என்பவராவார்.

குறித்த ஆசிரியர் தனது மோட்டார் சைக்கிளில் புஸ்ஸல்லாவ பகுதியிலிருந்து தலவாக்கலை நோக்கி வந்துக்கொண்டிருந்த வேளை, தலவாக்கலையிலிருந்து பூண்டுலோயா நோக்கிச் சென்று கொண்டிருந்த அரச பேருந்தில் மோதி பேருந்தின் பின் சக்கரத்தில் சிக்குண்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். (இ-7)

## அனர்த்த சேவைகளுக்காக தயார்நிலையில் முப்படையினர்

(கொழும்பு)

அனர்த்த நிவாரண சேவைகளுக்காக முப்படையினரும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் ரொஷான் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் அசாதாரண வானிலை காரணமாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்படவுள்ள மீட்பு நடவடிக்கைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் ரொஷான் செனவிரத்ன இந்த தகவலைத் தெரிவித்துள்ளார்.


தற்போதைய நிலையில் இராணுவத்தின் விசேட பயிற்சிகள் பெற்ற கமாண்டோ மற்றும் மீட்புப் படையணியினர் 160 குழுக்களாக பிரிக்கப்பட்டு மீட்புப் பணிகளுக்காக தயார்படுத்தப்பட்டுள்ளனர்.

ஹிங்குராங்கொடை, இரத்மலானை மற்றும் காங்கேசன்துறை விமானப்படை முகாம்களில் மீட்பு பணிக்காக ஹெலிகொப்டர்கள் தயார் நிலையில் காத்திருக்கின்றன.

இதற்கு மேலதிகமாக கடற்படையினரும் மீட்பு வள்ளங்களுடன் களத்தில் இறங்கத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந் நிலையில் தந்தமது பிரதேச அனர்த்த நிலைகள் குறித்த பொதுமக்கள் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மற்றும் பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது. (இ-7)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு இ.தொ.கா.நிவாரண உதவி



(கொழும்பு)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொகவந்தலாவ, நோர்வூட் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களுக்கு இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் உடனடி நிவாரணங்களை வழங்கியுள்ளது.

இ.தொ.கா பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமானின் பணிப்புரைக்கமைய ஒரு வாரத்துக்கு தேவையான பொருட்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன.

பொகவந்தலாவ, நோர்வூட் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களை நேற்றுக்காலை நேரில் சென்று பார்வையிட்ட ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான குழுவினர் சேத விபரங்கள் குறித்து கேட்டறிந்தனர்.

உணவு, உலர் உணவு, உடுதுணி, போர்வை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேற்று கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


## உணவே மருந்து

### விளம்பர விபரணம்

மனிதனின் உடல் நலம் என்பதும், மருத்துவம் என்பதும் முழுக்க முழுக்க வர்த்தகமயப்படுத்தப்பட்டு பல ஆண்டுகள் கடந்து விட்டன. குறிப்பாக அலோபதி அல்லது ஆங்கில மருத்துவம் என்பது உலகின் மிகப்பெரும் வர்த்தக நிறுவனங்களின் ஆளுமைக்குக் கீழ் இயங்கி வருகின்றன. மருத்துவம் தொடர்பானதும் உடல்நலம் தொடர்பானதுமானவிழிப்புணர்வு என்பது சாதாரணிய மக்களுக்கு இன்று இன்றியமையாததொன்று.

பெரும் மருத்துவ நிறுவனங்கள்மக்களின்நோயைக் குணப்படுத்துவதற்குப் பதிலாக அவற்றைத் தற்காலிகமாகக் கட்டுப்படுத்துவதற்கான மருந்துகளைத் தயாரிக்கும் உத்தியை இன்று பயன்படுத்துவதாக பல்வேறு ஆய்வாளர்கள் குற்றம் சுமத்துகின்றனர். தற்காலிகமாகக் கட்டுப்படுத்தப்படும் நோய் மேலும் தொடரும் நிலையில் தமது மருந்து வகைகளை மேலும் சந்தைப்படுத்தும் வாய்ப்பை அவர்கள் பெற்றுக் கொள்கின்றனர்.

உணவே மருந்து என்றும் மருந்தே உணவு என்றும் தமிழ்ச் சித்தர்கள் கூறிய காலத்தில் மக்கள் நோயின்றி பல்லாண்டுகள் வாழ்ந்த வரலாற்றைக் காணலாம். இன்று மேலைநாடுகளில் அறிவு சார்ந்த ஒரு மேல் தட்டு மக்களில் பலர் உணவே மருந்து என்ற கோட்பாட்டைப் பற்றிக்கொண்டுள்ளனர்.

சுகவாழ்விற்கான இயற்கை வளங்களை அவர்கள் தேடிச் செல்கின்றனர். இலங்கை போன்ற மூன்றாவது உலக நாடுகளிலிருந்து கூட அவர்களுக்கான இயற்கை வளங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கிளிநொச்சியிலிருந்து உற்பத்தியாகும் இயற்கைத் தேயிலை வகைகள் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. நாவல் விதைகளைப் பதப்படுத்தி உற்பத்திசெய்யப்படும் கோப்பி, சிறு குறிஞ்சா தேநீர், துளசி இலைத் தேயிலை, ஆவாரம்பூ தேயிலை, மாவிலையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் தேயிலை உட்பட ஐம்பது வகையான தேயிலை மற்றும் கோப்பி வகைகள் நமது மண்ணிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

நாவல் விதைகளிலிருந்து உற்பத்தி செய்யப்படும் கோப்பி உட்பட அனைத்துத் தயாரிப்புக்களையும் கிளிநொச்சியில் இயங்கும் பொசிபிள்கிறீன் நிறுவனம் உள்ளூரில் விற்பனை செய்ய ஆரம்பித்துள்ளது.

இவ் உற்பத்திகளுக்கான மூலிகைகள் இயற்கைச் சூழலில் இருந்தே பெற்றுக் கொள்ளப்படுகின்றன என்பதுடன் இவை எந்தவிதமான இரசாயன உரப்பயன்பாட்டிற்கும் உட்படாதவை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். பொசிபிள் கிறீன் பிறைவேற் லிமிற்றட் நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படும் அனைத்து விதமான மூலிகைத் தேயிலை வகைகள் மற்றும் கோப்பி வகைகள் அனைத்தும் ஆரோக்கிய நலன்களை தம்முள் கொண்டுள்ளன.

இவை அனைத்தும் எமது மக்களிடையே காணப்படும் நீரிழிவு,இரத்த அழுத்தம் உள்ளிட்ட பல தொற்றா நோய்களுக்கு நிவாரணியாக விளங்குகின்றன.

இவை பக்க விளைவற்றவை. இவற்றுள் சிறு குறிஞ்சா தேயிலை, ஆவாரம்பூ தேயிலை,மாவிலைத்தேயிலை, கொய்யா இலைத்தேயிலை மற்றும் நாவல் விதைக் கோப்பி என்பன நீரிழிவு நோயினைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கான சிறந்த நிவாரணிகளாக விளங்குகின்றன.

பொசிபிள் கிறீன் மூலிகைத் தேயிலை மற்றும் கோப்பி உற்பத்திகள் நோயாளிக்கு மாத்திரமின்றி சுகதேகிகளும் அருந்தக் கூடிய ஆரோக்கிய பானமாக அமைந்துள்ளன.

ஆரோக்கியமான உடல் மற்றும் நலமான அமைதியான, மகிழ்வான வாழ்விற்கு வழி சமைக்கின்றது. அத்தகைய வாழ்விற்கு உறுதுணையாக அமைகின்றன பொசிபிள் கிறீன் மூலிகைத் தேயிலை உற்பத்திகள்.

பொசிபிள் கிறீன் பிறைவேற் லிமிற்றட்
இல.11, சிவசுந்தரம் வீதி,
பரவிப்பாஞ்சான்,
கிளிநொச்சி.
தொலைபேசி: 021-228-3369/ 021- 228- 3690



# சிறுவர் அரங்கம்

## பெரியதை எடு!



உழவன் ஒருவன் வீட்டில் வெள்ளாடும் செம்மறி ஆடும் இருந்தன. அவை இரண்டும் நெருங்கிய நண்பர்களாக இருந்தன. எங்கே சென்றாலும் ஒன்றாகவே சென்றன.

தோட்டத்தில் விளையும் செடிகளை எல்லாம் அவை கடித்து நாசம் செய்தன. கோபம் கொண்ட உழவன், நீங்கள் இனிமேல் இங்கே இருக்கக் கூடாது. இருந்தால் உங்களைக் கொன்று விடுவேன். எங்காவது போய் விடுங்கள் என்று விரட்டினான்.

இரண்டு ஆடுகளும் தங்கள் பொருட்களை ஒரு சாக்குப் பையில் போட்டன. அந்தப் பையைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டன.

செம்மறி ஆடு வலிமை உள்ளதாக இருந்தது. ஆனால் கோழையாக இருந்தது. மாறாக வெள்ளாடோ வீரத்துடன் விளங்கியது. ஆனால் வலிமை இல்லாமல் இருந்தது.

சிறிது தூரம் நடந்த இரண்டும் ஒரு வயலை அடைந்தன. அங்கே இறந்து போன ஓநாய் ஒன்றின் தலை கிடந்தது.

அந்த ஓநாயின் தலையை எடுத்துக் கொள். நீதான் வலிமையுடன் இருக்கிறாய் என்றது வெள்ளாடு.

என்னால் முடியாது நீதான் வீரன். நீயே எடு. என்றது செம்மறி ஆடு. இரண்டும் சேர்ந்து அந்த ஓநாயின் தலையைச் சாக்கிற்குள் போட்டன. சாக்கைத் தூக்கிக் கொண்டு இரண்டும் நடந்தன. சிறிது தொலைவில் நெருப்பு வெளிச்சத்தை அவை பார்த்தன.

அந்த நெருப்பு எரிகின்ற இடத்திற்குப் போவோம். குளிருக்கு இதமாக இருக்கும். ஓநாய்களிடம் இருந்தும் நாம் தப்பித்துக் கொள்ளலாம் என்றது வெள்ளாடு.

இரண்டும் நெருப்பு இருந்த இடத்தை நோக்கி நடந்தன. அருகில் சென்றதும் அவை அதிர்ச்சி அடைந்தன. அங்கே மூன்று ஓநாய்கள் உணவு சமைத்துக் கொண்டிருந்தன.

ஓநாய்கள் தங்களைப் பார்த்து விட்டன. தப்பிக்க வழியில்லை என்பதை உணர்ந்தன ஆடுகள்.

நண்பர்களே! நீங்கள் நலந்தானே என்று தைரியத்துடன் கேட்டது வெள்ளாடு. அச்சத்தால் செம்மறி ஆட்டின் கால்கள் நடுங்கின.

நண்பர்களா நாய்கள்? எங்கள் உணவு தயார் ஆகட்டும். அதன் பிறகு உங்களைக் கவனிக்கிறோம். எங்கே ஓடிவிடப் போகிறீர்கள்? என்றது ஒரு ஓநாய்.

இவற்றிடம் இருந்து எப்படித் தப்பிப்பது என்று சிந்தித்தது வெள்ளாடு. செம்மறி ஆடே! இன்று நாம் கொன்றோமே ஓநாய்கள் அவற்றில் ஒன்றின் தலையை எடுத்து இவர்களிடம் காட்டு. நாம் யார் என்பது புரியும்? என்று உரத்த குரலில் சொன்னது அது.

செம்மறி ஆட்டிற்கு அதன் திட்டம் புரிந்தது. சாக்கிற்குள் கையை விட்டு ஓநாயின் தலையை எடுத்தது.

ஏ! முட்டாள் ஆடே! பெரிய ஓநாயின் தலையை எடுத்துக் காட்டு என்றேன். நீ சிறிய தலையை எடுத்துக் காட்டுகிறாயே. பெரியதை எடு என்று கத்தியது வெள்ளாடு. அந்தத் தலையைச் சாக்கிற்குள் போட்டது செம்மறி ஆடு. மீண்டும் அதே தலையை வெளியே எடுத்துக் காட்டியது.

கோபம் கொண்டது போல் நடித்தது வெள்ளாடு. இருக்கின்ற ஓநாய் தலைகளில் பெரியதை எடு. மீண்டும் நீ சிறிய தலைகளையே எடுத்துக் காட்டுகிறாய். இதைப் போட்டுவிட்டு பெரிய தலையாக எடு என்று கத்தியது.

அந்தத் தலையைப் போட்டு விட்டு அதே தலையை மீண்டும் வெளியே எடுத்தது செம்மறி ஆடு.

இதைப் பார்த்த மூன்று ஓநாய்களும் நடுங்கின.

இவை சாதாரண ஆடுகள் அல்ல. நீ அவற்றைக் கேலி செய்திருக்கக் கூடாது. சாக்கிற்குள் இருந்து ஒவ்வொரு ஓநாய் தலையாக எடுக்கின்றன என்றது ஒரு ஓநாய்.

மூன்றும் சிறிது நேரம் அமைதியாக இருந்தன.

ஆடுகளைப் பார்த்து ஓநாய் ஒன்று, உங்களைச் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி. குழம்பு நன்றாகக் கொதிக்கிறது. இன்னும் சிறிது தண்ணீர் ஊற்ற வேண்டும். நான் சென்று தண்ணீர் கொண்டு வருகிறேன் என்று புறப்பட்டது.

சிறிது நேரம் சென்றது. இரண்டாவது ஓநாய், அந்த ஓநாயிற்கு நம் அவசரமே தெரியாது. போய் எவ்வளவு ஆகிறது? நான் சென்று அதை அழைத்துக் கொண்டு தண்ணீருடன் வருகிறேன் என்று புறப்பட்டது.

பரபரப்புடன் இருந்த மூன்றாவது ஓநாய், இருவரும் எங்கே தொலைந்தார்கள்? நான் சென்று அவர்களை அழைத்து வருகிறேன் என்று புறப்பட்டது. தப்பித்தோம் என்ற மகிழ்ச்சியில் ஓட்டம் பிடித்தது.

செம்மறி ஆடே! நம் திட்டம் வெற்றி பெற்று விட்டது. ஓநாய்களிடம் இருந்து தப்பித்து விட்டோம். விரைவாகச் சாப்பிட்டு விட்டு இங்கிருந்து புறப்படுவோம். உண்மை தெரிந்து மீண்டும் அவை இங்கே வரும் என்றது வெள்ளாடு.

இரண்டும் அங்கிருந்த உணவை வயிறு முட்ட உண்டன. மகிழ்ச்சியுடன் ஏப்பம் விட்டுக் கொண்டே புறப்பட்டன. ஓடிய மூன்று ஓநாய்களும் வழியில் சந்தித்தன. ஆடுகளுக்குப் பயந்தா நாம் ஓடி வருவது? என்று கேட்டது ஒரு ஓநாய்.

நம்மை அவை ஏமாற்றி இருக்கின்றன. நாமும் ஏமாந்து விட்டோம் என்றது இன்னொரு ஓநாய். மூன்றாவது ஓநாய், நாம் உடனே அங்கு செல்வோம். அவற்றைக் கொன்று தின்போம். என்றது.

மூன்று ஓநாய்களும் அங்கு வந்தன. உணவை உண்டு விட்டு இரண்டு ஆடுகளும் ஓடி விட்டதை அறிந்தன.

ஏமாந்து போன ஓநாய்கள் பற்களை நறநறவென்று கடித்தன. பாவம் அவற்றால் வேறு என்ன செய்ய முடியும்?

## 12.2017 02 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1804- பாரிசில் நெப்போலியன் பொனபார்ட் பிரான்சின் பேரரசனாக முடிசூடினான்.
- 1805- நெப்போலியனின் தலைமையில் பிரெஞ்சுப் படைகள் ஓஸ்டர்லிட்ஸ் என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் ரஷ்ய-ஆஸ்திரியக் கூட்டுப் படைகளைத் தோற்கடித்தனர்.
- 1843 - யாழ்ப்பாணத்தில் கடும் சூறாவளி வீசியதில் பலத்த அழிவுகள் ஏற்பட்டன.
- 1956- பிடல் காஸ்ட்ரோ, சே குவேரா மற்றும் ஆதரவாளர்களும் கியூபா புரட்சியை முன்னெடுப்பதற்காக கிரான்மா என்ற படகில் கியூபாவை சென்றடைந்தனர்.
- 1961- பிடல் காஸ்ட்ரோ தன்னை ஒரு மார்க்சிச-லெனினிசவாதி எனவும் கியூபா கம்யூனிச நாடாக இருக்கும் எனவும் அறிவித்தார்.
- 1971- அபுதாபி, புஜெய்ரா, ஷார்ஜா, துபாய் மற்றும் உம் அல் குவைன் ஆகியன இணைக்கப்பட்டு ஐக்கிய அரபு அமீரகம் என்ற ஒரே நாடாக ஆக்கப்பட்டது.
- 1971- ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து ஐக்கிய அரபு அமீரகம் விடுதலை பெற்றது.
- 1976- பிடெல் காஸ்ட்ரோ கியூபாவின் அரசுத் தலைவரானார்.
- 1995- யாழ்ப்பாணக் குடாநாடு இலங்கை இராணுவத்திடம் வீழ்ச்சி அடைந்தது.
- 2002- இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் ஒஸ்லோவில் ஆரம்பமாயின.

பிறப்புகள்

- 1885- ஜார்ஜ் மினாட், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க மருத்துவர் (இ. 1950)
- 1910- ரா. வெங்கட்ராமன், இந்தியாவின் 8வது குடியரசுத் தலைவர்
- 1912- நாகிரெட்டி, திரைப்படத் தயாரிப்பாளர், பத்திரிகையாளர் (இ. 2004)
- 1933- கி. வீரமணி, திராவிடர் கழகத் தலைவர்
- 1937- மனோகர் ஜோஷி, மகாராட்டிராவின் 15வது முதலமைச்சர்
- 1960- சில்க் ஸ்மிதா, தென்னிந்திய நடிகை (இ. 1996)
- 1963- நெப்போலியன், தென்னிந்தியத் திரைப்பட நடிகர், அரசியல்வாதி
- 1978- நெல்லி ஃபர்டடோ, கனடியப் பாடகி, நடிகை
- 1981- பிரிட்னி ஸ்பியர்ஸ், அமெரிக்கப் பாடகி, நடிகை
- 1982- முருகதாசன், தீக்குளித்து இறந்த ஈழத் தமிழன். (இ. 2009)

இறப்புகள்

- 1547- எர்னான் கோட்டெஸ், எசுப்பானிய தேடலறிஞர் (பி. 1485)
- 2006- வீ. துருவசங்கரி, இலங்கைத் தமிழ் அறிவியலாளர் (பி. 1950)
- 2008- மு. கு. ஜகந்நாதராஜா, பன்மொழிப் புலவர் (பி. 1933)
- 2015- எம். ஏ. எம். ராமசாமி, இந்தியத் தொழிலதிபர், அரசியல்வாதி (பி. 1931)

சிறப்பு நாள்

- சர்வதேச அடிமை முறை ஒழிப்பு தினம்
- தேசிய நாள் (லாவோஸ்)
- ஐக்கிய அமீரக தேசிய தினம்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 120 | 160 | 180 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 60 | 60 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 700 | 600 | 800 | 800 | 700 |
| தக்காளி | 80 | 90 | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 40 | 60 | 50 |
| கோவா | 140 | 160 | 160 | 120 | 160 |
| கரட் | 180 | 250 | 240 | 200 | 200-320 |
| பூசணி | 60 | 60 | 80 | 60 | 80 |
| புடோல் | 100 | 100 | 100 | 120 | 120 |
| வாழைக்காய் | 100 | 70 | 120 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 400 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 160 | 200 | 200 |
| பாகற்காய் | 250 | 240 | 200 | 500 | 320 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 120 | 200 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 80 | 60 | 80 |
| பயற்றங்காய் | 250 | 240 | 200 | 300 | 320 |
| லீக்ஸ் | 150 | 240 | 240 | 200 | 240 |
| பீற்றூட் | 180 | 120 | 200 | 160 | 200 |
| கறிமிளகாய் | 300 | 320 | 300 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 450 | 160 | 300 | 500 | 320 |
| போஞ்சி | 200 | 140 | 160 | 200 | 200 |
| கத்தரித்தம்புள்ள | 140 | 120 | 140 | 140 | 100 |
| கீரை - 1பிடி | 80 | 50 | 60 | 60 | 60 |
| தேசிக்காய் | 80 | 80 | 80 | 70 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60-100 | 100 | 90 |
| இராசவள்ளி | — | — | 300 | — | — |
| வெங்காயப்பூ | 350 | — | 200 | — | — |
| முள்ளங்கி | 100 | 80 | 120 | 70 | 140 |
| பொன்னாங்காணி | 60 | 40 | 40 | 40 | 60 |
| வல்லாரை | 30 | 200 | 20 | 40 | 20 |
| ஈரப்பலா | 100 | 60 | 100 | 100 | 80 |

சுவட்டத்தில் கூடி நின்று கூடிப் பிதற்றலின்றி
நாட்டத்தில் கொள்ளாரடி – கிளியே
நாளில் மறப்பாரடி ~ மகாகவி பாரதியார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அரசியல் ஆசைக்காக போட்டியிடாதீர்கள்

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான அறிவிப்புக்கள் உறுதியாயிற்று.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு எதிராக நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு வாபஸ் பெறப்பட்டதையடுத்து 2018 பெப்ரவரி மாதத்தில் தேர்தல் நடைபெறுவது உறுதி எனலாம்.

தேர்தல்கள் உரிய காலத்தில் ஒழுங்காக நடத்தப்பட்டு சரியான மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டால்,

ஜனநாயகப் பண்புகள் மேலோங்கும் என்பதுடன் பிரதேச அபிவிருத்தி என்பதும் சாத்தியமாகும்.

இந்த வகையில் தேர்தல்களை காலம் தவறாமல் உரிய நேரத்தில் நடத்துவது அரசினதும் தேர்தல் திணைக்களத்தினதும் தலையாய கடமையாகும்.

இந்தக் கடமை செவ்வனே நடைபெறுகின்ற அதேநேரம் தேர்தலின்போது சரியானவர்களைத் தேர்ந்தெடுப்பதென்பது மக்களின் கடமையாகும்.

எனினும் இன்றைய சூழ்நிலையில் அரசியல் பற்றி அக்கறைப்பாடு பொதுமக்களிடம் மிகக் குறைவாகவே இருக்கிறது.

நாங்கள் தெரிவு செய்த பிரதிநிதிகள் எவ்வாறு நடந்து கொள்கின்றனர், அவர்களின் நேர்மைத்தனம் எவ்வாறு உள்ளது என்பது பற்றியெல்லாம் பொதுமக்கள் கருசனை காட்ட வேண்டும். அதுபற்றி தீர விசாரித்து அறிய வேண்டும்.

அப்போதுதான் தொடர்ந்துவரும் தேர்தலில் வாக்களிப்பது பற்றிய தீர்மானங்களை எடுக்க முடியும்.

ஆனால் நாம் அவ்வாறு எதுவும் செய்வதில்லை. எழுந்தமானமாக முன்பெடுத்த அதே தீர்மானத்தைத் தொடர்ந்தும் எடுப்பதுதான் எங்களின் நிலைமையாக உள்ளது.

மாற்றம் பற்றி நாம் ஒருபோதும் சிந்திக்கவில்லை. இந்த நிலைமை மாற வேண்டும் என்பது ஒரு விடயம்.

இது தவிர தேர்தல் என்றவுடன் வரிந்து கட்டிக்கொண்டு தேர்தலில் போட்டியிடுவதென்பது ஒருபெரும் தொற்றுநோயாகப் பரவுவதும் தேர்தல் காலங்களில் நடைபெறக்கூடிய விடயம்.

அரசியல் கட்சிகள் களமிறங்குவது, சுயேட்சைக் குழுக்கள் போட்டியிடுவது, அரசியல் கட்சிகள் கூட்டுச்சேர்ந்து தேர்தலை எதிர்கொள்வது என்ற பல முனைத் தாக்குதல்கள் தேர்தல் காலத்தில் நடைபெறும்.

இதனால் இலக்குத் தவறியதாக தேர்தல் முடிவுகள் அமைந்து விடும் துரதிர்ஷ்டம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற ஒரே விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக வலிந்து கட்டிக்கொண்டு தேர்தலில் இறங்குவது வாக்குகளைச் சிதறடிக்க வைக்கும் என்பதுடன் பொருத்தமற்றவர்கள் வெற்றி பெறுவதற்கும் அது வழிவகுத்து விடும்.

எனவே தேர்தலில் போட்டியிட விருப்பம் என்பதற்காக தேர்தலில் போட்டியிடுவதைத் தவிர்ப்பதுடன் சரியானவர்கள் தேர்தல் களத்தில் இறங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதே ஒரு சிறந்த சபை அமைவதற்கு வழிவகுக்கும்.

ஆகையால் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாதையில் நின்று போட்டியிடாமல் ஒரு தரமான சபையை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதே எங்கள் தமிழினத்துக்கு உதவுவதாக இருக்கும்.

# தேசிய மீலாத் விழா குறித்து மீளாய்வுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தேசிய மீலாத் விழா 2017 நிகழ்வுகள் குறித்த மீளாய்வுக் குழுக் கூட்டம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர என்.வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தேசிய மீலாத் விழா நிகழ்வுகள் ஒழுங்கமைப்புகள் குறித்து விரிவாகப் பேசப்பட்டதுடன் இறுதித் தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

மேலும் தேசிய மீலாத் விழா நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்கேற்பதனால் காலநிலை மாற்றங்களைக் கருத்தில் கொண்டும் நிகழ்வுகளை சிறப்பாக ஒழுங்கமைக்க அனைத்து யாழ்ப்பாண முஸ்லிம்களும் ஒத்துழைப்போடு செயற்பட வேண்டும் என முஸ்லிம் கலாசாரத் திணைகளப் பணிப்பாளர் அஷ்-ஷெய்க் அப்துல் மலிக் வேண்டுகோள் விடுத்தார்.

மேலும் ஏற்கெனவே முன்மொழியப்பட்டிருந்த செயற்குழுவிற்கு மேலதிகமாக பொறுப்புக்களை துரித கதியிலும் வினைத்திறனாகவும் செய்துமுடிக்கும் வகையில் ஒருசில மாற்றங்களும் இக்கூட்டத்தின்போது மேற்கொள்ளப்பட்டன.

இதில் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா மற்றும் கே.காதர் மஸ்தான், மாகாண சபை உறுப்பினர்களான இம்மானுவேல் ஆனோல்ட் அயூப் அஸ்மின், யாழ் கிளிநொச்சி உலமா சபை கிளைத் தலைவர் சுபியான் மௌலவி, முஸ்லிம் கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் அஷ்-ஷெய்க் அப்துல் மலிக் ஆகியோர் பங்கேற்றனர். (இ-4)

## ஜனாதிபதி நாடு திரும்பினார்

(கொழும்பு)

தென் கொரியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனா திபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் மீண்டும் நாடு திரும்பியுள்ளார்.

இலங்கைக்கும், தென் கொரியாவுக்கும் இடையிலான இராஜதந்திர தொடர்பின் 40 வருட பூர்த்தியை முன்னிட்டு தென் கொரிய ஜனாதிபதியின் விசேட அழைப்பின் பேரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந்நாட்டுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது அவருக்கு தென்கொரியாவின் கௌரவ பிரஜாவுரிமையும் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் தனது உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் இரவு ஹொங் கொங் வழியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடு திரும்பியுள்ளார்.

ஹொங்கொங்கிலிருந்து கதே பசுபிக் விமானம் மூலம் அவர் நேற்று முன்தினம் இரவு 11.15 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை ஜனாதிபதி மற்றும் அவரது குழுவினர் வந்தடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

## மின்சாரம் தாக்கி இளைஞன் பலி புசல்லாவையில் சம்பவம்

(கொழும்பு)

புசல்லாவை, ரொத்சைல்ட் தோட்டம் ஓ.ஆர்.சி. பிரிவில் மின்சாரம் தாக்கியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர் மழை காரணமாக மின்சார விநியோக கம்பி அறுந்து வீழ்ந்ததில் சிக்குண்டே களு எனப்படும் எஸ். அருணசாந்த என்ற 28 வயதுடைய இளைஞர் உயிரிழந்துள்ளார்.

மலையகத்தில் தொடர்ந்து நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பெருந்தோட்ட தொழிலாளர்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இதன் ஒரு கட்டமாகவே மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளது.

மரணம் தொடர்பான புலன் விசாரணைகளை கம்பளை விசேட பொலிஸ் பிரிவினரும் புசல்லாவை பிரேத பரிசோதகரும் மேற்கொண்ட நிலையில். சடலம் புசல்லாவை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ம)

## வயோதிபர் உயிரிழப்பு

கம்புறுபிட்டிய, பலோல்பிட்டிய பிரதேசத்தில் மண் மேடு சரிந்து விழுந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

குறித்த நபர் வசித்து வந்த வீட்டின் மீது மண் மேடு சரிந்து விழுந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

72 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்த பெண் சிகிச்சைக்காக மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 08 ஆக அதிகரித்துள்ளதென்று பொலிஸ் தலைமையகம் கூறியுள்ளது. (ம)

## காசாவை பத்தாவிடம் கையளிக்கும் ஹமாஸ் சமரசத் திட்டம் ஒத்திவைப்பு

பாலஸ்தீனின் காசா பகுதியை தனது போட்டி அமைப்பான பத்தாவுக்கு கையளிக்கும் ஹமாஸின் திட்டம் டிசம்பர் 10ஆம் திகதிக்கு 10 நாட்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

காசா அதிகாரத்தை பத்தா அமைப்பு நேற்று டிசம்பர் முதலாம் திகதி கையேற்க இருந்தபோதும், ஏற்பாடுகளை பூர்த்தி செய்வதற்காகவே இந்தத் திட்டம் ஒத்திவைக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

காசா நிர்வாகத்தை கையளிக்க ஹமாஸ் முன்வந்ததை அடுத்து பத்தா மற்றும் ஹமாஸுக்கு இடையில் எகிப்து தலைநகரில் கடந்த மாதம் சமரச உடன்படிக்கை கையெழுத்தானது.

இந்நிலையில் காசாவில் எகிப்து பாதுகாப்பு பிரிதிநிதிகளுடன் இரு தரப்பும் கடந்த செவ்வாய்க்கிழமை திடீர் சந்திப்பொன்றை நிகழ்த்தினர். இதனையடுத்தே காசாவில் ஆட்சியை கையளிப்பது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. வெற்றிகரமான சமரச செயற்பாடுகளுக்கு காலதாமதம் தேவைப்படுவதாக பத்தா பேச்சாளர் தெரிவித்தார்.

இந்த சமரச உடன்படிக்கை தொடர்பில் பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸின் பத்தா மற்றும் ஹமாஸுக்கு இடையில் தொடர்ந்து முரண்பாடுகள் காணப்படுகின்றன. குறிப்பாக காசாவில் உள்ள அரச ஊழியர்களின் எதிர்காலம் மற்றும் ஹமாஸ் ஆயுதப் பிரிவு குறித்து கேள்வி எழுப்பப்பட்டு வருகிறது.

ஏற்கெனவே மேற்குக் கரையை தளமாகக் கொண்ட சர்வதேச ஆதரவு பெற்ற பாலஸ்தீன அதிகார சபையிடம் காசாவின் பல அமைச்சு பொறுப்புகளை கையளித்த போதும் சில அமைச்சுக்களை ஹமாஸ் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

மூன்று அமைச்சுகளுக்கு பாலஸ்தீன அதிகார சபை ஊழியர்கள் நுழைவதை ஹமாஸ் தடுத்தது கடந்த புதன்கிழமை பரபரப்பை எற்படுத்தியது. சமரச உடன்படிக்கையின்படி நடந்துகொள்ளவில்லை என்று இரு தரப்பும் பரஸ்பரம் குற்றம்சாட்டின.

காசாவில் 2007ஆம் ஆண்டு ஹமாஸ் அமைப்பு ஆட்சிக்கு வந்தது தொடக்கம் ஹமாஸ் மற்றும் பத்தாவுக்கு இடையில் இதற்கு முன்னர் பல சமரச முயற்சிகள் இடம்பெற்றபோதும் அனைத்தும் தோல்வியில் முடிந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

JSAC

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்புச் செயற்பாடு
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

16
2017

ஊடகங்களே உங்கள் ஊதியத்திற்காய் பெண்களை ஊனமாக்காமல் ஊர் புகழ்ந்திட உத்தமமான கருத்துக்களால் ஊக்கம் கொடுத்திடுவீர் பெண்ணியம் வாழ

யாழ்.சமூக செயற்பாட்டு மையம்

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- அன்பு, இரக்கம் இவற்றை செயல்படுத்த வாய்ப்பு அளித்த இறைவனை துதிப்பதுடன், உதவி செய்தவர்களை இறைவனாக எண்ண வேண்டும்.
- இரக்கமுள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக்கூடிய கைகள் ஆகியவை நமக்குத் தேவை.
- மனிதப்பிறவி ஞானமும் பக்தியும் அடைவதற்காக உருவாக்கப்பட்டுள்ளதால், ஆன்மிக பலத்தால் மட்டுமே இந்தியா எழுச்சி பெறப்போகிறது.
- உடல் பலவீனத்தையோ, மன பலவீனத்தையோ உண்டாக்கும் எதையும் அணுகாமல், தைரியத்துடன் வீரனாகத் திகழ வேண்டும்.
- இந்தியாவில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமானால் முதலில் ஆன்மிக எழுச்சி உண்டாக வேண்டும். அரசியல் கருத்துக்களை பரப்புவதற்கு முன்னால், நாட்டை ஆன்மிக வெள்ளத்தில் மூழ்கடிக்க வேண்டும்.
- தன்னலம் இல்லாமல், நிறைந்த அன்புடன் பழகுபவர்களே இப்போது உலகத்திற்குத் தேவைப்படுகிறார்கள்.
- பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால் அவை வட்டியும், முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வரும்.

# ஆட்டமிழப்பு கொடுக்காதது ஏன் என்று புரியவில்லை

## அஜ்மலின் ஆதங்கம்



பாகிஸ்தான் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் சயீத் அஜ்மல் 2011 ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டியில் சச்சினுக்கு அவுட் தராதது இன்றளவும் புரியாத புதிராக உள்ளது என்று கூறியுள்ளார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் மோதிய ஆட்டத்தில் இந்திய அணி அபார வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. அப்போட்டியில் இந்திய அணியின் நட்சத்திர வீரரான சச்சின் டெண்டுல்கர் 4 முறை விக்கெட்டில் இருந்து தப்பி 85 ஓட்டங்கள் குவித்தார்.


இப்போட்டியில் சச்சின், பாகிஸ்தான் வீரர் அஜ்மல் வீசிய ஓவரின் போது எல்.பி.டபிள்யூ ஆனார். ஆனால் அது டிவி ரீப்ளேயில் அவுட் இல்லை என்று கூறப்பட்டது.

இந்நிலையில் பாகிஸ்தான் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரான சயீத் அஜ்மல், 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதியில் சச்சின் டெண்டுல்கருக்கு எல்.பி. கொடுக்காதது இன்றளவும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக கூறியுள்ளார்.

அவர் கூறுகையில், சச்சின் ஸ்டம்புக்கு முன்னால் கால் காப்பில் வாங்கினார் என்பதில் எனக்கு ஐயமில்லை. ஆனால் எப்படி அவுட் கொடுக்காமல் விடப்பட்டது.

ரெபரல் செய்யும் போது 100 சதவீதம் சச்சின் அவுட் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை. சச்சின் போன்ற வீரர்களுக்கு பந்து வீசுவது நம் உடல், மனம், திறமைக்கு விடுக்கப்படும் சவால். ஆகவே அவர் அவுட் எனும் போது நொட் அவுட் கொடுத்தது இன்னமும் கூட எனக்கு புதிராகவே உள்ளது என்று கூறியுள்ளார். (க)

# அன்புள்ள அப்பா!




இலங்கை அணியின் முன்னாள் ஜாம்பவான் மஹேல ஜெயவர்த்தன மகளுடன் விளையாடும் புகைப்படம் வைரலாகியுள்ளது.

வங்கதேச பிரீமியர் தொடரில் பங்கேற்கும் Khulna Titans அணிக்கு தலைமை பயிற்சியாளராக இருக்கிறார் ஜெயவர்த்தன.

அங்கு வீரர்களுக்கு பயிற்சியளித்து வரும் நிலையில், மகள் Sansa வுடன் விளையாடும் புகைப்படத்தை டுவிட்டரில் பகிர்ந்துள்ளார். (க)

# ஹர்திக் பாண்டியா தவிர்க்க முடியாத வீரர்



கிரிக்கெட்டில் ஹோலியை போல் ஹர்திக் பாண்டியா சிறப்பாக விளையாடி அதி உயரத்திற்கு சென்றுள்ளார். இப்படி பல கட்டங்களை கடந்து தற்போது அதிக சம்பளம் பெறும் விளையாட்டு வீரர்களின் வரிசையில் விராட் ஹோலி இடம்பெற்றுள்ளார்.

அதோடு உலகளவில் பிரபலமான பல்வேறு பத்திரிக்கை, வார இதழ்களின் அட்டைப் படங்களில் ஹோலியின் புகைப்படங்கள் இடம்பெற்று வருகின்றன.

இப்படி விராட் ஹோலி வரிசையில் இணைந்துள்ளவர் தான் ஹர்திக் பாண்டியா.

2015 ஐ.பி.எல். போட்டியில் மும்பை இண்டியன்ஸ் அணியில் இடம்பெற்ற இரண்டே வருடத்தில் இந்திய அணிக்கு தகுதி பெற்றார் ஹர்திக் பாண்டியா. அப்படி அவரின் அதிரடி கைகொடுக்க தற்போது டெஸ்ட், ஒருநாள், இருபது-20 போட்டிகளில் தவிர்க்க முடியாத வீரராக மாறியுள்ளார்.

இந்நிலையில் ஹோலியை போல பாண்டியாவும் பல பிரபல ஸ்போர்ட்ஸ் இதழ்களின் அட்டை படத்தில் இடம்பெற்றுள்ளார். (க)

# பதிலடி கொடுப்பார்களா? பணிந்து போவார்களா?

## ஆஷஸ் இரண்டாவது போட்டி இன்று ஆரம்பம்



அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வரும் ஜோரூட் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது.

பிரிஸ் பேனில் நடந்த முதலாவது டெஸ்டில் அவுஸ்திரேலியா 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இந்த நிலையில் இவ்விரு அணிகள் இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி அடிலெய்டில் இன்று சனிக்கிழமை தொடங்குகிறது. இந்த டெஸ்டில் இன்னொரு சிறப்பு அம்சம் என்னவென்றால், இது பகல்-இரவு மோதலாகும். இதற்காக பிரத்தியேகமான இளஞ்சிவப்பு நிற பந்து (பிங்க்) பயன்படுத்தப்படும். ஆஷஸ் வரலாற்றில் மின்னொளியின் கீழ் நடத்தப்படும் முதல் டெஸ்ட் இது தான்.

அடிலெய்டு ஆடுகளம் வேகப் பந்து வீச்சுக்கு ஒத்துழைக்கும், நன்கு ஸ்விங் ஆகும் என்று அவுஸ்திரேலிய பயிற்சியாளர் டேரன் லீமான் கூறியுள்ளார்.

அதனால் மிட்செல் ஸ்டார்க், பேட் கம்மின்ஸ், ஹேசில்வுட் ஆகியோரின் தாக்குதல் இன்னும் தீவிரமாக இருக்கும்.

அவுஸ்திரேலிய அணிக்கு இளஞ்சிவப்பு நிற பந்தில் விளையாடிய அனுபவம் அதிகம் உண்டு. அந்த அணி இதுவரை மூன்று பகல்-இரவு டெஸ்டில் விளையாடி அனைத்திலும் வெற்றி கண்டிருக்கிறது. இந்த சாதனைப் பயணத்தை தொடர்வதில் அந்த அணி வீரர்கள் ஆர்வமாக இருக்கிறார்கள்.

முதலாவது டெஸ்டில் மோசமாக தோற்றதால் விமர்சனத்திற்குள்ளான இங்கிலாந்து அணியினர் சரிவில் இருந்து எழுச்சி பெறும் முனைப்புடன் இருக்கிறார்கள். வேகப்பந்து வீச்சாளர்கள் ஜேம்ஸ் ஆண்டர்சன், ஜாக்பால், கிறிஸ் வோக்ஸ், ஸ்டூவர்ட் பிராட் ஆகியோர் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறார்கள் என்பதை பொறுத்தே இங்கிலாந்தின் வெற்றி வாய்ப்பு அமையும். பதிலடி கொடுப்பார்களா? அல்லது பணிந்து போவார்களா? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

அடிலெய்டு மைதானத்தில் அவுஸ்திரேலிய அணி 2010 ஆம் ஆண்டுக்கு பிறகு தோற்றதில்லை. இங்கு அந்த அணி இதுவரை 75 டெஸ்டுகளில் விளையாடி அதில் 39 இல் வெற்றியும், 17இல் தோல்வியும், 19இல் சமநிலையும் கண்டுள்ளது.

இங்கிலாந்து இங்கு அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 31 டெஸ்டில் பங்கேற்று அதில் 9இல் வெற்றியும், 17இல் தோல்வியும், 5இல் சமநிலையும் சந்தித்துள்ளது. (க)

# டெஸ்டே பெஸ்ட் சொல்கிறார் ஹோலி



உலக அளவில் தலைசிறந்து விளங்கிட இளைஞர்கள் டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் விராட் ஹோலி தெரிவித்துள்ளார்.

'டெஸ்ட் கிரிக்கெட் தான் நம்மை உலகை அளவில் தலை சிறந்து நிக்க வைக்கும் என்றும் இளைஞர்கள் அனைவருக்கும் இதையே தான் அறிவுறுத்துவதாகவும் கூறியுள்ளார்.

டில்லி கிரிக்கெட்டின் இமயங்களான பிஷான் சிங் பேடி மற்றும் மொஹிந்தர் அமர்நாத்தின் பெயர்களால் அமைக்கப்பட்டிருந்த மேடையில் பேசிய ஹோலி, U14 மற்றும் U16 போட்டிகளில் டில்லி சார்பாக நான் விளையாடியபோது பேடி எனக்கு சிறந்த முறையில் பயிற்சி வழங்கினார். தற்போது அதுவே என் வாழ்க்கையின் அங்கமானது எனக் கூறினார். (க)

## மருத்துவ சேவை...

இயக்குநரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் பிரசாரச் செயலாளருமான கணேஷ் வேலாயுதம், வல்வை நகரசபையின் முன்னாள் பிரதி தவிசாளர் சதீஷ் ஆகியோர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சென்று பார்வையிட்டனர். இதன்போது அரசியல் கைதிகள் தமது உடல் நிலை தேறி வருவதாக குறிப்பிட்டனர்.

இந்நிலையில் கடந்த புதன்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வவுனியாவிலேயே தொடர்ந்து வழக்கு விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென்ற ரிப் மனு மீதான விசாரணை குறித்து கணேஷ் வேலாயுதம் அரசியல்கைதிகளிடம் தெரிவிக்கையில், இந்த மனு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது ஏற்கெனவே வவுனியாவில் சாட்சியமளிக்க ஒருவர் சம்மதித்த நிலையில் மற்றைய சாட்சியாளரை தேடி வருவதாக சட்டமா அதிபர் தரப்பினர் தெரிவித்தனர். அத்துடன் தமக்கு மேலும் இருவார கால அவகாசம் தேவை எனவும் குறிப்பிட்டனர்.

இந்நிலையில் வழக்கு விசாரணை எதிர்வரும் 12ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது. இந்நிலையில் சட்டமா அதிபர் திணைக்கள சட்டத்தரணி எம்மிடம் விசாரணை முடியும்வரை அநுராதபுரத்தில் விசாரணை இடம் பெறமாட்டாதென தெரிவித்தார் என்றார். அத்துடன் அரசியல் கைதிகளின் தேவைகள் குறித்து கணேஷ் வேலாயுதம் கேட்டறிந்து கொண்டார். இதேவேளை வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்தாலேயே மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் அரசியல் கைதிகளுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

## உயிரிழந்தோர்...

இடர் முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 11ஆக அதிகரித்துள்ளது. 30 பேர் காயமடைந்துள்ளதுடன் 8 பேர் காணாமற்போயுள்ளனர் என இடர் முகாமைத்துவ நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

430 வீடுகள் முற்றாகவும், 11,597 வீடுகள் பகுதி அளவும் சேதமடைந்துள்ளன. சிறு மற்றும் நடுத்தர வர்த்தக நிலையங்கள் 82 இந்த சீரற்ற வானிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளன.

901 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 279 பேர் 28 தற்காலிக கூடாரங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தென்மேற்கு பகுதியில் நிலைகொண்ட தாழ்வமுத்தம் காரணமாக நேற்று முன்தினம் இரவு கடும் காற்றுடன் கடும் மழை பெய்ததால் இந்த பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்தன.

இந்த தாழ்வமுத்தம் அரபிக் கடலை நோக்கி நகர்ந்துள்ளதுடன், தற்போது அது சூறாவளியாக மாற்றமடைந்துள்ளது.

இலங்கையிலிருந்து சுமார் 600 கிலோ மீட்டர் தொலைவில் காணப்படும் இந்த சூறாவளியால், நாட்டில் பல பகுதிகளில் கனமழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களத்தின் வானிலை அதிகாரி எஸ்.சூரியகுமாரன் தெரிவித்தார்.

மேல், சப்ரகமுவ, தென், ஊவா, மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் மழையுடன் கூடிய வானிலை நிலவும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, பதுளை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மண்சரிவு அபாய எச்சரிக்கையை விடுத்துள்ளது.

மழை பெய்யும் பகுதிகளில் உள்ள மக்கள் மிகுந்த கவனமுடன் செயற்படுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ம)

## யாழில் இடம்பெற்ற...

வேறு பிரதேசங்களில் கடந்த மாதத்தில் இருந்து தொடர்ச்சியான வாள்வெட்டு சம்பவங்கள் இடம்பெற்று வந்தன.

யாழ்ப்பாணம், கொக்குவில், மானிப்பாய், கோண்டாவில், சுதுமலை, சங்கானை போன்ற பகுதிகளில் வாள்வெட்டு சம்பவங்கள் இடம்பெற்று பலர் படுகாயம் அடைந்ததுடன் பல கோடி சொத்துக்களும் சேதமாக்கப்பட்டன.

இந்த நிலையில் பொலிஸார் குவிக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அதனடிப்படையில் யாழ்ப்பாணம் பொலிஸ பிரிவில் 9 சந்தேக நபர்களும், கோப்பாய் பொலிஸ் பிரிவில் 6 சந்தேக நபர்களும், மானிப்பாய் பொலிஸ் பிரிவில் 4 சந்தேக நபர்களும், அந்தந்த பொலிஸ் பிரிவால் கடந்த மாதம் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் யாழ்ப்பாண பொலிஸ் பிரிவில் கைது செய்யப்பட்ட 9 பேரில் 3 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது வாள்வெட்டு சம்பவங்கள் குறைவடைந்து காணப்பட்ட போதிலும், பொலிஸார் அதிகளவில் குவிக்கப்பட்டு தேடுதல் நடத்திய காரணத்தால் தான் இவ்வாறான சம்பவங்கள் குறைந்துள்ளது என்றும், பொலிஸாரின் கண்காணிப்பு குறைவடையும் நிலையில் மீண்டும் இந்த சம்பவங்கள் இடம்பெறலாம் என மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ம)

## வவு.வில் வன்பொருள்...

வண்டியில் தண்ணீர் இல்லை என தெரிவித்து அந்த வண்டி திரும்பிச் சென்றுள்ளது.

எனினும் சுமார் 2 மணித்தியாலத்திற்கு மேலாக வன்பொருள் அங்காடி தொடர்ந்து எரிந்து சாம்பலாகியது.

தீயணைப்பு வாகனம், பொலிஸாரின் தண்ணீர் பவுசர் என்பன சம்பவ இடத்திற்கு வந்த போதும் அவர்களின் மந்தமான செயற்பாட்டால் தீயை கட்டுப்படுத்த முடியவில்ல என தெரிவிக்கப்பட்டது.

இந்த தீ விபத்தினால் வவுனியா - மன்னார் பிரதான வீதிகள் மூடப்பட்டிருந்ததுடன், பாதுகாப்பு பணிகளுக்காக பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை, வவுனியாவில் உள்ள விமானப் படையிடம் தீ அணைப்பு வாகனம் இருந்த போதும் சம்பவ இடத்திற்கு வருகை தரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-281)

## பேருந்தை திருடிச் சென்ற...

இடையில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வழமை போன்று சேவையில் ஈடுபட்டு யாழ்ப்பாணத்திற்கு பயணிகளை ஏற்றி வந்திருந்தது.

பயணிகளை யாழ்.நகரில் இறக்கிவிட்டு, நகரை அண்டிய பண்ணைப் பகுதியில் பேருந்தை நிறுத்தி விட்டு சாரதியும் நடத்துநரும் அருகில் இருந்த உணவகத்தில் உணவருந்த சென்றுள்ளனர். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி யாழ்.பொம்மைவெளி பகுதியை சேர்ந்த இளைஞர் ஒருவர் பேருந்தை திறப்பு இன்றி இயக்கி அதனைக் களவாடிச் சென்றுள்ளார்.

சிறிது தூரம் சென்ற போது பேருந்து சகதிக்குள் அகப்பட்டு தொடர்ந்து செல்ல முடியாது மாட்டிக்கொண்டது. அந்நேரம் அந்த வழியாக வந்த வேறு தனியார் பேருந்து சாரதிகள் இருவர், குறித்த பேருந்தினை அவதானித்து பேருந்தின் சாரதி வேறு ஒருவராக இருப்பதனையும் நடத்துநரை காணாததாலும் சந்தேகம் கொண்டு பேருந்தின் சாரதிக்கு தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டனர்.

அந்நேரமே சாரதிக்கும் நடத்துநருக்கும் பேருந்து திருடிச் செல்லப்பட்டமை தெரிய வந்துள்ளது. உடனே சம்பவ இடத்திற்கு விரைந்து பேருந்துத் திருடனைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

யாழ்.நகர் பகுதியில் மோட்டார் சைக்கிள் திருட்டுக்கள் தொடர்ந்து இடம்பெற்று வரும் நிலையில் தற்போது பேருந்து திருட்டு இடம்பெற்றமை அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## யாழுக்கு வந்த...

தென்பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் வந்துள்ள பேருந்து ஒன்றில் இது சிங்களவர்களுக்கான ஒரே நாடு என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற சர்வதேச நடனத் திருவிழாவில் கலந்து கொள்வதற்காக தென்பகுதியில் இருந்து வந்த பேருந்தின் பின்னாலேயே மேற்படி வாசகம் பொறிக்கப்ப

### பெண்ணுக்கு தொந்தரவு கொடுத்த

# இராணுவ சிப்பாய் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

பயணிகள் பேருந்தில் குடும்ப பெண்ணொருவருடன் தகாத முறையில் நடந்து கொண்ட இராணுவ சிப்பாயை முழங்காவில் பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்த சம்பவம் நேற்று பிற்பகல் 6.30 மணியளவில நடைபெற்றுள்ளது.

மேற்படி குடும்ப பெண் வவுனியாவிலிருந்து முழங்காவிலில் அமைந்துள்ள தனது வீட்டுக்கு போக்குவரத்து பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்துள்ளார். இந்த பஸ்ஸில் முழங்காவில் கஜபாகு ரெஜிமெண்ட் இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ சிப்பாய் ஒருவரும் இருந்துள்ளார்.

இதன்போது குறித்த இராணுவ சிப்பாய் மேற்படி பெண்ணுக்கு பாலியல் ரீதியான தொந்தரவு செய்துள்ளார். இதனையடுத்து குறித்த பெண் முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டையடுத்து முழங்காவில் பொலிஸார் குறித்த இராணுவ சிப்பாயை கைது செய்துள்ளனர். (ம-4)

# யாழ்.கோட்டை பகுதியில் 103.0 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை 8.30 மணி தொடக்கம் நேற்று காலை 8.30 மணி வரை அதி கூடிய மழை வீழ்ச்சியாக யாழ்ப்பாணம் கோட்டை பகுதியில் 103.0 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் ஆக குறைந்த மழை வீழ்ச்சியாக நெடுந்தீவு பகுதியில் 0 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது என திருநெல்வேலி வானிலை அவதானிப்பு நிலைய பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

அதே போன்று சாவகச்சேரி பகுதியில் 89.2 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும் நயினாதீவில் 63.0 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், யாழ்ப்பாணம் கச்சேரி பகுதியில் 70.0 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும் திருநெல்வேலி பகுதியில் 55.6 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் நேற்று முகில் கூட்டங்களுடன் காணப்பட்ட மந்தமான காலநிலை இன்றும் காணப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக வரதராஜபெருமாள்

### சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

வடகிழக்கு இணைந்த மாகாண சபையின் முதலாவது முதலமைச்சர் வரதராஜ பெருமாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணையவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈழுமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எப்) ஆரம்பகால தலைவர்களில் ஒருவரான வரதராஜபெருமாள் தற்போதும் ஈ.பி.ஆர்.எல்.எப் (பத்மநாபா) அணியின் உறுப்பினராக இருப்பதுடன் அரசியலில் ஈடுபடுவதில்லை.

வரதராஜபெருமாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட உள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 1988ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது மாகாணசபைத் தேர்தலில் வரதராஜ பெருமாள் இணைந்த வடகிழக்கு மாகாணத்தின் முதலாவது முதலமைச்சராக பதவியேற்றார்.

எவ்வாறாயினும் கடந்த 1990ஆம் ஆண்டு வடகிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டதை அடுத்து அவர் இந்தியாவுக்கு சென்று இந்திய அரசின் அனுசரணையோடு அங்கு தங்கியிருந்தார்.

போருக்கு பின்னர் நாடு திரும்பிய பெருமாள், ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் பத்மநாபா அணியில் இணைந்து செயற்பட்டார்.

கடந்த 1990ஆம் ஆண்டு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்) இரண்டாக பிளவுபட்டது.

அப்போது கட்சியின் செயலாளராக கடமையாற்றிய சுரேஷ் பிரேமச்சந்திரன் அணியினருக்கு கட்சியின் உத்தியோகபூர்வ பெயர் உட்பட சட்டரீதியான உரிமைகள் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## தென்னையில் ஏறியவர் வழுக்கி விழுந்து படுகாயமடைந்துள்ளார்

மழையில் நனைந்திருந்த தென்னை மரத்தில் தேங்காய் பிடுங்க ஏறிய குடும்பஸ்தர் மரத்திலிருந்து தவறி வீழ்ந்து காயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று மிருசுவில் தவ சிக்குளம் பகுதியில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த இரத்தினம் ஜெயசீலன் வயது (36) என்பவரே படுகாயமடைந்துள்ளார். (ம)

ட்டுள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சியில் தற்போது இனவாதம் களையப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுவரும் நிலையில், இவ்வாறான செயற்பாடுகள் மக்கள் மத்தியில் பல விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## 40 உள்ளூராட்சி...

மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆறு வாக்காளர்கள் மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், அந்த அரசிதழை நடைமுறைப்படுத்த இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்தது.

இதனால், 93 உள்ளூராட்சி சபைகள் தவிர்ந்த ஏனைய சபைகளுக்கு தேர்தல் அறிவிப்பை வெளியிட முடியாத நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் மனுதாரர்களுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து, மனுக்களை விலக்கிக் கொள்ள இணங்கினர். நேற்று முன்தினம் இந்த மனுக்கள் விலக்கிக் கொள்ளப்பட்டதை அடுத்து, அரசிதழ் மீதான தடை நீக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, ஏற்கெனவே தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்ட 93 சபைகள் உள்ளிட்ட 301 உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் அறிவிப்பை வெளியிடக் கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது.

எனினும், அரசிதழில் ஏற்பட்ட அச்சுப் பிழைகளால் 40 உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் அறிவிப்பை வெளியிட முடியாதுள்ளது.

திருத்தப்பட்ட அரசிதழ் வெளியிடப்பட்ட பின்னரே இந்த சபைகளுக்கான தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட முடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)

## தீக்காயங்களுக்கு...

குடும்பஸ்தரே தீக்காயங்களுக்கு உள்ளாகி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பாக பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (ம-60)

# மரண அறிவித்தல்



## சிங்காரவேலு யோகநாதன்

**(உரிமையாளர்- Ogesta), முன்னாள் உரிமையாளர் - மூர்த்தி உணவகம்)**

வடலியடைப்பை பிறப்பிடமாகவும், கில்னர் லேன் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிங்காரவேலு யோகநாதன் (யோகண்ண) நேற்று (01. 12. 2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிங்காரவேலு - காமாட்சி தம்பதியினரின் அன்பு மகனும், முருகையா - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், இராஜராஜேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், றஜீகன் அவர்களின் அன்புத் தந்தையும், ஜெயமணி, நாகேஸ்வரி, நவநீதரட்ணம் (ஜேர்மன்), காலஞ்சென்ற பாலசுப்ரமணியம் மற்றும் ஆனந்தராசா (கனடா), காலஞ்சென்ற கலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், தங்கவேல், பாலகிருஷ்ணன், அமரர் பரமசிவம், விஜயவனிதா, ஜெயந்தி (கனடா), காளிதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிருபாகரன், நகுலேஸ்வரன், மகேஸ்வரன், கெங்காதரன் (ஜேர்மன்), விஜயலஷ்சுமி, பரந்தாமன் (கனடா), அனந்தலஷ்சுமி, இராசலஷ்சுமி (கனடா) ஆகியோரின் மைத்துனரும், விமலாராணி, புஸ்பவதி, தேவிகாராணி (ஜேர்மன்), அமரர் சிவானந்தன், தனபாலினி (கனடா), மனோகரன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும், யோகேந்திரா, கஜேந்திரா, ஜெனனி, ரஞ்சித், மிதிலா, சதிஸன், பிரசாத், காயத்திரி, கஸ்தூரி, கார்த்திகன், சுபாங்கி, அனுராதா, உமாசுதன், பிரதாபன், துவாரகன், மாயவன், பிரசன்னா, பைரவி, ஆகியோரின் மாமனாரும், சிறிலதன், வினோஜா, மேனகா, கார்த்திகேயன், துஷ்யந்தி, அமலன் ஆகியோரின் சித்தப்பாவும், விசாகன், முகிசன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.12.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

185/1, கில்னர் லேன்,
யாழ்ப்பாணம். (1537)

தகவல் : குடும்பத்தினர்
தொ.பே : 021 221 6742


ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org



(1495)
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்



இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்.



றோயல் குளுக்கோஸ்
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
உற்சாகம்! புத்துணர்ச்சி!! ஆரோக்கியம்!!!
Colombo-13
PACKED BY: ROYAL Industries
T.P:- 077 727 7670
அனைத்துப் பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.



ஏக விநியோகஸ்தர்கள்
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T:P - 021 222 2567


**பெப்...**

வெளியாகியிருந்து. இந்நிலையில் ஏனைய 208 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்கான வேட்புமனு கோரலை எதிர்வரும் 4-ம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிக்கவுள்ளது என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)


வீடு விற்பனை
யாழ். சுண்டுக்குளி சுவாட்ஸ் வீதியில் வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
0767049048
(1533)



விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்து பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

(C-443)



UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
- யாழ்ப்பாணம் - கிளிநொச்சி - நெல்லியடி - பருத்தித்துறை - வல்வெட்டித்துறை



அண்ணா
வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
EXPRESS Courier Services
(C-541)
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | ஊர்காவத்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா | திருகோணமலை


# அந்தியேட்டிக் கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்



(கி-562)

அமரர்

## தைலான் காமராஜ்

(ஐங்கையன் சுவையூற்று உரிமையாளர், முறிகண்டீஸ்வர ஆலய தர்மகர்த்தாவும் தலைவரும்)

**தோற்றம்: 15.12.1966 - மறைவு: 06.09.2017**

கடந்த 06.09.2017 புதன்கிழமை காலமான எங்கள் அன்புத் தெய்வம் தைலான் காமராஜ் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (02.12.2017) சனிக்கிழமை காலை 7 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

எமது குடும்ப தீபம் அணைந்த செய்தி கேட்டு உடனே ஓடி வந்து எமக்கு பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டோர், உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத்தொடர்பு மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல. 26, கனகாம்பிகைகுளம்,
கிளிநொச்சி.

இங்ஙனம் : குடும்பத்தினர்
தொ.பே: 0770569704

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.12.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.